வார்த்தையினால் விடுதலை

பாகம்

5

கிறிஸ்துவுக்கான சகோதரர்
சாம் ஜோசப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

வார்த்தையினால் விடுதலை

பாகம் - 5

அறிவிக்கப்பட்டு அறிவிப்பவர்

கிறிஸ்துவுக்கான சகோதரர்

சாம் ஜோசப்

பிரதிகள் தேவைப்படுவோர் கீழ்காணும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இயேசு தோட்டம்,
கப்பலூர், மதுரை,
தென் இந்தியா,
பின்கோடு - 625008
போன் : 04549 - 208444

முதல் பதிப்பு : 2011

உள்ளே....

		பக்கம்
1.	காட்டுமிருகங்கள்	1
2.	வார்த்தை—வாய்மொழி/எழுத்து	13
3.	இருள்	47
4.	முறைமை	71
5.	நிர்வாணம்	77
6.	வித்தும் நிலமும்	95
7.	ஞானம்	112

1. காட்டு மிருகங்கள்

"...மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின; என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற் போனார்கள், மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள்....." (எசே. 34 : 8).

கர்த்தர் தன் மந்தையின் மேய்ப்பர்களை நோக்கி, மேய்ப்பன் இல்லாததினால் தன் ஆடுகள் சூறையாகி, காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயிற்றென்றுச் சொன்னார். கர்த்தரின் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கு இரையாகிப் போனது என்று கர்த்தர் தன் மேய்ப்பர்களை நோக்கிச் சொன்ன வார்த்தைக்குரிய பொருளினை, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின் மூலம் வார்த்தையின்படி வெளிக் கொணரப்பட்டக் காரியங்கள் தங்கள் முன் செய்தியாகக் கொடுக்கப்படுகிறது.

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக ! ஆமென்!!

மந்தைகள் யார் என்றும், மேய்ப்பன் யார் என்றும், காட்டு மிருகங்கள் எவைகள் என்றும் வார்த்தையின் படி காண்போமாக :–

"நானே நல்ல மேய்ப்பன்" என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார் (யோவா. 10 : 11). அவரே மேய்ப்பனாக இருக்கிறார்.

"என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்" என்று கர்த்தர் உரைக்கிறார் (எசே. 34 : 31).

கர்த்தரின் மந்தை, கர்த்தரைத் தெய்வமாகக் கொண்ட ஜாதி. அந்த ஜாதி இஸ்ரவேலர்கள். தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் இஸ்ரவேல் புத்திரரிடத்திற்குக் கர்த்தரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி (எசே. 2 : 3,5). கர்த்தரின் ஆடுகள் இஸ்ரவேல் புத்திரர்.

மேய்ப்பர்கள்– இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தக் கர்த்தர் நியமித்தவர்கள். கர்த்தர் மோசேயை, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்துக்கு வழிநடத்தத் தெரிந்து கொண்டார். மோசே மேய்ப்பன். பழைய ஏற்பாட்டின் காலத்தில் மேய்ப்பர்கள், ஆசாரிய ஊழியம் செய்த லேவி கோத்திரத்தானாகிய ஆரோனும் அவன் குமாரரும். ஆரோனுடைய சந்ததியார்.

கர்த்தரின் மந்தையை இரையாக்கிக் கொண்டிருக்கும் காட்டு மிருகம் எது?

"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரம் உள்ளதாய் இருந்தது...." (ஆதி. 3 : 1). சர்ப்பம் அந்த காட்டு மிருகங்களில் ஒன்றாக இருந்தது. காட்டு மிருகங்கள்/ஜீவன்கள் நிறைய இருந்தது. அந்தக் காட்டு மிருகங்களுக்குள் சர்ப்பமானது தந்திரமுள்ளதாய் இருந்தது. இந்தச் சர்ப்பமானது தன்னுடைய வஞ்சகத்தினால் ஏவாளை ஏமாற்றினான் (2கொரி. 11 : 3). சர்ப்பத்தின் தந்திரம் வஞ்சிக்கிறதாகக் காணப்பட்டது.

அன்று சர்ப்பமாய் ஏதேன் தோட்டத்தில் இருந்த பாம்பானது சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டதாய் மண்ணுக்கு அனுப்பப்பட்டது (ஆதி. 3 : 14). அன்று சர்ப்பமாகக் கிரியை செய்த பிசாசு இன்று வலுசர்ப்பமாய்க் கிரியை செய்து கொண்டிருக்கிறான். காட்டு மிருகங்களுக்குள் தந்திரமாய் இருந்தச் சர்ப்பத்துக்கு இன்று வலுசர்ப்பம் என்ற நாமம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வலுசர்ப்பமானது எல்லாக் காட்டு மிருகங்களிலும் இன்று தந்திரமுள்ளதாய் இருக்கிறது.

இந்த வலுசர்ப்பமானது காப்பாற்றுகிறதற்காக அபிசேகம் பண்ணப்பட்ட லூசிபர் (எசே. 28 : 14). இவன் உன்னதமான தேவனுக்குத் தானும் ஒப்பாவேன் என்று சொல்லித் தன் மேட்டிமையினால் தன்னைத் தேவன் என்று உயர்த்தினவன் (ஏசா. 14 : 13,14). இந்த வலுசர்ப்பமானவன் தள்ளப்பட்ட ஆவிகளுக்குத் தலைவன். இவன் நட்சத்திரங்களாய் ஒளி விடும் தேவதூதர்களில் மூன்றில் ஒரு பங்கினரைத் தன்பக்கம் இழுத்து விழச் செய்தவன் (வெளி. 12 : 4). காட்டுமிருகங்கள் யாவற்றுக்கும் தலைவன் இந்த வலுசர்ப்பம். இவன் பிசாசென்றும், சாத்தான் என்றும், சர்ப்பம் என்றும், வலுசர்ப்பம் என்றும் அழைக்கப்படுபவன் (வெளி. 20 : 2).

இந்தச் சர்ப்பமானவன் எல்லாக் காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் தந்திரமுள்ளவனாகவும், வஞ்சிக்கிறவனாகவும் இருந்தபடியால் அவன் காட்டு மிருகங்களுக்கு எல்லாம் தலைவன் ஆனான் (ஆதி. 3 : 1,13). கர்த்தரின் மந்தையின் ஆடுகள் சூறையாக்கப்பட்டு இந்த சர்ப்பத்திற்கு இரையாகிறது எனக் கர்த்தர் உரைத்தார். கர்த்தரின்

மந்தையாகிய கர்த்தரின் ஜனத்தை காட்டுமிருகங்களாகிய தள்ளப்பட்ட ஆவிகளிடத்தில் மேய்ப்பர்களாலே ஒப்புக் கொடுக்கப்பட்டது.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஸ்தலமாகிய கானான் தேசத்தில் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகள் இருந்தார்கள் (உபா. 7 : 1). அந்த ஜாதிகளை நீ ஒருமிக்க நிர்மூலமாக்க வேண்டாம் என்றும், நிர்மூலமாக்கினால் காட்டுமிருகங்கள் உன்னிடத்தில் பெருகிப் போகும் என்றும் கர்த்தர் தமது ஜனமாகிய இஸ்ரவேலரை நோக்கிக் கூறினார் (உபா. 7 : 22). அந்த ஜாதியாரை ஒட்டுமொத்தமாக நிர்மூலமாக்கினால், காட்டு மிருகங்களால் தனது ஜனமாகிய இஸ்ரவேலருக்கு இடையூறு வரும் என்பதைக் கொண்டு, அந்நிய ஜாதியான அந்த ஜனங்களை ஒருமிக்க அழிக்க வேண்டாம் என்று கர்த்தர் கூறினார்.

புறஜாதிகளை முற்றிலும் நிர்மூலமாக்கினால் அவர்களுக்குள் வாசமாய் இருக்கும் தள்ளப்பட்ட ஆவிகள், காட்டு மிருகங்கள் பெருகி இஸ்ரவேலுக்குள் வரும். அதனால் கர்த்தரின் ஜனமாகிய இஸ்ரவேலருக்குப் பாதிப்பு வரும். எனவே அந்தப் புறஜாதிகள் முழுமையும் அழிக்க வேண்டாம் எனக் கர்த்தர் திருவுளம் பற்றினார்.

காட்டு மிருகங்களாகியத் தள்ளப்பட்ட ஆவிகள் புறஜாதிகளின் தேவர்களாவார்கள் எனவும், அந்தப் புறஜாதிகள் முழுமையும் அழிக்கப்பட்டால் அவர்களிடம் இடைபடும் தள்ளுண்ட ஆவிகள் தனது மந்தையை முற்றிலும் கெடுத்துவிடாதபடிக்கு புறஜாதிகள் முற்றிலும்

அழிக்கப்படக்கூடாது என்பது கர்த்தரின் சித்தம். உலக நாடுகள் முழுமையும் கிறிஸ்தவ நாடுகளாக மாறாது. பிற தேவர்களை வணங்கும் ஜனங்கள் இந்த பூமியின் அழிவுமட்டும் இருப்பார்கள்.

தள்ளப்பட்ட ஆவியாகிய லூசிபர் அன்று இஸ்ரவேலருக்குள்ளும், இன்று கிறிஸ்தவர்களுக்குள்ளும் வஞ்சிக்கிறவனாகவே செயல்பட்டு வருகின்றான். உலக நாடுகள் முழுமையும் உள்ள தேவர்கள் மத்தியில், சர்ப்பத்தின் சாயல் கொண்ட அல்லது சர்ப்பத்தின் நாமம் கொண்ட ஒரு தேவனோ அல்லது தேவதையோ இருக்கும்.

தமது ஜனமாகிய இஸ்ரவேலர் அவரைத் தேடினாலும், அவரைத் தேடாவிட்டாலும் கர்த்தர் அந்த ஜனத்தின் மீது அன்புள்ளவராக இருக்கிறார். இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்று கர்த்தர் உரைக்கிறார் (ஏசா. 44 : 21). கிறிஸ்தவர்களும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டபடியால் இஸ்ரவேலில் யூதா கோத்திரத்தாராய் கர்த்தரால் சுவிகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள். புற ஜாதிகள் முற்றிலுமாக அழிக்கப்படுமானால் காட்டு மிருகங்கள் இஸ்ரவேலின் சந்ததிக்குள் பெருகிப் போகுமாதலால் அந்த ஜாதிகள் முழுவதுமாய் அழிக்கப்படக் கர்த்தர் அனுமதிக்கவில்லை.

காட்டு மிருகங்கள் எல்லாவற்றிலும் தந்திரமுள்ள வஞ்சகன் வலுசர்ப்பம். இவன் செயல்படும் ஒரே ஜாதி இஸ்ரவேல் என்ற ஜாதி. இவன் புற ஜாதிகள் மத்தியில் செயல்படுவதில்லை. இந்த வலுசர்ப்பத்தின் அதிகாரத்திற்கு

உள்ளான காட்டுமிருகங்கள் இஸ்ரவேலர் அல்லாத ஜனங்கள் மத்தியில் இடைபடும், வணங்கப்படும் ஆவி. பிசாசானவனிடத்தில் உலகத்தின் சகல ராஜ்யங்களின் மேலுள்ள அதிகாரமும், அவைகளின் மகிமையும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது (லூக். 4 : 5,6).

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த தனது ஜனமாகிய இஸ்ரவேலரின் கூக்குரலையும், அவர்கள் பட்ட உபத்திரவத்தையும் கண்ட தேவன், தனது தாசனாகிய மோசேயைத் தெரிந்தெடுத்து அவர்களை எகிப்தியர் மத்தியிலிருந்து அற்புதங்களையும், அதிசயங்களையும் காணச் செய்து வெளிக்கொணர்ந்தார்.

எகிப்தியர் அழிவைக் கண்டார்கள். இஸ்ரவேலர் அற்புதங்களைக் கண்டார்கள்.

1. ஆரோனின் கோல் சர்ப்பமானது:

எகிப்தின் மந்திரவாதிகளும் தங்களின் மந்திர வித்தையினால் தங்களின் கோல்களைச் சர்ப்பங்கள் ஆக்கினார்கள். ஆனால் ஆரோனுடைய கோலோ மந்திரவாதிகளின் கோல்களை விழுங்கிற்று (யாத். 7 : 9-12).

2. எகிப்தின் நீர்நிலைகளில் உள்ள தண்ணீர் மீது கோலை ஓங்கி அடிக்கத் தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப் போயிற்று. எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் அப்படியே செய்தார்கள் (யாத். 7 : 17–22).

3. கைக்கோலினை நீட்டி எகிப்து தேசத்தை

மூடிக்கொள்ளத்தக்கதாய் தவளைகளை வரப் பண்ணினார்கள். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் அப்படியே செய்தார்கள் (யாத். 8 : 2–7).

4. ஆரோன் தன் கையில் இருந்த தன் கோலை நீட்டி பூமியின் புழுதியின் மேல் அடித்தான். எகிப்து தேசம் எங்கும் பூமியின் புழுதியெல்லாம் பேன்களாயிற்று. எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் அப்படிச் செய்ய பிரயத்தனஞ் செய்தார்கள். அவர்களால் கூடாமற் போயிற்று (யாத். 8 : 16–18).

பூமியின் நடுவே நானே கர்த்தர் என்பதை அறியும்படி என் ஜனத்திற்கும், உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படிச் செய்வேன் என்று கூறி மீதமுள்ள வாதையினை எகிப்தியருக்கும், தன் ஜனங்களைக் காத்துத் தப்புவித்து வித்தியாசம் உண்டாகும்படிச் செய்தார் (யாத். 8 : 23). முதல் மூன்று காரியங்களையும் எகிப்தின் மந்திரவாதிகளும் காட்டு மிருகங்களாகிய தங்களின் தேவர்களைக் கொண்டு செய்தார்கள். ஆனால் அதன்பின்னர் செய்த 4–ம் (நான்காம்) காரியத்தினை எகிப்தின் தேவர்களால் செய்யக்கூடாமற் போயிற்று. அதுமாத்திரமல்ல இதன்பின்னர் 5 முதல் 11 வரையிலான 7 வாதைகளையும் எகிப்தியருக்குக் கர்த்தர் கட்டளையிட்டார். அந்த வாதைகளிலிருந்து தனது ஜனங்களைக் காக்க எகிப்தின் தேவர்களாகிய காட்டுமிருகங்களால் கூடாமற் போயிற்று.

5. எகிப்தியரின் வீடுகளிலும் அவர்கள் இருந்த இடத்திலும் வண்டுகளை அனுப்பினார் (யாத் 8 : 24).

6. எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் யாவும் சாகும்படி மகா கொடிதான கொள்ளை நோய் உண்டானது (யாத். 9 : 6).

7. எகிப்தியர் மேலும் அவர்களின் மிருக ஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்புளங்களை எழும்பப் பண்ணினார் (யாத். 9 : 9–11).

8. எகிப்து தேசமெங்கும் வீடுகளுக்கு வெளியில் இருந்த மனிதர்கள், மிருகங்கள் மற்றும் வெளியில் இருந்தவைகள் எவைகளோ, அவைகள் எல்லாவற்றையும் அழித்துப் போட்டது கல்மழை. இந்த முறை பார்வோனின் ஊழியக்காரரில் எவன் கர்த்தருடைய வார்த்தைக்குப் பயப்பட்டானோ அவனும் அவன் உடமைகளும் காப்பாற்றப்பட்டது (யாத் 9 : 18–26).

9. எகிப்து தேசத்தின் மேல் வெட்டுக்கிளிகளை வரப்பண்ணி, கல்மழையினால் அழியாத பூமியின் பயிர் வகைகள் எல்லாம் பட்சிக்கப்பட்டது (யாத். 10 : 12,13).

10. எகிப்து தேசம் எங்கும் மூன்று நாள் மட்டும் காரிருள் உண்டாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது (யாத். 10 : 22,23).

11. எகிப்தியரில் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் அடிமைப் பெண்ணின் தலைப்பிள்ளைகள் வரைக்கும், எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறனைத்தும், மிருக ஜீவன்களின் தலையீற்றனைத்தும் அதம் பண்ணப்பட்டது (யாத். 12 : 29). அன்றைய தினம் எகிப்தியரில் சாவில்லாத வீடு ஒன்றுகூட இருந்தது இல்லை (யாத். 12 : 30). ஆனால் இஸ்ரவேலர் யாவரும் காக்கப்பட்டார்கள்.

எகிப்தின் தேவர்களாகிய காட்டுமிருகங்களால் கர்த்தரிடமிருந்து எகிப்தின் ஜனங்களையோ, அவர்களின் உடமைகளையோ காக்க முடியவில்லை. மேலும் முதற்பேறாயிருந்த எல்லாவற்றையும் சங்காரம் செய்து எகிப்தின் தேவர்களின் மேலும் கர்த்தர் நீதியைச் செலுத்தினார் (யாத். 12 : 12, எண். 33 : 4).

கர்த்தர் செய்கிற காரியங்களைப் போல அனைத்துக் காரியங்களையும் செய்ய காட்டு மிருகங்களாகியத் தள்ளப்பட்ட ஆவிகளுக்கு அதிகாரம் இல்லை. புறஜாதிகளுடைய தேவர்களுக்கு வல்லமை இல்லை.

காட்டு மிருகங்களின் நோக்கம் ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட கர்த்தரின் ஜனமாகிய இஸ்ரவேலரை, கிறிஸ்தவர்களை நன்மை தீமை அறியத்தக்கவர்களாக மாற்றுவது. ஆதியில் ஏதேன் தோட்டத்தில் தடை செய்யப்பட்ட நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க ஏவி ஏவாளை வஞ்சித்தான். எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து வெளிக் கொணரப்பட்ட இஸ்ரவேலரை நன்மைதீமை அறியத்தக்கவர்களாக்கி, வழியிலே மரித்தவர்களாக்கினான். அவர்களின் நன்மைதீமை அறியாத பிள்ளைகள் மாத்திரம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்தார்கள் (உபா. 1 : 39). கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து வந்து சுவிசேசம் சொன்னவர்களில் 10 பேர் நன்மை தீமை அறிந்து கொள்ளப்பட்டவர்களாக்கப்பட்டுத் துர்ச்செய்தியைப் பரப்பினார்கள். மீதமுள்ள காலேப்பும், யோசுவாவும் நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள்.

அற்புதங்களைக் கண்டும், அதிசயங்களைப் பெற்றும், மன்னாவினால் போஷிக்கப்பட்டும், காடைகளை ருசித்தும், மாராவின் தண்ணீரை மதுரமாகப் பருகியும், கன்மலையினிடத்தில் தண்ணீரைப் பருகியும், தங்களுக்கு அறிவிக்கப்பட்ட மாறான சுவிசேசத்திற்குச் செவி கொடுத்து நிச்சயிக்கப்பட்ட இலக்கினை இழந்து போனார்கள். நிச்சயிக்கப்பட்டதை இழந்து போக நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசித்தவர்களாகி வழியிலே மாண்டு போனார்கள். ஜீவனுக்குரியதை மரணத்துக்கு உள்ளாக்கியது காட்டு மிருகத்தின் வஞ்சகம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் வனாந்திரத்திலே சாத்தானால் சோதிக்கப்படக் காட்டு மிருகங்களின் நடுவிலே 40 நாள் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ் செய்தார்கள் என்று வேதம் சாட்சியிடுகிறது (மாற். 1 : 13). வார்த்தையாய் வெளிப்பட்ட மாமிச சரீரம் காட்டு மிருகங்கள் மத்தியில் சோதிக்கப்பட அனுமதிக்கப்பட்டது. காட்டுமிருகங்களில் பிரதானமான பிசாசு அவரைச் சோதித்தான். அவனின் சோதனையைக் கர்த்தர் வார்த்தையினால் ஜெயங்கொண்டார். அதனால் அவன் சிலகாலம் அவரை விட்டு விலகிப் போனான் என்று வேதம் சாட்சியிடுகிறது (லூக். 4 : 2,13).

சோதனைக்காரன் பிசாசு. சோதனைக்குட்படுத்த நியமிக்கப்பட்டது காட்டு மிருகங்கள்; தள்ளப்பட்ட ஆவிகள்.

சோதனைகளில் ஜெயிக்கிற மனுஷன் பாக்கியவான்.

கொள்ளைக்காரரான காட்டு மிருகங்கள் கர்த்தரின் மந்தையின் ஆடுகளை இன்றும் இரையாக்கிக் கொண்டிருக்கிறது.

கர்த்தருடைய மந்தையின் ஆடுகள், காட்டு மிருகங்களிடம் மேய்ப்பர்களாலேயே ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த மேய்ப்பர்கள் கர்த்தரின் மந்தையை மேய்க்காமல், தங்களையே மேய்த்துக் கொண்டிருக்கிறபடியால் ஆடுகள் காட்டு மிருகங்களிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டது மேய்ப்பர்கள் பரிசுத்த ஆவியானவரால் அனுப்பப்படாமல் உலக ஞானத்திலே கற்று, உலகத்தின் ஆவியினால் மந்தையை மேய்க்கிறபடியால் உலகத்தின் அதிபதியாகிய பிசாசு தன் இனத்தானாகிய காட்டு மிருகங்களுடன் சேர்ந்து கர்த்தரின் மந்தையை இரையாக்கிக் கொண்டிருக்கிறது (எசே. 34 : 3,5,8).

இன்றைக்கு ஸ்தாபனங்களும், சபைகளும் மந்தையின் ஆடுகளை காட்டுமிருகங்களுக்கு இரையாக்கிக் கொண்டிருக்கிறது. காட்டு மிருகங்கள் இன்றைக்கு இருக்க கூடிய சபைகளையும், ஸ்தாபனங்களையும் தங்களின் தாபரங்களாக்கிக் கொண்டிருக்கிறது (வெளி. 18 : 2).

அப்போஸ்தல நாட்களில் யூதர்கள் புற ஜாதிகளுடன் சேர்ந்து சீசர்களுக்கு விரோதமாய், விசுவாசிகளுக்கு விரோதமாய் எழும்பினார்கள். ஏனென்றால் அன்றைக்கு இருந்த யூதர்கள் காட்டு மிருகங்களின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகவும், ஆளுகைக்கு உள்ளானவர்களுமாய் இருந்தார்கள். ஆவிக்குள் ஒன்றான விசுவாசியாத யூதர்களும், புறஜாதிகளும் வார்த்தைக்குரிய விசுவாசிகளுக்கு விரோதமாக எழும்பினார்கள் (அப். 14 : 2).

இயேசு கிறிஸ்துவின் ஆயிரம் வருட அரசாட்சியின் போது ஒரே மேய்ப்பன் நமக்கு உண்டாயிருப்பார். இன்று அந்த மேய்ப்பனின் வார்த்தைக்குச் செவி கொடுக்கும் ஆடுகள் 1000 வருட அரசாட்சியில் பங்கடைவர். அந்த மேய்ப்பன் வார்த்தையான தேவனிடத்திலிருந்து வரும் பரிசுத்த ஆவியானவர் ஆவார்! பரிசுத்த ஆவியானவர் உங்களை மேய்க்கக் கர்த்தரின் ஆடுகளே உங்களை ஒப்புக் கொடுங்கள். வார்த்தை உங்களை வழிநடத்த ஒப்புக் கொடுங்கள்.

கர்த்தர் தாமே உங்களுக்குக் கிருபையைக் கட்டளையிடுவாராக !

காட்டு மிருகங்கள் இல்லாத அரசாட்சி 1000 வருட அரசாட்சி! அந்த அரசாட்சியில் பங்கடையக் கர்த்தர் உங்களை வழி நடத்துவாராக !

ஆமென்! ஆமென்!! ஆமென்!!!

2. வார்த்தை-

வாய்மொழி/எழுத்து

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவா. 1 : 1).

ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை இந்தக் காலத்தில் இருந்தது எனக் குறிப்பிடப்படவில்லை. அந்தக் காலத்தைக் குறித்து வேதம் "ஆதி" என்றே குறிப்பிட்டுள்ளது. தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த காலத்தைக் குறித்தும் வேதம் "ஆதியிலே" என்று சான்று பகர்கிறது.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்..." (ஆதி. 1 : 1).

வானமும் பூமியும் உருவாக்கப்படும் முன்னரே அந்த வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை மாமிசமாகி (யோவா. 1 : 14) அப்போஸ்தலர்களால் கேட்கப்பட்டும், அவர்கள் கண்களினால் காணப்பட்டும், அவர்கள் கைகளினாலே தொடப்பட்டதுமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற மாமிச சரீரத்தில் தன்னை வெளிப்படுத்தியது (1யோவா. 1 : 1). அந்த வார்த்தையைக் குறித்தே அப்போஸ்தலர்கள் சாட்சி கொடுத்தார்கள் (1யோவா. 1 : 2).

ஆதியிலே தேவனிடத்தில் இருந்த அந்த வார்த்தை (யோவா. 1 : 1) பூரணமுள்ளதாய் இருந்தது. அவர் மூலமாய், அந்த வார்த்தையின் மூலமாய் சகலமும் உருவாகிற்று. உண்டாக்கப்பட்டதெல்லாம் அவராலேயல்லாமல் வேறு ஒருவராலும் உருவாக்கப்படவில்லை என்றே வேதம் சாட்சியிடுகிறது (யோவா. 1: 3). உலகத் தோற்றத்துக்கு முன்னதாக ஆட்டுக்குட்டியானவருக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம் என்றும் வேதம் சாட்சியிடுகிறது (எபேசி. 1 : 4).

ஆதியிலே இருந்த வார்த்தை மூலமாய் சகலமும் உண்டாயிற்று.வானமும் பூமியும் அந்த வார்த்தையிலே சிருஷ்டிக்கப்பட்டது. அவர் உண்டாகக் கடவது என்றார். அவைகள் உருவாயிற்று (ஆதி. 1 : 3, 6, 9, 11, 14, 20, 27, 2 : 2). தேவனாகிய கர்த்தர் தமது ஆதினத்தில் தாம் குறித்த காலங்களில் இவைகள் யாவையும் உருவாக்கினார். இவ்வாறு உருவாக்கப்பட்ட அனைத்தும் 24 மணி நேரம் கொண்ட ஒரு கால அளவிலான ஒரு நாளில் உருவாக்கப்பட்டவை இல்லை. சூரியனும் சந்திரனும் உருவாக்கப்படும் முன்னதாகவே சாயங்காலமும் விடியற்காலமுமாகி கொடுக்கப்பட்ட ஒரு கால அளவு ஆகும். 24 மணி நேரம் கொண்ட நாளுக்குரிய கால அளவு சூரியன் சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் உருவாக்கப்பட்ட 4ம் நாளில் தான் இந்தப்பூமி அறிந்தது. ஆனால் அதற்கு முன்னதாகவே சாயங்காலம், விடியற்காலம் கொண்ட ஒரு கால அளவு குறிக்கப்பட்டுள்ளது. இது கர்த்தர் தமது ஆதினத்தில் குறித்திருந்த ஒரு கால அளவு. இது 24 மணி நேரம் கொண்ட ஒரு கால அளவுள்ள நாள் அல்ல.

ஆதியிலே இருந்த வார்த்தை வானமும் பூமியும் உருவாக்கப்படுவதற்கு முன்னதாகவே இருந்த வார்த்தை. அந்த வார்த்தையில் ஜீவன் இருந்தது (யோவா. 1 : 4). அதனால் உண்டாகக்கடவது என்று தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து வெளிப்பட்ட வார்த்தை அவைகள் யாவற்றையும் உருவாக்கிற்று. அவ்வாறு உரைக்கப்பட்ட வார்த்தை கர்த்தர் தாம் அனுப்பிய காரியத்தை நிறைவேற்றிவிட்டு மீண்டும் அது தேவனிடத்திற்கு திரும்பிற்று. இதையே வேதம் இவ்விதமாய் சாட்சியிடுகிறது.

“என் வாயிலிருந்து புறப்படும் வசனமும்... அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது தான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்” (ஏசா. 55 : 11).

உண்டாகக் கடவது என்று உரைக்கப்பட்டுப் புறப்பட்டு வந்த வார்த்தை, அவைகள் யாவற்றையும் கர்த்தர் தமது ஆதினத்தில் குறித்திருந்த காலத்தில் நிறைவேற்றி விட்டு மீண்டும் கர்த்தரிடம் திரும்பிற்று. **இவ்வாறு அனுப்பப்பட்ட வார்த்தை எந்தக் காரியத்திற்காக அனுப்பப்படுகிறதோ அதை நிறைவேற்றிவிட்டு கர்த்தரிடத்திற்கு திரும்பிச் செல்லும் முன், அடுத்த வார்த்தை கர்த்தரிடத்திலிருந்து அனுப்பப்படாது.**

முதலாம் நாளில் அனுப்பப்பட்ட வார்த்தை அதன் கிரியைகளை முடித்துவிட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பிய பின்னரே இரண்டாம் நாளில் உருவாக்கப்பட அனுப்பப்பட்ட வார்த்தை அனுப்பப்பட்டது. இரண்டாம் நாளில் அனுப்பப்பட்ட வார்த்தை அதன் கிரியைகளை முடித்துவிட்டுக் கர்த்தரிடம் சென்ற பின்னரே, மூன்றாம் நாளுக்குரிய வார்த்தை புறப்பட்டது.

இவ்விதமாகவே ஏழு நாட்களுக்கும் உரிய வார்த்தைகள் அனுப்பப்பட்டு அதன் கிரியைகளை முடித்துவிட்டு கர்த்தரிடத்தில் திரும்பிற்று. அந்த வார்த்தை கர்த்தரிடத்தில் இருந்து அனுப்பப்படும் போது அதற்குள் ஜீவன் இருந்தது. அந்த நாளுக்குரிய கிரியைகளை நிறைவேற்றி அது கர்த்தரிடத்தில் திரும்பிய பின்னர் அந்த வார்த்தையில் ஜீவன் இருக்காது.

முதலாம் நாள்→ வெளிச்சத்தை உண்டாக்க அனுப்பப்பட்டது.

2-ம் நாள் → ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாக அனுப்பப்பட்டது.

3-ம் நாள் → சமுத்திரமாய்ச் சேரவும், வெட்டாந்தரை பூமியும் காணப்பட அனுப்பப்பட்டது. மேலும் பூண்டுகளையும், கனி விருட்சங்களையும் முளைப்பிக்க அனுப்பப்பட்டது.

4-ம் நாள் → ஆகாய விரிவிலே சுடர்கள் (சூரியன், சந்திரன் & நட்சத்திரங்கள்) உண்டாக்கப்பட அனுப்பப்பட்டது.

5-ம் நாள் → நீந்தும் ஜீவ ஜந்துக்களையும், பறக்கும் பறவைகளையும் ஜனிப்பிக்க அனுப்பப்பட்டது.

6-ம் நாள் → ஜாதி ஜாதியான நாட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், மனுஷனையும் உண்டாக்க அனுப்பப்பட்டது.

7-ம் நாள் → சிருஷ்டிக்கப்பட்டவைகள் பலுகிப் பெருகவும், கர்த்தர் தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு தாம் ஓய்ந்திருக்க அனுப்பப்பட்டது.

8-ம் நாள் → பண்படுத்தப்பட்ட மனிதனாக உருவாக்கப்பட்ட ஆதாம் ஜீவசுவாசத்தைப் பெற்ற மனிதனை ஜீவ ஆத்துமா உள்ளவனாக மாற்ற அனுப்பப்பட்டது.

→ ஆத்துமா உள்ள முதல் மனிதனாக ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டான்.

ஜீவனுள்ள ஆத்துமா பெற்றவனாகச் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம். ஆவிக்குரியவனாய்ச் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம். ஆத்துமா உருவமற்றதாய்க் காணப்படுகிறது. இந்த உருவமற்ற சரீரத்தை ஆவிக்குரிய நன்மையைப் புசிக்க உருவாக்கப்பட்ட ஆத்துமாவைக் கொண்ட முதல் மனிதன் ஆதாம். அவர் ஆதாம் என்ற ஒருவனை ஏன் படைத்தார், தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே? (மல். 2 : 15). அந்த ஆதாமின் சந்ததியிலே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் பிறந்தார். 6ம் நாள் சிருஷ்டிக்கப்பட்டு ஜென்ம சுபாவத்தவராகிய புறஜாதிகளாகிய நமக்கு கர்த்தர் தமது ஜீவ வார்த்தையின் மூலம் ஜெனிப்பிக்கச் செய்து (1யோவா. 5 : 11) மறுமை என்ற நித்திய ஜீவனைப் பெறக் கிருபை செய்துள்ளார். ஆமென்!

இவ்வாறாகக் கர்த்தரிடத்திலிருந்து அனுப்பப்பட்ட வார்த்தையானது எவைகளை உருவாக்க அனுப்பப்பட்டதோ,

அவைகளை உருவாக்கும் வரையிலும் அது ஜீவனுள்ளதாயும், அவைகள் உருவாக்கப்பட்டு அந்த வார்த்தை தன்னை அனுப்பிய கர்த்தரிடத்தில் திரும்பிச் சென்ற பின்னர் அந்த வார்த்தை நிறைவேறியபடியினால் மீண்டும் அந்தக் கிரியைகளைச் செய்ய ஜீவன் இழந்ததாயும் காணப்படுகிறது.

ஆறு நாள் அளவும் பங்குபங்காகவும் வகை வகையாகவும் உருவாக்கப்பட அனுப்பப்பட்ட வார்த்தை அவைகள் யாவையும் உருவாக்கிய பின்னர் மீண்டும் கர்த்தரிடத்தில் சென்றுள்ளது. 8ம் நாளில் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமின் ஜீவ ஆத்துமா என்ற ஜீவனுக்குரியவர்களின் காலத்தின் கடைசிக்காலத்தில் நாம் ஜீவிக்கிறோம்.

ஆதாம் → ஜீவனுள்ள ஆத்துமா பெற்ற முதல் மனிதன்.

ஆதாமுக்குள் ஊதப்பட்ட ஜீவசுவாசம் உலகத் தோற்றத்துக்கு முன்பாகத் தாம் முன்குறித்த தனது மந்தையை சிருஷ்டிக்கும் பொருட்டு அவனுக்குள் ஊதப்பட்டது. அவனுக்குள் ஊதப்பட்ட அந்த ஜீவ ஆத்துமா உருவாகக்கடவது என்ற கர்த்தரின் வார்த்தைக்குரிய கிரியைகளின் காலம் இந்த 8ம் நாள். அதாவது நாம் ஜீவிக்கும் இந்தக் காலம்.

ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் கொடுத்த போது தசமபாகம் வாங்க அதிகாரம் பெற்ற லேவியின் புத்திரரும் தசமபாகம் கொடுத்தார்கள் என்று வேதம் சாட்சியிடுகிறது (எபி. 7 : 4–10). ஆபிரகாமுக்கு அவன் குமாரனாகிய ஈசாக்கு இன்னமும் பிறக்காதபோதே, அவர் குமாரனாகிய ஈசாக்கினிடத்தில் யாக்கோபு தோன்றி, அந்த யாக்கோபின் குமாரரில் ஒருவனான லேவியும் அவன்

புத்திரர்களும் தசமபாகம் பெற மோசேயின் நியாயப்பிரமாணத்தில் குறித்தவைகளை, ஆபிரகாமின் அரையிலிருந்து தசமபாகம் கொடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆபிரகாம் – (21–வது தலைமுறை)

↓

ஈசாக்கு – (22–வது தலைமுறை)

↓

யாக்கோபு – (23–வது தலைமுறை)

↓

லேவி – 24–வது தலைமுறை)

↓

லேவியின் புத்திரர் – (29–வது தலைமுறை)

தசமபாகம் பெற நியமிக்கப்படுதல்

ஆபிராகாமுக்குப் பின்னர் 9–வது தலைமுறையில் தசமபாகம் பெற நியமிக்கக்கப்பட்டவர்கள் 8 தலைமுறைகளுக்கு முன்னதாகவே ஆபிராமின் அரையிலிருந்து தசமபாகம் கொடுத்தது போல, ஆதாமுக்குள் ஊதப்பட்ட ஜீவ சுவாசமானது பரலோக சுதந்திரத்தைப் பெறும் கடைசி ஆத்துமா கிருபையைப் பெறும் வரையிலும் அது ஜீவனுள்ளதாய் ஒன்றுக்கு அடுத்து ஒன்றாக ஜனிப்பிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

ஆதாம்

↓ ↓ ↓

காயீன் ஆபேல் சேத்

↓

ஏனோஸ்

↓

கேனான்

↓

மகலாலெயேல்

↓

யாரேத்

↓

ஏனோக்கு (7–வது தலைமுறை)

↓

நோவா (10–வது தலைமுறை)

↓

ஆபிரகாம் (21–வது தலைமுறை)

↓

மோசே (29–வது தலைமுறை)

↓

இயேசுகிறிஸ்து (76–வது தலைமுறை)

ஆதாமுக்குள் ஊதப்பட்ட ஜீவ சுவாசமானது ஆதாமுக்கு 76ம் தலைமுறை வரையிலும் மாமிசத்திற்குரிய ஜனத்துக்குரிய சுதந்திரமாய்க் காணப்பட்டது. எனவே இயேசு கிறிஸ்துவும் தாம் மாமிசத்தில் இருந்த நாட்களில் காணாமல் போன இஸ்ரவேல் வீட்டாருக்கே தாம் அனுப்பப்பட்டதாய் அறிக்கையிட்டுள்ளார் (மத். 15 : 24). இயேசுகிறிஸ்து மூலமாய் ஜீவ ஆத்துமா என்ற கிருபை 6ம் நாள் சிருஷ்டிக்கப்பட்ட ஜென்ம சுபாவத்தாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது (யோவா. 1 : 17).

ஜீவனுக்குரியவர்களாய் புற ஜாதியாருக்குக் கிருபை கொடுக்கப்பட்டு 29 தலைமுறைகள் ஆகிறது. ஜீவ ஆத்துமாவைப் பெற்றவர்கள் அதை இழந்து போனால் ஆக்கினைக்கும், அதைக் காத்துக் கொண்டால் பரலோக சுதந்திரத்தை அடையும் சிலாக்கியத்தையும் பெற்றுக் கொள்வார்கள். இவ்வாறு ஜீவனுக்கென்று ஆதாமின் மூலமாய் ஜீவ சுவாசத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட ஆத்துமா, மரணத்தையும் ஜீவனையும் சுதந்தரிப்பதற்குக் கர்த்தர் தமது நாசியின் சுவாசமாகிய பரிசுத்த ஆவியினால் ஒரு வார்த்தையை அனுப்புகிறார். அந்த வார்த்தை தன்னை விசுவாசிக்கிறவர்களை தன்னோடு சேர்த்துக் கொண்டு தன்னை அனுப்பிய பிதாவினிடத்தில் போய்ச் சேரும். அந்த வார்த்தையை விசுவாசித்து தங்கள் கிரியைகளினால் காத்துக் கொள்ளாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டு அக்கினியும் கந்தகமும் எரியும் கடலில் தள்ளப்படுவார்கள். இதையே வேதம் இரண்டாம் மரணம் என்று சாட்சியிடுகிறது (வெளி. 20 : 14,15).

ஆத்துமாவைப் பெற்ற ஆதாமுக்குக் கர்த்தர் தாம் நேரடியாகக் கொடுத்த வார்த்தை "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம், ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி. 2 : 16,17).

இந்த வார்த்தையில் ஜீவன் இருந்தது. இந்த வார்த்தை ஆதாம் பெற்ற ஜீவ ஆத்துமாவை அழைத்துச் செல்லப் பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்ட வார்த்தை. ஆனால் சாத்தானின் போதனைக்குச் செவிகொடுத்த

ஆதாம் அந்த விருட்சத்தின் கனியைப் புசித்த நாளில் மரித்தான். அந்த மரணம் மாமிசத்திற்குரியதாய் இல்லை. ஏன் என்றால் ஆதாம் அந்த விருட்சத்தின் கனியைப் புசித்த பின்னர் தான் தனது மனைவியை அறிந்து, காயீன், ஆபேல், சேத் என்னும் குமாரர்களைப் பெற்று அதன் பின்னர் 800 வருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான் என்றும், அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் 930 வருடம் என்றும் வேதம் சாட்சியிடுகிறது (ஆதி. 5 : 4).

ஆதாமுக்கு அனுப்பப்பட்ட வார்த்தை ஆதாமிடம் சொல்லப்பட்டது. ஆதாம் அந்த வார்த்தைக்குச் செவிகொடுக்கவில்லை. அதனால் அந்த வார்த்தை மீண்டும் பிதாவினிடத்திற்குச் சென்றுவிட்டது. ஆதாமுக்கு அனுப்பப்பட்ட போது அந்த வார்த்தையில் ஜீவன் இருந்தது. அது அறிவிக்கப்பட்டு மீண்டும் பிதாவினிடம் சென்றதால் அந்த வார்த்தையில் அதற்குப் பின்னர் ஜீவன் இல்லை. பிதாவினிடத்திலிருந்து ஆதாமுக்கு அனுப்பப்பட்ட வார்த்தை சத்திய வார்த்தையே. ஆனால் அந்த வார்த்தையின் ஜீவன் நிறைவேறிவிட்டது.

ஆதாமுக்குப் பின்னர் ஏனோக்குக்கு அனுப்பப்பட்ட வார்த்தை தேவனோடு சஞ்சரிக்க வேண்டும். இந்த வார்த்தை தேவனாய் இருந்தது. இந்த வார்த்தையில் ஜீவன் இருந்தது. இந்த வார்த்தை தேவனோடு இருந்தது. ஏனோக்கு தேவனாடு சஞ்சரித்தான். அந்த வார்த்தையோடு நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டான். நோவா காலத்தில் அனுப்பப்பட்ட வார்த்தை ஜலப் பிரளயத்தினால் பூமி அழிக்கப்படப் போகிறது. இரட்சிப்பை விரும்புவோர் விசுவாசித்து பேழைக்குள் வர வேண்டும். விசுவாசித்துப்

பேழையை உருவாக்கி, அதனுள் பிரவேசித்த நோவாவும் அவன் குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டார்கள். விசுவாசியாத அப்பூமியின் குடியிருப்புகள் யாவும் அழிக்கப்பட்டது. விசுவாசித்த ஆதாமின் சந்ததியாகிய நோவாவும், நோவா குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப்படப் பேழைக்குள் பிரவேசிக்க வேண்டும் என்று கர்த்திரிடத்திலிருந்து புறப்பட்ட அந்த வார்த்தை தேவனாய் இருந்தது. அந்த வார்த்தையில் ஜீவன் இருந்தது. அந்த வார்த்தை கர்த்தரின் கிரியைகளை நிறைவேற்றிவிட்டு விசுவாசித்த நோவாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டு மீண்டும் கர்த்தரிடம் திரும்பிற்று. அந்த வார்த்தையின் ஜீவன் அன்று நிறைவேறிற்று. இந்தச் சத்திய வார்த்தையில் இரட்சிப்புக்கேதுவான ஜீவன் இன்று இல்லை.

தேவனோடே ஆதியிலே இருந்த இந்த வார்த்தைகள் யாவும் அதினதின் காலத்தில் கர்த்தர் தீர்மானித்த அளவின்படி பூமிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவைகளுக்குப் பின்னர் ஆபிரகாமுக்கு அனுப்பப்பட்ட வார்த்தை அது விசுவாசத்திற்கெனக் கொடுக்கப்பட்ட வார்த்தை. அந்த வார்த்தை ஆபிரகாமைக் கல்தேயருடைய தேசத்தை அதாவது பாபிலோனியரின் தேசத்தை விட்டு, தன் இனத்தாரை விட்டு, ஜனத்தாரை விட்டு, நோவாவின் சந்ததியில் பிறந்த ஆதாமின் சந்ததியை விட்டு வெளியேறி வா என்பதே! ஆபிரகாம் விசுவாசித்தார். கர்த்தர் கொடுத்த வாக்குத் தத்தத்தை விசுவாசித்தார். கர்த்தர் தனக்குச் சொன்ன யாவையையும் செய்ய வல்லமையுள்ளவர் என்றும் விசுவாசித்தார். விசுவாசத்தினைத் தன்கிரியைகளின் மூலம் காத்துக் கொண்டார். கல்தேயருடைய தேசத்தை விட்டு

வெளியேறினார். மற்ற ஆத்துமா உள்ள தன் ஜனமாகிய ஆதாமின் சந்ததியை விட்டு வெளியேறினார். கர்த்தர் தனக்குக் கொடுத்த வார்த்தையை விசுவாசித்து அதன்படியெல்லாம் செயல்பட்டார். இன்று விசுவாசத்தின் தகப்பன் என்ற பெயர் பெற்றார். ஆதாமின் சந்ததியிலே ஆபிரகாம் உடன்படிக்கைக்குத் தகப்பன் என்ற பெயர் பெற்றார். "அவன் விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" என்று வேதம் சாட்சியிடுகிறது (ரோம. 4 : 3).

ஆபிரகாமுக்குப் பின்னர் அவர் குமாரன் ஈசாக்கு, ஈசாக்கின் குமாரர் யாக்கோபு, யாக்கோபு இஸ்ரவேலாக மாறி வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்தார். ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தமாகிய நித்திய ஜீவன், அவர் குமாரன் ஈசாக்குக்கும் அதன்பின்னர் அவர் குமாரன் யாக்கோபுக்கும் கொடுக்கப்பட்டது. கர்த்தரும் தம்மை மோசேயினிடத்தில் வெளிப்படுத்தினபோது தான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய தேவன் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தேவன் என்றே வெளிப்படுத்தி உள்ளார். யாக்கோபு எகிப்திற்குச் சென்று அவர் ஜனங்கள் அங்கு பலுகிப் பெருகி, இஸ்ரவேல் சந்ததி மிகுந்திருந்தது. அதுவரையிலும் வெளிப்பட்ட வார்த்தைகள் யாவும் வார்த்தைகளாகவே இருந்து வந்துள்ளது. ஆதாமுக்கு 29ம் தலைமுறையில் பிறந்த மோசே இந்த வார்த்தைகளை எல்லாம் எழுத்து வடிவத்துக்குக் கொண்டு வந்தார்.

மோசேயின் மூலம் முதன் முதலில் வார்த்தை எழுத்து ரூபமானது.

மோசேயின் ஆகமங்கள்

1. ஆதியாகமம்
2. யாத்திராகமம்
3. லேவியராகமம்
4. எண்ணாகமம்
5. உபாகமம்

ஆதாம் முதல் 28 தலைமுறைகள் வரையிலுமான காலங்களில் வார்த்தைக்கு எழுத்து வடிவமில்லை. 29வது தலைமுறையில் மோசேயின் மூலம் இந்த வார்த்தைகள் எழுத்து வடிவம் பெற்றது.

29வது தலைமுறையில் அந்தக் காலத்துக்கெனக் கொடுக்கப்பட்ட வார்த்தையானது நியாயப்பிரமாணம். அது எழுத்து வடிவத்தில் கொடுக்கப்பட்டது. இதன் பின்னர் தீர்க்கதரிசிகள் மூலம் உரைக்கப்பட்டவைகள் யாவும் எழுத்து வடிவத்தில் கொடுக்கப்பட்டது. எரேமியாவின் வாய் உரைக்கப்பட்டவைகள் பாரூக் மூலம் எழுதப்பட்டது.

29வது தலைமுறையில் வார்த்தை - எழுத்து வடிவமானது.

அதன் பின்னர் தீர்க்கதரிசிகள் மூலம் உரைக்கப்பட்டவைகள் எழுத்து வடிவில் கொடுக்கப்பட்டது. இவ்வாறாக எழுதப்பட்டவை வேதம் என வகுக்கப்பட்டது. இவ்வாறு வகுக்கப்பட்ட வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு

அவமாய்ப் போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்து போவது எளிதாயிருக்கும் என்று கர்த்தரும் சாட்சியிட்டுள்ளார் (லூக். 16 : 17, மத். 5 : 18).

வார்த்தை

(வாய்மொழி)

↓

எழுத்துவடிவம்

(29வது தலைமுறை)

இவ்வாறு எழுத்து மூலம் கொடுக்கப்படும் ஒவ்வொரு எழுத்துக்கும் ஜீவன் இருக்கிறது. அது நிறைவேறிய பின்னர் அதன் ஜீவன் கர்த்தரிடத்தில் திரும்பச் செல்லும். எழுத்து வடிவிலான வார்த்தை மாத்திரம் இந்தப் பூமியில் இருக்கும். எந்த ஒரு தீர்க்கதரிசன எழுத்தாகிலும் அது நிறைவேறும் வரைக்கும், நிறைவேறும் காலத்தில் ஜீவன் உள்ளதாய் இருக்கும். அது நிறைவேறும் முன்னரும் நிறைவேறிய பின்னரும் அதில் ஜீவனுக்கேதுவான கிரியைகள் இராது.

நியாயப்பிரமாணம் மோசேயின் மூலம் ஆதாமுக்கு 29ம் தலைமுறையில் கொடுக்கப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்ட நியாயப் பிரமாணத்தின்படி ஒருவர் செயல்பட்டால், தனது கிரியைகளைச் செய்தால் அவர் ஜீவனுள்ளோர் தேசத்தை அடைவார். நியாயப் பிரமாணத்தின் கிரியையே ஒரு மனிதனை நீதிமானாக்கிற்று. நியாயப்பிரமாணம் ஆதாமுக்கு 76ம் தலைமுறையில் வந்த இயேசுகிறிஸ்து வரையிலும் கிரியை செய்தது. இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவராகப்

பூமிக்கு வந்தார் (மத். 5 : 17). நியாயப்பிரமாணம் இஸ்ரவேலர் சந்ததிக்குரியது. அதன்படிச் செய்கிற இஸ்ரவேலர் நித்திய ஜீவனைப் பெறுவார்.

எழுத்துவடிவம்

(29வது தலைமுறை)

↓

நியாயப்பிரமாணம்

↓

76வது தலைமுறை நிறைவேறியது.

நியாயப்பிரமாணம் ஜீவன் உள்ளது. அது நிறைவேறும் வரையிலும் அது ஜீவன் உள்ளதாய் இருந்தது. அது நிறைவேறிய உடன் அது தன்னை அனுப்பிய பிதாவிடம் திரும்பிச் சென்றபின்னர் அந்த வார்த்தை எழுத்தாய் இருந்தாலும் அதனுள் ஜீவன் இல்லை. நியாயப்பிரமாணக் கிரியை இன்று ஒரு மனிதனை ஜீவனுள்ளோர் தேசத்திற்குள் கொண்டு செல்வதில்லை. நியாயப்பிரமாண விசுவாச அடையாளம் விருத்தசேதனம்.

நியாயப்பிரமாணத்தில் ஜீவன் 29வது தலைமுறை முதல் 76 வது தலைமுறை வரையிலும் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு என்ற ஜீவனைக் கொடுப்பதாக இருந்தது. இந்த எழுத்தாகிய நியாயப்பிரமாணம் நிறைவேறியதால் அது ஆவிக்குரிய உடன்படிக்கையாகிறது. மாமிசத்திற்குரிய உடன்படிக்கையின் அடையாளமாகிய விருத்தசேதனம் நிறைவேறிற்று. மாமிசத்திற்குரிய எழுத்து கொல்லுகிறது என்று அப்போஸ்தலனாகிய பவுலும் சாட்சியிடுகிறார் (2 கொரி. 3 : 6).

76ம் தலைமுறையில் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அது இரத்தத்தினாலே செய்யப்பட்ட புதிய உடன்படிக்கை. அந்த இரத்தம் புற ஜாதிகளாகிய நமக்கு ஜீவனைக் கொடுக்கிறது. 76ம் தலைமுறை வரையிலும் உடன்படிக்கை எழுத்துக்குரியதாய் இருந்தது. அது ஆதாமின் சந்ததியில் பிறந்த ஆபிரகாமின் குமாரரும் ஈசாக்கின் குமாரரும் யாக்கோபின் குமாரர்களுமான இஸ்ரவேலர்களுக்குரியது. **அதன் பின்னர் மாமிசத்திற்குரிய இந்தப் பிரமாணம் மாற்றியமைக்கப்பட்டு ஆவிக்குரிய புதிய பிரமாணம் எழுதப்பட்டு அந்த எழுத்து இரத்தத்தினால் எழுதப்பட்டது.** அந்த இரத்தம் நம் கர்த்தராகிய இயேசுகிஸ்துவின் இரத்தம்! ஆமென்!

29ம் தலைமுறையில் ஜீவனைக் கொடுக்க அனுப்பப்பட்ட வார்த்தை 76ம் தலைமுறையில் ஜீவன் இழந்த நிலையில் காணப்படுகிறது. எழுத்தாகிய நியாப்பிரமாணம் மாத்திரம் நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லாது. எனவே எழுத்து கொல்லுகிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் 29ம் தலைமுறையில் இந்த எழுத்துக்குச் சாட்சியாக மாமிசத்தில் அடையாளமாகக் கொடுக்கப்பட்ட விருத்தசேதனம் இருந்தாலும் ஒன்றுமில்லை அது இல்லாவிட்டாலும் ஒன்றுமில்லை புது சிருஷ்டியே காரியம் என்றும் பரிசுத்த ஆவியின் மூலம் அப்போஸ்தலனாகிய பவுலும் அறிக்கையிட்டுள்ளார் (கலா. 6 : 15).

வார்த்தை
(வாய்மொழி)
↓
எழுத்துவடிவம்
(29ம் தலைமுறை)
↓
நியாயப்பிரமாணம்
↓
நிறைவேறியது.
(76ம் தலைமுறை)

29ம் தலைமுறையில் அனுப்பப்பட்ட நியாயப்பிரமாண வார்த்தை தேவனாய் இருந்தது. அந்த வார்த்தை ஆதியிலே தேவனோடு இருந்தது. 76ம் தலைமுறையில் அந்த வார்த்தை பிதாவிடம் திரும்பச் சென்றது. 29 முதல் 76 தலைமுறை வரையிலும் ஜீவனோடிருந்த வார்த்தை மாமிசத்தில் வெளிப்பட்டு நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றி விட்டு பிதாவிடத்தில் சென்றதால் அதன் பின்னர் அந்த வார்த்தையில் ஜீவன் இல்லை. உயிர் உள்ள வார்த்தைதான் அது. அது தன்னை அனுப்பிய பிதாவினிடத்தில் திரும்பச் சென்றபடியால் அது 76ம் தலைமுறைக்குப் பின்னர் ஜீவனுக்குள் கொண்டு செல்லாது.



இவையாவும் ஆதாமின் சந்ததிக்குத் தேவனாகிய வார்த்தை. அந்த வார்த்தை நிறைவேறித் தீரும் வரை அந்த வார்த்தையில் ஜீவன் இருக்கிறது. அவைகள் நிறைவேறியதால் அந்த வார்த்தைக்கு, நிறைவேறிய அந்த வார்த்தைக்கு ஜீவன் இல்லை.

விசுவாசப் பிரமாணம் (ஆவியின் பிரமாணம்):-

நியாயப்பிரமாணம் மாமிசப் பிறப்பாகிய இஸ்ரவேலர்களுக்கு. அந்த வார்த்தை எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த வார்த்தையை விசுவாசித்து அதன்படிக் கிரியை செய்த இஸ்ரவேலர்கள் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொண்டார்கள். இவைகள் பழைய ஏற்பாடு. இயேசு கிறிஸ்துவுக்குப் பின்னர் நியாயப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டதால் புதிய உடன்படிக்கை புற ஜாதிகளுக்கு. அது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை. முந்திய ஆதாமின் ஜனத்துக்குக் கொடுக்கப்பட்ட கிருபை மாமிச ஜனனத்தை விட்டு எடுக்கப்பட்டு விசுவாசப் பிரமாணம் கொண்டு வரப்பட்டது. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகள் ஆகும்படிக்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது (யோவா. 1 : 12). அந்த அதிகாரத்தின்படி பிந்தின ஆதாமின் பிள்ளைகள் நித்திய ஜீவனை பெறுவதற்காகக் கிருபை புறஜாதிகளுக்குத் திருப்பப்பட்டது. இது புதிய பிரமாணம். பிந்திய ஆதாமின் பிள்ளைகள் விசுவாசிகளான கிறிஸ்தவர்கள் (1கொரி. 15 : 45, அப். 11 : 26). கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணமே இந்த விசுவாசப் பிரமாணம் (ரோம. 8 : 2).

யேகோவா என்ற நாமத்தினாலே நியாயப்பிரமாணம் மாமிசப் பிறப்பாகிய இஸ்ரவேலருக்கு வழங்கப்பட்டது. யேகோவா என்ற நித்திய நாமம் இரட்சிப்பை மாமிசப் பிறப்பாகிய இஸ்ரவேலர்களுக்குக் கட்டளையிட்டு அவர்களை பிதாவினிடத்தில் சேர்த்து பிதாவுக்கு மகிமையைச் சேர்த்தது.

இயேசுகிறிஸ்து என்ற பிதாவின் நாமம் எல்லா நாமத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டு பூமியிலே மனுஷர்களுக்குள் இரட்சிப்புக்காகக் கட்டளையிடப்பட்ட நாமமாக இன்று புறஜாதிகளாகிய நமக்கு அருளப்பட்டுள்ளது. நியாயப்பிரமாண எழுத்துக்கு அடையாளம் மாமிசத்தில் விருத்தசேதனம். உலகமெங்கும் சர்வசிருஷ்டிகளுக்கும் சுவிசேசத்தைப் பிரசங்கித்து அந்தச் சுவிசேசத்தை விசுவாசிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளம் ஞானஸ்நானம் (மாற். 16 : 15, 16).

பழைய ஏற்பாடு ↓ நியாயப்பிரமாணம் ↓ விசுவாசம் ↓ அடையாளம் விருத்தசேதனம்	புதிய ஏற்பாடு ↓ விசுவாசப் பிரமாணம் (அவருடைய நாமத்தில்) ↓ விசுவாசம் ↓ அடையாளம் ஞானஸ்நானம்.

புறஜாதிகளின்று தமது நாமத்திற்கு ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி (அப். 15 : 14) கிருபை புறஜாதிகளாகிய அதாவது மாமிசப் பிறப்பு அல்லாத ஆபிரகாமின்

சந்ததியினராகிய நமக்குக் கொடுத்துள்ளார். இரட்சிப்புக்காக அன்று அவர் தெரிந்தெடுத்த நாமம் யேகோவா. இன்று நமக்காகக் கொடுக்கப்பட்டுள்ள நாமம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (அப்.4:12). தீர்க்கதரிசிகள் மூலம் ஏற்கனவே யாவும் அறிவிக்கப்பட்டுவிட்டது. மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் முதல் அப்போஸ்தலனாகிய யோவான் வரையிலும் பின்னர் சம்பவிக்க வேண்டியவைகள் யாவும் கர்த்தர் தமது ஆவியின் மூலம் முன்னறிவித்துள்ளார். **முன்னர் அறிவிக்கப்பட்டவைகள் யாவும் அவைகள் அறிவிக்கப்பட வேண்டிய காலங்கள் வரும் வரையிலும் ஜீவன் உள்ளவைகள். ஆனாலும் அவைகள் அறிவிக்கப்பட வேண்டிய காலங்களில் தான் அவைகளின் ஜீவன் வெளிப்படும். அவைகள் அறிவிக்கப்பட்டு அதன் காலங்கள் நிறைவேறிய பின்னர் அவைகளில் உள்ள ஜீவன் பிதாவினிடத்திற்குச் சென்று விடும்.**

தீர்க்கதரிசன வித்தானது அவைகள் பலன் கொடுக்கும் காலம் வரையிலும் அதன் ஜீவன் அந்த வித்துக்குள் காக்கப்படும். ஒரு கோதுமை மணியானது அறுவடையின்போது அறுத்து எடுக்கப்பட்டு அவைகள் கோணிகளில் சேர்த்து வைக்கப்படுகிறது. களஞ்சியங்களில் சேர்த்து வைக்கப்படுகிறது. பின்னர் விதைப்பின் நாளில் அவைகள் விதைக்கப்படும் போது அதனுள் இருக்கும் ஜீவனானது கோதுமையில் முளையிடச் செய்து அது பலன் கொடுக்கும். இப்படியே தீர்க்கதரிசன வார்த்தைகளும் அவைகள் நிறைவேறும் காலங்களில் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு கர்த்தர் தமது தூதர்கள் மூலம் அவைகளை விதைக்கச் செய்கிறார்.

விதை → அந்தக் காலத்துக்குரிய வார்த்தை

விதைக்கிறவர் → மனுஷகுமாரன் (பரிசுத்த ஆவி)

விதையாகிய வார்த்தை களஞ்சியங்களிலிருந்து எடுக்கப்பட்டு அதினதின் காலத்தில் விதைக்கப்படும். அந்த வித்து முளைவிடும் காலம் வரையிலும் அதன் ஜீவன் வெளிப்படாதிருக்கும். அது விதைக்கப்பட்டு முளையிடும் காலத்தில் முளைத்துப் பலன் கொடுக்கும். தீர்க்கதரிசன வார்த்தையாகிய வித்தும் அவ்வாறே இருக்கிறது. கர்த்தரும் இவைகளை உவமையினால் வெளிப்படுத்தி உள்ளார்.

ஏசாயா தீர்க்கதரிசியின் தீர்க்கரிசன வார்த்தை கொண்ட சுருள் இயேசு கிறிஸ்துவிடம் கொடுக்கப்பட்டது. அவர் தமது வழக்கத்தின்படி அவைகளை வாசித்து உங்கள் கண்காண இந்த வார்த்தை இன்று நிறைவேறிற்று என்றார் (லூக். 4 : 21). அந்த வார்த்தையை ஏற்றுக்கொண்ட யூதர்கள் எத்தனை பேர். நிலம் இந்த உலகம். வித்தாகிய வார்த்தை சுவிசேசமாய் அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே சொல்லப்படுகிறது. அது நிச்சயமாய் விசுவாசிக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படுவது இல்லை. விசுவாசமுள்ளவனாகி கிரியைகளைச் செய்பவன் இரட்சிக்கப்படுவான். இதுவே வார்த்தை.

இயேசு கிறிஸ்து தமது 30வது வயது முதல் 33 1/2 வயது வரையிலும் ராஜ்யத்தின் சுவிசேசத்தை சுவிசேசமாய் அறிவித்தார். தமக்குச் சொந்தமான ஜனமாகிய இஸ்ரவேலருக்கு சுவிசேசம் அளிக்கவே வந்தார். ஆனால் அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்றே வேதம் கூறுகிறது (யோவா. 1 : 11).

“ஆவியோ உயிர்ப்பிக்கிறது, மாமிசமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது” (யோவா. 6 : 63) என்கிற ஆவிக்குரிய கர்த்தரின் வார்த்தை சீசர்களில் அநேகரைப் பின்வாங்கிப் போகச் செய்தது. இயேசு 12 சீஷர்களையும் நோக்கி நீங்களும் போய்விட மனதாய் இருக்கிறீர்களா? என்று கேட்ட பொழுது பேதுரு, “யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே” (யோவா. 6 : 68) என்றார்.

கர்த்தரின் சுவிசேசத்திற்குச் சாட்சியாய் எழுப்பப்பட்ட 12 பேரிலும் ஒருவன் பிசாசாய் இருந்தான் (யோவா. 6 : 70). சகலத்தையும் சிருஷ்டித்தவர், பிதாவிடத்திலிருந்து இரட்சிப்புக்காக அனுப்பப்பட்டவர், மாமிசத்தில் வெளிப்பட்டவர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற இரட்சிப்பின் நாமத்தை புற ஜாதிகளுக்கு அறிவிக்க வந்தவர் கொடுத்த சுவிசேச வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு வார்த்தைக்காய் பின்வாங்கிப் போகாதவர்களாய் இருந்தவர்கள் இந்தப் 11 பேர் மாத்திரமே. எல்லா இஸ்ரவேலர்களும் விசுவாசிக்க வேண்டும் என்பதற்காக அல்லாமல் எல்லாருக்கும் சுவிசேசம் அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கர்த்தரும் சுவிசேசத்தை அறிவித்தார்! ஆமென்!

விதை – வார்த்தை – விதைக்கப்பட வேண்டும்.

நல்ல நிலம் – பலன் கொடுக்கும்.

அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின சுவிசேசத்தில் சொல்லப்பட்டத் தீர்க்கதரிசன வார்த்தைகள்

அதினதின் காலம் வரும் போது அவையவைகள் பரிசுத்த ஆவியானவரால் கர்த்தர் தெரிந்தெடுத்த, முன்குறித்த மாமிச சரீரங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் அது நிறைவேறும் காலம் வரையிலும் அடக்கமாயிருந்து அவைகள் நிறைவேறும் காலங்களில் அவைகள் வெளியரங்கமாகும் (ரோம. 16 : 25).

ஆவியின் பிரமாணம்
(வாய்மொழி)
இயேசு கிறிஸ்து வார்த்தை
↓
↓ ↓

சுவிசேசம் (எழுத்து) நிருபங்கள் (எழுத்து)

வார்த்தை இயேசு கிறிஸ்துவின் மூலம் சுவிசேசமாய் அறிவிக்கப்பட்டபோது அவைகள் வாய்மொழியாகவே அறிவிக்கப்பட்டது. பின்னர் அவைகள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்கள் மூலம் சுவிசேசமாய் எழுதப்பட்டது (லூக். 1 : 1–4). ஆவியின் பிரமாணமாய் புற ஜாதிகளாகிய நாம் கர்த்தரின் நாமமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்ற பிதாவின் நாமத்தின் மேல் விசுவாசமுள்ளளவர்களாய் அவரை ஏற்றுக் கொள்ளுகிற யாவரும் அவருடைய பிள்ளைகளாகிடவும், அந்தப் பிள்ளைகள், இயேசு கிறிஸ்து யூதா கோத்திரமாதலால், அவர் பிள்ளைகளாகிய நாமும் யூதா கோத்திரமாகி, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் உடன் பங்காளிகளாக மாறக் கிருபை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கிருபை சுவிசேசத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புற

ஜாதிகளாகிய யூதா கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்டுள்ள புதிய நாமம் கிறிஸ்தவர்கள். இந்தக் கிறிஸ்தவர்களுக்கு மாமிச அடையாளமாய்க் கொடுக்கப்பட்ட அடையாளம் ஞானஸ்நானம்

இந்த சுவிசேசங்கள் யாவும் "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா. 20 : 31). மாமிசப் பிரமாணத்திற்கு அடையாளம் விருத்தசேதனம். ஆவியின் பிரமாணத்திற்கு அடையாளம் ஞானஸ்நானம். **இயேசுவே தேவன் என்றும், இயேசுவே கர்த்தர் என்றும் அவரன்றி, வேறே தேவர்கள் தேவர்களல்ல என்றும் விசுவாசிக்கச் சொல்லப்பட்ட சுவிசேசம் பொதுவான சுவிசேசம். நாமத்தை அறிக்கையிட்டு அந்த நாமத்தின் மூலம் பெறப்போகும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளச் சொல்லப்படுவது இராஜ்யத்தின் சுவிசேசம்.**

பொதுவான சுவிசேசம் மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. ராஜ்யத்தின் சுவிசேசம் இயேசுகிறிஸ்துவின் மூலம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. பொதுவான சுவிசேசம் சுவிசேசங்கள் மூலம் கொடுக்கப்பட்டது. ராஜ்யத்தின் சுவிசேசம் நடபடிகள், நிருபங்கள் மற்றும் விசேசங்கள் மூலம் கொடுக்கப்படுகிறது.

சுவிசேசத்தினை ஏற்றுக் கொள்பவர்களுக்கே நிருபங்கள். கிறிஸ்தவர்கள் ஆனவர்களுக்கே நிருபங்கள். ஏன் என்றால் எல்லா நிருபங்களும் விசுவாசிகளுக்கே

எழுதப்பட்டது. அவைகள் சுவிசேச வார்த்தையை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட சபையாருக்கு எழுதப்பட்டது. சுவிசேசத்தை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களுக்கு நிருபங்கள். நிருபங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்பவர்கள் விசுவாசித்து நடந்து கொள்ளவும், விசேசங்கள் காலங்களையும் காரியங்களையும் அறிந்து கொண்டு அந்த அந்தக் காலத்து விசேசங்களை அந்த அந்தக் காலத்தில் வெளிப்படுத்தப்படவும், அதனை ஏற்றுக் கொள்பவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கவும் எழுதப்பட்டுள்ளது.

இயேசு தேவனுடைய குமாரன் என்று அறிவிப்பது சுவிசேசம். சுவிசேசத்தை விசுவாசித்து "அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படி ..." (யோவான் 20 : 31) எழுதப்பட்டுள்ளது. அவருடைய நாமத்தினை அறிந்து கொள்வது நித்திய ஜீவனை அடையும்படிச் செய்யும். **"அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே"** (வெளி. 19 : 13). அந்த வார்த்தை அதினதின் காலத்தில் சொல்லப்படும் அதினதின் காலத்துக்குரிய சுவிசேச வார்த்தைகளாகும். அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து அதினதின் காலத்தில் அனுப்பப்பட்டு விசுவாசிக்கிற–வர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்து பிதாவினிடத்தில் திரும்பிச் செல்லும். அந்த அந்த வார்த்தைகளும் அதினதின் காலங்களும் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டு அவைகள் தீர்க்கதரிசனங்களாய் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாடு காலங்களிலும் அனுப்பப்பட்ட ஜீவனைக் கொடுக்கக்கூடிய வார்த்தைகள் பிதாவினிடத்திலிருந்து அனுப்பப்பட்டு அவைகள் நிறைவேறும்

காலத்தில் மீண்டும் பிதாவினிடத்திற்கு திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜீவன் எடுத்துக் கொள்ளப்பட்டது. வார்த்தை மாத்திரமே எழுத்தாக எழுதப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டுக் காலம் / ஆதாம் முதல் இயேசு கிறிஸ்து வரை

	ஜீவ வார்த்தை	யாருக்கு
1.	நன்மை தீமை அறியத்தக்க கனியைப் புசிக்காதே	ஆதாம்
2.	தேவனோடு சஞ்சரிக்க வேண்டும்	ஏனோக்கு
3.	பேழைக்குள் பிரவேசிக்க வேண்டும்	நோவா
4.	நியாயப்பிரமாணத்தின்படி நடக்க வேண்டும்	இஸ்ரவேலர்கள் 29முதல் 76வது தலைமுறை முற்பகுதி வரை.
5.	இயேசு கிறிஸ்துவை மேசியா என்றும் தேவனுடைய குமாரன் என்றும் விசுவாசிக்க வேண்டும்,	ஆதாமுக்கு 76 ம் தலைமுறையினரான பிற்பகுதியான இஸ்ரவேலருக்கு.

புதிய ஏற்பாட்டுக் காலம் :-

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தைகள் பிதாவான தேவனானவர் தமது ஆதினத்திலிருந்து சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்து இவைகளை இயேசுகிறிஸ்து தம்முடைய தூதனை அனுப்பி

அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினார் (வெளி. 1 : 1). அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட இந்த விசேசங்கள் அவைகள் நிறைவேறும் காலங்களில் பிதாவினிடத்திலிருந்து ஜீவனுக்குகேதுவான வார்த்தையாய் அனுப்பப்பட்டு அவைகள் நிறைவேறிய பின்னர் அந்த ஜீவன் பிதாவினிடத்திற்கும், வார்த்தை எழுத்து ரூபத்தில் ஜீவனற்ற நிலையிலும் இருக்கிறது. அந்த அந்தக் காலத்துக்கென அனுப்பப்பட்ட வார்த்தை, அந்த அந்த சபைக்குரியதாயும் அந்த அந்தக் காலத்திற்குரிய வார்த்தை ஜீவனுள்ளதாய் பிதாவான தேவன் தாம் முன் குறித்துத் தெரிந்து கொண்ட மாமிச சரீரத்தினைக் கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளதாயும் இருக்கிறது.

	ஜீவ வார்த்தைக்குரிய சபை	சபைக்குத் தூதன்	சபைக்கால அளவு
1.	எபேசு சபை	பவுல்	கி.பி. 53–170
2.	சிமிர்னா சபை	இரினேயஸ்	கி.பி. 170–312
3.	பெர்கமு சபை	மார்ட்டீன்	கி.பி. 312–606
4.	தியத்தீராசபை	கொலம்பியா	கி.பி. 606–1520
5.	சர்தை சபை	மார்ட்டீன் லூதர்	கி.பி. 1520–1750
6.	பிலதெல்பியா சபை	வெஸ்லி	கி.பி. 1750–1906
7.	லவோதிக்கேயா சபை	வில்லியம் பிரன்காம்	கி.பி. 1906–2005

ஏழு சபைக் காலங்களுக்குப் பின்னர் சம்பவிக்க வேண்டியவைகளை, கர்த்தர் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தி, அவைகள் நிறைவேறும் காலத்தில் நாம் இருக்கிறோம். இது வருகையில் எடுத்துக் கொள்ளப்படப் போகும் கர்த்தரின் ஜனத்திற்குக்

கொடுக்கப்படும் வார்த்தை. ஒவ்வொரு சபைக் காலத்திலும் அந்த சபைக்காலம் நிறைவேறிய பின்னர் அந்தக் சபைக் காலத்துக்கென கொடுக்கப்பட்ட ஜீவனும் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏழு சபைக் காலங்களும் நிறைவேறிய பின்னர் மணவாட்டி, சபைகளில் இருந்து வேறு பிரிக்கப்பட்டவளாய்க் காணப்பட வேண்டும் என்பதே ஜீவனுக்குரிய வார்த்தையாய் இருக்கிறது.

ஏழு இடி முழக்கங்களும் சத்தமிட்டு முழங்கியவைகளை அப்போஸ்தலனாகிய யோவான் எழுதாமல் முத்திரை போடச் சொல்லப்பட்டதால் (வெளி. 10 : 4) முத்திரையிட்டான். அவைகள் எழுந்த வண்ணமாய் எழுதப்படவில்லை. தேவ இரகசியம் இந்த 7 சபைக் காலங்களுக்கும் பின்னர் நிறைவேறும் என்று யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அந்த இரகசியங்கள் வெளிப்படுகிற காலம் நாம் ஜீவிக்கும் இந்தக் காலம். இது மணவாட்டி தன்னை அலங்கரிக்கும் காலம்.

அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் அவைகள் நிறைவேறும் காலம் வரையிலும் ஜீவன் உள்ளதாய்க் காணப்பட்டது. அவைகள் நிறைவேறிய பின்னர் அவைகளின் ஜீவன் பலனோடு பிதாவினிடத்தில் சென்றடைந்தது. வார்த்தை நிறைவேறிய பின்னர் வார்த்தையின் ஜீவன் பிதாவினிடத்தில் சென்றடைந்தது. ஆனால் ஜீவன் இழந்த வார்த்தை எழுத்தாய் மாத்திரமே காணப்படுகிறது.

"...அந்த வார்த்தை தேவனாய் இருந்தது" (யோவா. 1 : 1). அந்த வார்த்தைக்குள் ஜீவன் இருந்தது. அந்த வார்த்தை மனிதனுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்தது. அந்த வார்த்தை தன்னை விசுவாசித்தவர்களுக்கு ஜீவன் கொடுத்தது. அந்தக் காலம் நிறைவேறிய பின்னர் அது பிதாவினிடத்திற்குச் சென்றடைந்தது. எழுத்தாக மாறிய வார்த்தை மாத்திரமே பூமியில் காணப்படும்.

விருத்தசேதனம் மோசேயின் மூலம் நியாயப் பிரமாணத்தின் அடையாளமாகக் கொடுக்கப்பட்டது. நியாயப் பிரமாணம் நிறைவேறிய பின்னர் விருத்தசேதன அடையாளம் ஜீவனற்ற அடையாளமாய்க் காணப்பட்டது. விருத்தசேதனம் இல்லாதவன் கர்த்தரின் ஜனமல்ல என்று வார்த்தையானவர் சான்றளித்துள்ளார்.

A- விருத்த சேதனம்



எழுத்து – இன்னமும் விருத்தசேதனம் குறித்த எழுத்து பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது. ஆனால் இந்த விருத்தசேதனத்தினால் ஒரு பலனுமில்லை. இன்று இந்த விருத்தசேதன முறைமை வெறும் எழுத்தாக மாத்திரமே காணப்படுகிறது. இதில் ஜீவன் இல்லை.

இது போலவே ஒவ்வொரு சபைக்காலங்களும், அதற்கு அடையாளமாய் விளங்கும் ஞானஸ்நானமும் காணப்படுகிறது. இன்று சபைகள் வெவ்வேறு முறைமையின்படி இந்த ஞானஸ்நானத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தாலும், சபைக் காலங்கள் நிறைவேறியதால் இந்த முறைமை இருந்தாலும் ஒன்றுமில்லை இல்லாவிட்டாலும் ஒன்றுமில்லை. ஜீவனுக்குரிய பரிசுத்த ஆவியின் அடையாளமே காரியம்.

B- சபைக்காலங்கள்



எழுத்து → எழுத்து எழுத்தாக இருக்கிறது.

→ இந்த எழுத்து நிறைவேறியதால் அது ஜீவனைக் கொடுக்காது.

→ ஜீவ வார்த்தை தேவனிடத்திற்குத் திரும்பச் சென்றது.

C- ஞானஸ்நானம்



எழுத்து → நிறைவேறிய பிறகு
ஜீவனைக் கொடுக்காது

→ ஜீவ வார்த்தை
தேவனிடத்திற்கு திரும்பச்
சென்றடைந்தது.

தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட வார்த்தைகளுக்கு ஒத்திருக்கக் கூடிய வார்த்தையே ஜீவனுக்குரிய வார்த்தையாகும்.



தீர்க்கதரிசன வார்த்தைகளும் நிறைவேறிய பின்னர் அந்த வார்த்தையின் ஜீவன் விசுவாசித்தவர்களோடே பிதாவினிடத்தைச் சென்றடையும். ஜீவனற்ற நிலையிலே அந்த எழுத்து காணப்படும்.





வார்த்தை நிறைவேறிய பின்னரும் எழுத்து இருந்து வருகிறது. இந்த எழுத்து பூமி அழிக்கப்படும் வரையிலும் இருக்கும்.

பிதாவினிடத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் மூலம் அனுப்பப்படும் வார்த்தை அது நிறைவேறும் காலத்தில் மீண்டும் பிதாவினிடத்திற்குச் செல்லும். அது போலவே புற ஜாதிகளுக்கு இரட்சிப்பு என்ற வார்த்தையும், சபைக்காலங்கள் நிறைவேறிய பின்னர் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை வரையிலும் ஜீவன் உள்ளதாய் இருக்கும். இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பின்னர் கிருபை மீண்டுமாய் மாமிசப் பிறப்பாகிய இஸ்ரவேலரைச் சென்றடையும். இஸ்ரவேலருக்கு இரட்சிப்பு சென்றடையும் காலத்தில் புற ஜாதிகளுக்கு நித்திய ஜீவன் என்ற இரட்சிப்பு இல்லை. ஆனால் எழுத்தாகக் காணப்படும் வேதப்புத்தகம் புற ஜாதிகளிடத்திலும் இருக்கும். கிருபை முற்றிலுமாக எடுக்கப்பட்டு உபத்திரவத்தையும், மகா உபத்திரவத்தையும் கண்டு இந்தப் பூமி அழிக்கப்படும் வரையிலும் வேதாகமம் இன்னும் எளிமைப்படுத்தப்பட்டு புற ஜாதிகளிடத்திலும் இருக்கும். கிறிஸ்தவர்கள் பூமி அழிக்கப்படும் வரையிலும் இருப்பார்கள். ஞானஸ்நான முறைமை இருக்கும். தேவாலயங்கள் இருக்கும். இப்போது இருப்பதைவிட இன்னமும் அநேகப் பிரிவு சபைகள் எழும்பும். ஆனால் இரகசிய வருகைக்குப் பின்னர் கிறிஸ்தவர்கள் நித்திய ஜீவன் என்ற சுதந்திரத்தை இழந்து போவார்கள். எழுத்து இருக்கும். ஜீவன் இருக்காது.



இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படப் போகும் கிறிஸ்தவர்கள் ஆயிரம் வருடம் இந்த பூமியில் கிறிஸ்துவோடு சேர்ந்து அரசாளுவார்கள். இவ்வாறு 1000 வருட அரசாட்சியில் பங்கடையப் போகும் கிறிஸ்தவர்களுக்கு இன்றைக்கென்று அனுப்பப்பட்டிருக்கிற வார்த்தை:

"...என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்" (வெளி. 18 : 4).

இந்த வார்த்தையில் ஜீவன் இருக்கிறது. மிருகத்தின் முத்திரையைப் பெற்றிருப்பவர்கள் 1000 வருட அரசாட்சியில் பங்கடையப் போவதில்லை (வெளி. 20 : 4). அவர்கள் வருகையில் எடுத்துக் கொள்ளப்படப்போவதில்லை. ஜீவனுக்குரிய இந்த வார்த்தையை விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

கர்த்தர் தாமே உங்களுக்குக் கிருபையைக் கட்டளையிடுவாராக.

ஆமென்! ஆமென்!! ஆமென்!!!

3. இருள்

"…. நான் (இயேசு) உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார்" (யோவா. 8:12).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறார். அவரைப் பின்பற்றுபவர்கள் இருளிலே இல்லாமல் ஒளியை அடைவார்கள். அந்த ஒளி ஜீவனைக் கொடுக்கும். இயேசு கிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட அந்தக் காலத்துக்குரிய வார்த்தையாய் இருந்தார் (யோவா. 1 : 14). அந்த வார்த்தை உலகத்துக்கு ஒளியாய் இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்து வந்தது. அந்த வார்த்தை சுயமாய் வரவில்லை (யோவா. 8 : 42). அந்த வார்த்தை தான் உலகத்தாருக்கு ஒளி. அந்த வார்த்தையைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடப்பதில்லை. அந்த வார்த்தையைப் பின்பற்றுகிறவன் ஜீவ ஒளியை அடைவான்.

பிதாவை விசுவாசிக்கிறோம் என்று சொல்லி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசியாத யூதர்கள் பிதாவாகிய தேவனால் உண்டானவர்கள் அல்ல (யோவா. 8 : 47). அன்றைக்கென்று அனுப்பப்படுகிற வார்த்தை குமாரனாய் இருக்கிறது. அந்த வார்த்தையை விசுவாசித்துப் பின்பற்றுகிறவன் ஒளியை அடைவான். நித்திய ஜீவனைப் பெறுவான். ஒருவன் யாரிடத்தில் விசுவாசம் வைக்கிறானோ

அந்த விசுவாசமே அவனை யாரால் உண்டானவன் என்று வேறுபிரிக்கச் செய்கிறது.

ஒருவன் உண்மையிலே பிதாவை விசுவாசித்தால் அவன் குமாரனையும் விசுவாசிப்பான். குமாரனிடத்திலும் அன்பு கூறுவான். குமாரனை விசுவாசிக்கிறவன் பிதாவாகிய தேவனால் உண்டானவன். அவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவனை விசுவாசித்தபடியால் முற்பிதாக்களாகிய அவர்கள் பெற்ற ஜீவ ஒளியைப் பெற்றுக் கொள்வான்.

அவருடைய நாமத்தின் மேல் (வார்த்தையின் மேல்) விசுவாசம் உள்ளவர்களே அவரின் பிள்ளைகள் என்று கர்த்தர் சாட்சியிடுகிறார் (யோவா. 1: 12). அவருடைய நாமமாகிய அந்தக்கால வார்த்தையின் மீது (வெளி. 19 : 13) விசுவாசம் வைப்பவர்கள் பிதாவாகிய தேவனால் உண்டானவர்கள். அவர்கள் ஒளிக்குரியவர்கள். அவரது நாமமாகிய அந்தக் காலத்து வார்த்தையை விசுவாசியாதவர்கள், தாங்கள் பிதாவை விசுவாசிக்கிறோம் என்று அறிக்கையிட்டாலும் அவர்கள் குமாரனாகிய அந்தக் காலத்து வார்த்தையை விசுவாசியாதபடியினால் அவர்களைக் குறித்துக் கர்த்தர் "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள் ..." (யோவா. 8 : 44). என்று சாட்சியிடுகிறார்.

கேட்டின் மகனாகிய பாவமனுஷனாகிய பிசாசானவன் அந்தக் காலத்துக்குரிய வார்த்தையினை விசுவாசிக்க விடாதபடிக்குத் தடை செய்வான்.

தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் தந்திரமுள்ளதான சர்ப்பமாகிய

பிசாகும் கர்த்தர் கொடுத்த அந்தக் காலத்துக்குரிய வார்த்தையைத் தான் மீறச் செய்தான். விசுவாசிக்க விடாதபடிக்குத் தடை செய்தான்.

"சாகவே சாவாய்" என்ற கர்த்தரின் (ஆதி. 2 : 17) அன்றைக்குரிய வார்த்தையை விசுவாசிக்கச் செய்யாதபடிக்கு மாறான ஒரு வார்த்தையாகிய "சாகவே சாவதில்லை" (ஆதி. 3 : 4) என்ற வார்த்தையை விசுவாசிக்கச் செய்தான். அதனால் ஆதாம் ஜீவனுக்குரிய நிலையை இழந்து போனான்.

சர்ப்பமானது பிதாவாகிய தேவனை தேவன் என்றே அறிக்கையிடுகிறது (ஆதி. 3 : 1). பிதாவை விசுவாசிக்கும் விசுவாசத்திற்கு அது தடை செய்யவில்லை. அதற்கென்று அது நியமிக்கப்படவுமில்லை. அவன் குமாரனாகிய வார்த்தையின் மீது வைக்கப்பட வேண்டிய விசுவாசத்தை மாத்திரமே அவிசுவாசமாக மாற்றுவான். இருளுக்கு உரியவனாகிய பிசாசு அவிசுவாசமாகிய இருளினால் ஜீவனுக்குரியவனை இருளுக்குரியவனாக மாற்றுவான்.

ஒவ்வொரு சபைக் காலங்களிலும் பிதாவை அறிக்கையிடுவதைத் தடை செய்யவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுவதில் தடை செய்யவில்லை. அந்த அந்த சபைக்காலங்களுக்குரிய கர்த்தரின் வார்த்தையை, கர்த்தரிடத்திலிருந்து அனுப்பப்பட்ட வார்த்தையை விசுவாசிக்க விடாதபடிக்குச் செயல்பட்டு அவிசுவாசிகளாய் மாற்றி வந்துள்ளான். அவிசுவாசம் ஒளிக்குரியவர்களின் தேசமாகிய பரலோக இராஜ்யத்துக்குள் அழைத்துச் செல்லாது.

பரிசுத்த ஆவியானவரால் எழுப்பப்பட்ட திருச்சபைகள் அதினதின் காலத்திற்குப் பின்னர் வேசித்தனத்தினால் இருளுக்குரிய ஸ்தலமாக மாற்றுபவன் பிசாசு (வெளி. 18 : 3, 19 : 2). விசுவாசிகளை இருளுக்குரியவர்களாக மாற்றுபவன் சத்துரு. ஐஸ்வர்யவான் ஒருவன் இயேசு கிறிஸ்துவிடம் வந்து, தான் நித்திய ஜீவனைச் சுதந்தரிக்க என்ன செய்ய வேண்டும் என்ற கேட்ட பொழுது அவர் உன்னுடையவைகளை எல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு என்னைப் பின்பற்றி வா என்று கூறினார் (மத். 19 : 16–21). நியாயப்பிமாணத்தில் உன்னுடையதை விற்றுத் தரித்திரருக்குக் கொடு என்று எந்த ஒரு பிரமாணமும் சொல்லப்படவில்லை. ஆனால் அவன் உலகப்பொருளின் மீது கொண்ட நம்பிக்கையினை அகற்றக் கர்த்தர் கொடுத்த வார்த்தை அவனை நியாயப் பிரமாணத்தை மீறியவனாகவே கொண்டு சென்றது.

அந்த அந்தக் காலத்துக்குரிய வார்த்தைகளைப் பரிசுத்த ஆவியானவர் பிதாவினிடத்திலிருந்து அதினதின் காலத்தில் கொண்டு வருகிறார். கொண்டு வரப்படுகிற அந்த வார்த்தையே குமாரனாய் இருக்கிறது. இந்த வார்த்தையே உலகத்துக்கு ஒளியாய் இருக்கிறது. இந்த வார்த்தையைப் பின்பற்றுகிறவன் ஜீவ ஒளியை அடைவான் என்று கர்த்தர் சாட்சியிடுகிறார். அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்ளாதவன் இருளில் இருக்கிறான். குமாரனாகிய அந்த வார்த்தையை விசுவாசிப்பவர்கள் ஒளிக்குரியவர்கள். அந்த வார்த்தையை விசுவாசியாதவர்கள் இருளுக்குரியவர்கள்.

ஒவ்வொரு திருச்சபையின் காலங்களிலும் அந்தத் திருச்சபையின் காலங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் தமது

தூதர் மூலம் கொடுத்த வார்த்தையை விசுவாசித்தவர்கள் ஒளிக்குரியவர்களாகவும், விசுவாசியாதவர்கள் இருளுக்குரியவர்களாகவும் இருந்து வந்துள்ளனர்.

ஏழுதிருச்சபைகளும், தூதர்களும் அதற்குரிய காலங்களும்:

	சபை	தூதன்	சபைக்காலம்
1.	எபேசு சபை	பவுல்	கி.பி. 53–170
2.	சிமிர்னா சபை	இரினேயஸ்	கி.பி. 170–312
3.	பெர்கமு சபை	மார்ட்டீன்	கி.பி. 312–606
4.	தியத்திராசபை	கொலம்பா	கி.பி. 606–1520
5.	சர்தை சபை	மார்ட்டீன் லூதர்	கி.பி. 1520–1750
6.	பிலதெல்பியா சபை	வெஸ்லி	கி.பி. 1750–1906
7.	லவோதிக்கேயா சபை	வில்லியம் பிரன்காம்	கி.பி. 1906–2005

இவைகளுக்குப் பின்னர் மணவாட்டி அலங்கரிக்கப்படும் காலம்.

1. இக்காலத்திலே கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்படுத்தப்படுவான்.

2. அவன் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத் தான் தேவனென்று காண்பிப்பதை வெளிப்படுத்தும் காலம் (2தெச. 2 : 3–6).

3. மணவாட்டிக்கென இரண்டாம் வானம், தயாராக்கப்படும்படிக்கு தற்போது அதனை ஆளுகை செய்து கொண்டிருக்கும் வலுசர்ப்பத்தைத் தள்ளிவிடும் பொருட்டு மிகாவேலும் அவனைச் சார்ந்த தூதர்களும் யுத்தம் செய்து கொண்டிருக்கும் காலம் (வெளி. 12 : 7–9).

4. வலுசர்ப்பத்தின் அதிகாரம் பெற்ற சபைக் கோட்பாடுகளாகிய மிருகமானது (வார்த்தையின்) விசுவாசிகளோடே யுத்தம் பண்ண எழும்பும் காலம் (வெளி 13 : 4,7).

மேற்கூறியவைகளில் முதல் இரண்டு காரியங்களும் சம்பவித்து விட்டது. 3–வது காரியமான யுத்தம் தற்போது வானமண்டலத்தில் நடந்து கொண்டிருக்கிறது. 4–வது காரியம் இந்நாள் வரையிலும் ஆரம்பமாகவில்லை. வான மண்டலத்தில் நடக்கும் யுத்தத்தின் இறுதிக்காலத்தில் பூமியில் இது எழும்பும். இவைகள் சம்பவித்து முடிந்ததும் கிருபை புறஜாதிகளை விட்டு எடுக்கப்பட்டு மீண்டும் மீதமுள்ள 1,44,000 இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படத் திரும்பும். இவ்வாறாகவே வேதம் சாட்சியிடுகிறது. பரிசுத்த ஆவியானவரும் ஆம் என்றே திருவளம் பற்றுகிறார்.

ஒவ்வொரு சபைக் காலங்களிலும் தூதன் மூலமாக அனுப்பப்பட்ட வார்த்தையை ஏற்றுக் கொண்டு நடந்தவர்கள் ஜீவ ஒளியைப் பெற்றார்கள். ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருளுக்குரியவர்களாகி ஆக்கினைத் தீர்ப்புக்குக் காத்திருக்கிறவர்களாய் இருக்கிறார்கள். அது போலவே வார்த்தையைவிட்டு விலகி, கொள்கையின் விபரீதங்களாய் விளங்கும் திருச்சபையின் கோட்பாடு என்ற (மிருகம்) முத்திரையைப் பெற்ற ஆத்துமாக்களும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படுவார்கள் (வெளி. 20 : 10,14,15).

விசுவாசிகள் ஒளிக்குரியவர்களாய் நித்திய ஜீவனையும், விசுவாசியாதவர்கள் இருளுக்குரியவர்களாய் ஆக்கினைத் தீர்ப்பையும் அடைவார்கள்.

இயேசுகிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட நாளில் காணாமல் போன இஸ்ரவேல் வீட்டாருக்காகவே தாம் அனுப்பப்பட்டதாய் சாட்சி கொடுத்துள்ளார் (மத். 15 : 24). அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது (யோவா. 1 : 4). அவர் தமக்குச் சொந்தமானதிலே (இஸ்ரவேலரிடத்தில்) வந்தார். அவருக்குச் சொந்தமான இஸ்ரவேலரோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை (யோவா. 1 : 11). ஏற்றுக்கொண்டவர்கள் ஒளிக்குரியவர்களாயும், ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருளுக்குரியவர்களாயும் இருந்தார்கள்.

ஜீவனைக் கொடுக்கக் கூடிய அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனாய் யோவான் ஸ்நானகன் இருந்தான். அவன் அந்த ஒளியல்ல. அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க அனுப்பப்பட்டவன் (யோவா. 1 : 8). அவன் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனாய் இருந்தான் (யோவா. 1 : 23). அவன் பரிசேயன், சதுசேயன், வேதபாரகன், லேவியன் போன்ற யாதொரு பிரிவினையும் சாராதவனாய் இருந்தான். அவன் அந்த ஒளியைக் குறித்து சாட்சி கொடுத்த சாட்சியாய் இருந்தான் (யோவா. 1 : 7).

சாட்சி, அன்றைக்கென்று அனுப்பப்படும் வார்த்தையைக் குறித்துச் சாட்சி கொடுக்கும். முடிவு வருவதற்கு முன்னதாகப் பரலோக இராஜ்யத்தினுடைய சுவிசேசம் சாட்சியாய் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும் (மத். 24 : 14). சாட்சி ஒளியல்ல. சாட்சி, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்கும்.

“கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்”

இந்த ஜீவனுக்குரிய ஒளி மனுஷனுக்குள் வந்து அவர்களைப் பிரகாசிக்கச் செய்கிறது (யோவான். 1 : 9). இருளாய் மரணத்துக்குள்ளான இஸ்ரவேலருக்குள் அந்த ஒளி அனுப்பப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட இஸ்ரவேலர் ஜீவனைப் பெற்றனர். யாரெல்லாம் அந்த ஒளியினிடத்தில் வந்தார்களோ அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றார்கள்.

அப்போஸ்தல நாட்களில் இயேசுவைக் கர்த்தர் என்று அப்போஸ்தலர்கள் அறிக்கையிட்டனர். இயேசுவைக் கர்த்தர் என்று விசுவாசித்தவர்கள் ஒளியைப் பெற்றார்கள். ஒளியைப் பெற்றவர்கள் நித்திய ஜீவனைச் சுதந்தரித்தார்கள். விசுவாசியாத புற ஜாதியார் இருளில் இருந்தார்கள். இருள் மரணம். புறஜாதியாருக்கு நியமிக்கப்பட்ட காலங்கள் நிறைவேறும் வரையிலும் இஸ்ரவேலருக்குள் ஒளி அனுப்பப்படுவதில்லை. ஒளியில்லாததால் ஜீவன் இல்லை. ஜீவன் இல்லாததால் பரலோகம் என்ற சுதந்திரத்தில் இக்காலங்களில் பங்கு இல்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேசம் சொல்லி வந்த நாட்களிலே புறஜாதியில் உள்ள ஜனங்களில் (இஸ்ரவேலர், இஸ்மவேலர் அல்லாதவர்கள்) சுவிசேசத்தை ஏற்றுக் கொண்டவர்கள். ஒளியைக் கண்டார்கள். ஒளியைப் பெற்றவர்கள் நித்திய ஜீவனைச் சுதந்தரித்தார்கள். சுவிசேசத்தின் மூலமாகவே அந்த ஒளியாகிய ஜீவன் கொண்டு செல்லப்பட்டது. புற ஜாதிகளில் யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவைத் தேவன் என்று விசுவாசித்தார்களோ, ஏற்றுக்கொண்டார்களோ அவர்கள் அந்நாட்களில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள்.

அந்த அந்த திருச்சபையின் காலங்களிலும் இதுபோலவே அந்த அந்த திருச்சபையின் தூதன் மூலமாய்க் கொடுக்கப்பட்ட வார்த்தை ஒளியாயும், அந்த சுவிசேச வார்த்தைகளை ஏற்றுக் கொண்டவர்கள் ஒளியையும், அந்த ஒளியின் மூலம் நித்திய ஜீவனையும் பெற்றார்கள். விசுவாசியாத ஜனங்கள் இருளுக்கு உரியவர்களாய் இருந்தார்கள். 5–ம் தூதனான மார்ட்டின் லூதரின் காலங்களில் பிரிவினையாளர் சபையைச் சார்ந்தவர்கள் ஒளிக்குரியவர்களாயும், அது அல்லாத பிரிவைச் சார்ந்தவர்கள் இருளுக்குரியவர்களாகவும் இருந்தார்கள். 7–ம் திருச்சபையின் காலத்தில் இயேசுகிறிஸ்துவின்நாமமே பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் என்றும், அந்த நாமத்தின் மூலம் பெறும் ஞானஸ்நானமே பரிசுத்த ஆவியைத் தரும் எனவும், உரைக்கப்பட்ட வார்த்தை ஒளிக்குரியதாயும், விசுவாசித்தவர்கள் ஒளிக்குரியவர்களாயும் இருந்தார்கள். ஏற்றுக் கொள்ளாத அவிசுவாசிகள் இருளுக்குரியவர்களாய் இருந்தார்கள்.

ஒளிக்குரியவர்கள் நித்திய ஜீவனைச் சுதந்தரித்தார்கள். இருளுக்குரியவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குக் காத்திருக்கிறார்கள்.

பிசாசென்றும், சாத்தானென்றும், பழைய பாம்பாகிய சர்ப்பம் என்றும், வலுசர்ப்பம் என்றும் அழைக்கப்படும் இந்தக் காட்டு மிருகத்தின் முக்கியான நோக்கமோவென்றால் "ஒளிக்குரிய வார்த்தைக்குச்" செவி கொடாதபடிக்குக் கள்ளத் தீர்க்கதரிசியின் வார்த்தைக்குத் திருப்புவதேயாகும்.

– அன்றைக்குரிய வார்த்தை தீர்க்கதரிசனம்!

– அன்றைக்குரிய வார்த்தைக்கு மாறான வார்த்தை கள்ளத் தீர்க்கதரிசனம்!

– அன்றைக்குரிய வார்த்தைக்குக் கொடுக்கப்படுவது ஒளி!

– அன்றைக்குரிய வார்த்தைக்கு எதிரானது இருள் !

– அன்றைக்குரிய வார்த்தைக்குக் கொடுக்கப்படுவது பரிசுத்த ஆவி!

– அன்றைக்குரிய வார்த்தைக்கு எதிரானது அசுத்த ஆவி!

– அன்றைக்குரிய வார்த்தைக்குக் கொடுக்கப்படுவது நித்திய ஜீவன்!

– அன்றைக்குரிய வார்த்தையை மீறினால் ஆக்கினைத் தீர்ப்பு!

ஒளி – ஜீவன்!!

இருள் – மரணம்!!

பகல் – ஒளிக்குரிய பொழுது

இரவு – இருளுக்குரிய பொழுது.

கர்த்தருடைய நாள் "... இருளும் அந்தகாரமுமான நாள்" (யோவே. 2 : 1,2). கர்த்தர் முன்குறித்த நாளானது இருளான வேளையிலான ஒரு காலம். இருள் என்றால் சூரியன் உதிக்காத பொழுது இல்லை. கர்த்தரைக் குறித்த அறிவு இல்லாத காலமே இந்த இருளான காலம். இப்படியாக இருளாய் இருக்கும் நேரத்தில் தான் கர்த்தரின் நாள் வரும்.

அந்த நாள் ஒளிக்குரியவர்களான விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இருளுக்குரியவர்களான மரணத்துக்கு உரியவர்களை மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கும் நாள்.

இருளுக்குரியவர்கள் - பிசாசுக்குரியவர்கள்

ஒளிக்குரியவர்கள் - கர்த்தருக்குரியவர்கள்

இருளுக்குரியவர்கள் திரள் ஜனம் . அவர்கள் அநேகராய் இருப்பார்கள். ஒளிக்குரியவர்கள் சிறு கூட்டம். அந்த சிறு கூட்டமே ஒளியை ஏற்றுக் கொள்ளும். ஒளியை விசுவாசிக்கும். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும். விசுவாசியாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்படைவார்கள்.

இருளுக்குள் வெளிச்சத்தைக் கொண்டுவருவது கர்த்தருடைய வார்த்தை (2பேது. 1 : 19). இந்த வார்த்தை சுயமாய் வராது. அது பரிசுத்த ஆவியானவர் மூலம் பரத்திலிருந்து அனுப்பப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் மூலம் கொடுக்கப்படும் வார்த்தையே உலகத்துக்கு ஒளியாய் இருக்கிறது. அந்த வார்த்தையே உயிர்ப்பிக்கிறதாய் இருக்கிறது.

குமாரன், தீர்க்கதரிசிகள் மூலம் உரைக்கப்பட்ட வார்த்தையாகும். அந்த வார்த்தை அது நிறைவேறும் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் மூலம் வெளிப்படும். வெளிப்படும் அந்த வார்த்தை சுவிசேசமாய்ச் சொல்லப்படும். சுவிசேச வார்த்தைகளை விசுவாசிப்பவர்கள் ஒளியைப் பெற்றுக்கொள்வார்கள். ஒளிக்குரியவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். இருளுக்குரியவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

குமாரனாய் மாமிசத்தில் வெளிப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்ப்பிக்கிற ஆவியானவர். இவர் புற ஜாதிகளை உயிர்ப்பிக்கிற பிந்தின ஆதாம் (1கொரி.15 : 45). இந்த பிந்தின உயிர்ப்பிக்கிற ஆவியான, பிதாவாகிய பிந்தின ஆதாமின் பிள்ளைகள் தான் இப்போதிருக்கிற கிறிஸ்தவர்கள் அனைவரும். கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் பிதாவானவர் 2000ம் ஆண்டுகளுக்கு முன்னதாக மாமிசத்தில் வெளிப்பட்டவர். பிதாவின் நாமமாகிய இயேசு கிறிஸ்து என்ற நாமத்தின் மேல் விசுவாசம் வைத்தபடியினால் நாம் பிதாவாகிய அவரின் பிள்ளைகள் ஆகிறோம். அந்த பிதாவானவரின் மூலமாய் அனுப்பப்பட்ட வார்த்தையே ஏழு சபைக் காலங்களிலும் குமாரனாய்க் காணப்பட்டது. அந்த வார்த்தை அந்த அந்தக் காலங்களில் ஒளியாய் இருந்தது.

இயேசு கிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட காலத்தில் பிதாவை விசுவாசித்த இஸ்ரவேலர்கள் போல கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பார்கள். அவரை உலக இரட்சகர் என்று விசுவாசிப்பார்கள். அவரை மேசியா என்று விசுவாசிப்பார்கள். இயேசுகிறிஸ்துவாகிய அன்றைக்குரிய வார்த்தையை இஸ்ரவேலர்களில் அநேகர் விசுவாசியாதது போல கிறிஸ்தவர்களிலும் அநேகர் அன்றைக்குரிய வார்த்தையாகிய குமாரனை விசுவாசியார்கள்.

குமாரனை உடையவர்களே ஜீவனை உடையவர்கள். குமாரனை விசுவாசிப்பவர்களே நித்திய ஜீவனைப் பெறுவார்கள். இயேசு கிறிஸ்து யாரை பிதா என்று அறிக்கையிட்டாரோ அவரையே அன்றைய இஸ்ரவலர்களும் தேவன் என்று சொன்னார்கள் (யோவா. 8 : 54). ஆனால் அவரிடத்திலிருந்தும், அவராலும் அனுப்பப்பட்ட

இடையனிலிருந்துவாகிய குமாரனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனைத்தான் அன்று ஏதேன் தோட்டத்தில் இருந்த சர்ப்பமும் செய்தான். அதைத்தான் இன்று தேவலாயத்தில் இருக்கும் வலுசர்ப்பமும் செய்து கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு காலங்களிலும் அவ்வாறாகவே இருளுக்குரியவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். இருளுக்குரியவர்கள் மரணத்துக்கு உரியவர்கள். மரணத்துக்குரியவர்கள் பிசாசினால் உண்டானவர்கள்.

குமாரன் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் (யோவா. 16 : 8). குமாரனை விசுவாசியாவிட்டால் அது பாவம் (யோவா. 16 : 9, 8 : 24), (யோவா. 19 : 11). குமாரன் பிதாவிடத்திலிருந்து புறப்பட்டு மறுபடியும் உலகத்தைவிட்டு பிதாவினிடத்திற்கே போகிறவர் (யோவா. 16 : 28). குமாரன் பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து அனுப்பப்பட்டு மீண்டும் பிதாவின் வலது பாரிசத்திற்கே திரும்பச் செல்கிறார் (அப். 7 : 55). வலது மகிமைக்குரிய ஸ்தலம். ஏழு சபைக்குரிய தூதர்களும் பிதாவாகிய மனுஷகுமாரனின் வலது புறத்திலிருந்து அனுப்பப்பட்டு மீண்டும் அவரின் வலது புறத்திற்கே திரும்பச் சென்றிருக்கிறார்கள் (வெளி. 1 : 16,20). வலதுபுறமிருந்து புறப்படுவது சத்திய ஆவி. வலது புறமுள்ளவர்கள் பிதாவினால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் (மத். 25 : 34). வலது புறமுள்ள ஆடுகள் செம்மறியாடுகள். செம்மறியாடுகளே நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டு பரலோக சுதந்திரத்தை அடையும்.

இடதுபுறமுள்ளது பொய்யின் ஆவி. கர்த்தருக்கு முன்பாக பரமசேனையெல்லாம் அவரது வலது பக்கத்திலும் அவரது இடது பக்கத்திலும் நின்றிருக்கும் போது ஒரு ஆவி

புறப்பட்டு எல்லார் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது (1 இராஜா. 22 : 19–23). அந்தப் பொய்யின் ஆவி கர்த்தரின் சிங்காசனத்திற்கு இடப்புறமிருந்தது. இடது புறமுள்ளளவர்கள் சபிக்கப்பட்டவர்கள் (மத். 25 : 41). இடது புறமுள்ளவர்கள் பிசாசும் அவன் தூதர்களும். அவர்கள் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவார்கள் (மத். 25 : 41).

வலது புறத்திலிருந்து அனுப்பப்படும் தூதர்கள் நித்திய ஜீவனுக்கும், இடது புறத்திலிருந்து அனுப்பப்படும் தூதர்கள் இருளாகிய மரணத்துக்கும் உரியவர்கள். இடது புறத்திலுள்ள அவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்கு அழைத்துச் செல்வார்கள். இடது புறம் வெள்ளாடு (மத். 25 : 33).வெள்ளாடு சத்தியத்தைத் தரையிலே தள்ளும் (தானி. 8 : 12). வெள்ளாடு பாழாக்குகிறவனைப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டு வரும். வெள்ளாடு கர்த்தருக்குச் செலுத்தக்கூடிய அன்றாட பலியை நீக்கிவிடும். அன்றாட பலியைப் பிசாசுக்கு இடும்.

ஆடுகள் விசுவாசிகள். குமாரனாகிய அன்றைக்குரிய வார்த்தையை **விசுவாசிப்பவர்கள் செம்மறியாடுகள்.** பிதாவை விசுவாசித்து குமாரனாகிய அந்தக் காலத்துக்குரிய வார்த்தையை விசுவாசியாத **அவிசுவாசிகள் வெள்ளாடுகள்.** நியாயத் தீர்ப்பும், ஆக்கினைத் தீர்ப்பும் ஆடுகளுக்குத் தான். ஆடுகள் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்களில் கர்த்தரின் வலது புறத்திலிருந்து அனுப்பப்படும் தூதர்களின் வார்த்தையை விசுவாசிப்பவர்களுக்கு நித்திய ஜீவன். கிறிஸ்தவர்களில் கர்த்தரின் இடது புறத்திலிருந்து அனுப்பப்படும் தூதர்களின் வார்த்தையை விசுவாசிப்பவர்களுக்கு இரண்டாம் மரணம். அது அக்கினியும் கந்தகமும் எரியும் கடலில் கொடுக்கப்படும் ஆக்கினைத் தீர்ப்பு.

பாபிலோனாகச் சித்தரிக்கப்பட்டுள்ள இன்றைய சபைகள் யாவும், இந்த மணவாட்டியின் அலங்கார காலத்தில் (கி.பி. 2005–க்குப் பின்னர்) கர்த்தரின் இடப்புறமுள்ள தூதர்களின் (கள்ளத் தீர்க்கதரிசிகள்) வார்த்தையைக் கொண்டு வருபவர்கள். பாபிலோனும் கர்த்தருடைய கையில் உள்ள பொற்பாத்திரமே (எரே. 51 : 7). அதன் கையில் இருப்பது வேசித்தனத்தின் உக்கிரமான மது (வெளி. 18 : 3). அது இடப்புறமுள்ள ஸ்தலத்துக்குரிய வெள்ளாடுகளுக்கு உலக மயக்கமாகிய அந்த மதுவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

கர்த்தரின் வலது புறத்துக்குரிய செம்மறியாடுகளே நீங்கள் "பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரம் ஆகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி அவரவர் தங்கள் ஆத்துமாக்களைத் தப்புவியுங்கள்" (எரே. 51 : 6), "என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும் அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள் (வெளி. 18 : 4)" என்று கர்த்தர் தமது வலது புறத்திலிருந்து அனுப்பப்படும் ஆவியினால் திருவளம் பற்றுகிறார்.

பாபிலோனை விட்டு வெளியேறிய பின்னர் மணவாட்டி அலங்கரிக்கப்படுகிறாள். வார்த்தையினால் அவர் கொடுக்கும் அலங்காரம் முடிந்ததும் மணவாளனோடு சேர அவள் எடுத்துக் கொள்ளப்படுவாள். வலதுபுறத்து ஆடுகள் பாபிலோனை விட்டு வெளியேறும். குமாரனை விசுவாசிக்கும். அப்போஸ்தலனாகிய பவுலும் கொலொசெயருக்கு எழுதின நிருபத்தில் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில்

வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் என்று வலப்புறத்து ஆடுகளுக்கு பரிசுத்த ஆவியானவர் மூலம் வார்த்தையைக் கொடுத்துள்ளார் (கொலொ. 3 : 1,2).

வலப்புறம் ஒளிக்குரிய ஸ்தலம்.

இடப்புறம் இருளுக்குரிய ஸ்தலம்.

வலதுபுறத்தில் சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி ஒளியின் தேசத்தை அடைந்தான். இடதுபுறம் அறையப்பட்ட குற்றவாளி ஆத்தும மரணத்துக்கு நியமிக்கப்பட்டவன் ஆனான். வலதுபுறம் இருந்தவன் ஏற்றுக்கொண்டான். இடதுபுறம் இருந்தவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

குமாரனை விசுவாசித்தால் மாத்திரமே இருள் நீங்கும். ஒளி வந்து சேரும். இருளில் இருக்கும் ஜனத்திற்கு ஒளியைக் கொடுக்க அனுப்பப்படுபவரே குமாரன். அந்தக் குமாரனில் ஒளி இருக்கிறது. அந்த ஒளியே மனிதனுக்கு ஜீவனைக் கொடுக்கும். ஆத்துமாவை நித்திய ஜீவனுக்குள் அழைத்துச் செல்லும். குமாரன் அந்தக் காலத்துக்குரிய வார்த்தையாய் இருக்கிறது. அந்த வார்த்தை ஒளியாய் இருக்கிறது. அந்த வார்த்தை ஜீவனைக் கொடுக்கிறது.

இருள்–மரணம். ஒளி–ஜீவன். இருளுக்குரியவர்கள் இரண்டாம் மரணத்துக்குரியவர்கள். ஒளிக்குரியவர்கள் நித்திய ஜீவனுக்குரியவர்கள். இருள் முந்தினது. ஒளி பிந்தினது (ஆதி. 1 : 2,3). ஒளிக்குரியவனாக உருவாக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம். உருவாக்கப்பட்ட ஆத்துமா உள்ள முதல் மனிதன் ஆதாம். உருவாக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம் அல்ல.

கர்த்தர் ஜீவ சுவாசத்தை ஆதாமின் நாசியில் ஊதினார். ஆதாம் ஜீவாத்துமாவானான். ஆதாமுக்குள் ஒளி கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட அந்த ஒளியை இருளாக்கியவன் பிசாசு. சர்ப்பம் அவனை வஞ்சித்தது (ஆதி. 3 : 13). வஞ்சகத்தின் மூலம் வார்த்தையாகிய குமாரனுக்கு மாறாக ஒரு போதகத்தைக் கொடுத்தான். அதன் மூலம் ஜீவனுக்குரியவனாய் இருந்தவன், ஒளிக்குரியவனாய் இருந்தவன், இருளுக்குரியவன் ஆனான்.

குமாரன் மீது விசுவாசம் வைத்துப் பெற்றுக் கொண்ட ஒளியை இருளாக்காதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். "உன்னில் உள்ள வெளிச்சம் இருள் ஆகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" (லூக். 11 : 35). ஒளிக்குரியவனாக நியமிக்கப்பட்டவனே ஆதாம். ஆத்துமாவைப் பெற்ற ஆதாம் மாமிசத்திற்குரியவனாக மாத்திரம் அல்லாது ஆவிக்குரியவனாகவும் காணப்பட்டான்.

"அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படி தானே ...." (மல். 2 : 15). ஆத்துமாவாகிய ஜீவனுக்குரியவனை அதைப் போல ஆத்துமா உள்ள தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படியாக அவனை உருவாக்கினார். .முதலாவதாக ஒளிக்குரியவனாக உருவாக்கப்பட்டவன் இருளுக்குரியவனாக மாறினான். அவன் இரண்டாம் மரணமாகிய ஆத்தும மரணத்துக்குரியவன் ஆனான். ஆதாமின் மாமிசப் பிறப்பாகிய ஆபேல் நித்திய ஜீவனுக்குரியவன் ஆனான் என்று வேதம் சாட்சியிடுகிறது. அவன் மரித்தான் இன்னமும் பேசுகிறான் (எபி. 11 : 4). என்று வேதம் சாட்சியிடுகிறது.

ஆத்துமா பெற்றவன்

(1) ஆதாம்

↓

காயீன் (இருள்)	ஆபேல் (ஒளி)	(2) சேத் (இருள்) (மாமிசம்)
↓		↓
ஏனோக்கு		(3) ஏனோஸ்
↓		↓
ஈராத்		(4) கேனான்
↓		↓
மெகுயவேல்		(5) மகலாலெயேல்
↓		↓
மெத்தூசவேல்		(6) யாரேத்
↓		↓
லாமேக்கு		(7) ஏனோக்கு (ஒளி)
↓		

யாபால்   பூபால்   தூபால்காயீன்   நாமான்

ஆதாமுக்கு 2ம் தலைமுறையில் ஆபேல் ஒளிக்குரியவன் ஆனான். ஆதாமுக்கு 7–ம் தலைமுறையில் ஏனோக்கு ஒளிக்குரியவன் ஆனான். மீதமுள்ள ஆதாமின் சந்ததியான யாவரும் இருளுக்குரியவர்கள் ஆனார்கள். அவர்கள் தங்கள் தகப்பனாகிய ஆதாமைப் போல ஒளியை இழந்து இருளைப் பற்றிக் கொண்டார்கள். மரணத்துக்கு உள்ளானவர்கள் ஆனார்கள்.

ஏனோக்கு
(ஒளி)
மாமிசம் → (8) மெத்தூசலாம்
↓
(9) லாமேக்கு
↓
(10) நோவா (ஒளி)

ஏனோக்குப் பின்னர் ஆதாமுக்கு 10ம் தலைமுறையினனான நோவா ஜீவனுக்குரியவன் ஆனான். இந்த 10 தலைமுறையினருக்குள்ளும் ஆபேல், ஏனோக்கு, நோவா என்ற 3 பேர் மாத்திரமே ஒளிக்குரியவர்களாய் இருந்தார்கள். மீதமுள்ளவர்கள் இருளுக்குரியவர்களாகி 2ம் மரணத்துக்குள்ளானவர்கள் ஆனார்கள்.

நோவா காலத்தில் குமாரனாக அனுப்பப்பட்ட அன்றைக்குரிய வார்த்தையாகிய பேழையைக் கட்டி அதனுள் பிரவேசித்தான். அவன் குமாரனை விசுவாசித்த படியால் அவன் ஒளியைப் பெற்றுக் கொண்டான். அந்த ஒளி அவனுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்தது.

இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட போது, கர்த்தர் தமது நாமமாகிய யேகோவா என்ற நாமத்தில் வெளிப்பட்டார் . யேகோவா தேவன் கொடுத்த குமாரன் அன்று நியாயப்பிரமாணம். நியாயப்பிரமாணத்தின்படி நடந்தவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றார்கள். மோசே, தாவீது, சாமுவேல் போன்றோர் ஒளிக்குரியவர்களாய் இருந்தார்கள்.

நோவா (10)

சேம் (ஒளி) — காம் (இருள்) — யாபேத் (மாமிசம்)

21வது தலைமுறை ஆபிரகாம்(ஒளி)

(22) ஈசாக்கு (ஒளி) — இஸ்மவேல் (இருள்) — கேத்தூராளின் பிள்ளைகள் (மாமிசம்)

(23) யாக்கோபு (ஒளி) — ஏசா (இருள்)

(இஸ்ரவேலர்கள் (12 கோத்திரப் பிதாக்கள்)

ரூபன் சிமியோன் லேவி யூதா தாண் நப்தலி காத் ஆசேர் இசக்கார் செபுலோன் யோசேப்பு பென்யமீன்

யூதா (24ம் தலைமுறை)

↓

இயேசு கிறிஸ்து (76வது தலைமுறை)

↓

பவுல் (ஒளி)

↓

புறஜாதிகள் (கிறிஸ்தவர்கள்)

↓

ஆவிக்குரியவர்கள் | மாமிசத்திற்குரியவர்கள்

ஆவிக்குரியவர்கள் ↓

குமாரன்
(பரிசுத்த ஆவி)
(ஒளி)

↓

வலதுபுறத்து
தூதனின் வார்த்தை (7 திருச்சபைக் காலங்கள்)
(கி.பி 53–2005)

↓

1. வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்
மணவாட்டிக்குரிய காலம்
(கி.பி. 2005 முதல்
(ஒளி)

2. மணவாட்டி
- வார்த்தைக்குரியவள்
- பரிசுத்த ஆவிக்குரியவள்

உலகத்தின் ஆவி
(பிசாசு)
(இருள்)

இருள்

↓

வஞ்சகத்தின்
மூலம் ஒளியை இழந்த
கிறிஸ்தவர்கள்

பாபிலோனின் வஞ்சகத்தினால் வஞ்சிக்கப்பட்டவர்கள் இருளுக்குரியவர்கள். பாபிலோனின் வேசித்தனத்திற்கு இடம் கொடாதவர்கள் ஒளிக்குரியவர்கள். கர்த்தருடைய செம்மையான வழியை ஏதேன் தோட்டம் முதல் புரட்டிக் கொண்டு வருபவன் வஞ்சக ஆவியினனான பிசாசு/சர்ப்பம்.

மாமிசப் பிறப்பாகிய இஸ்ரவேலரை பாபிலோனுக்குள் சிறைப்பட்டுப் போக கி.மு.626 – 584 வரையிலான காலங்களில் தீர்க்கதரிசனமாக, தீர்க்கதரிசியான எரேமியா மூலமாக அறிவிக்கப்பட்டது. யோயாக்கீம் & சிதேக்கியா காலத்தில் பாபிலோன் இராஜா சிறைப்படுத்தினான்.

பாபிலோனாகத் திகழும் திருச்சபைகளை (ஸ்தாபனங்களை) விட்டுத் தங்களை விடுவித்துக் கொள்ள, கர்த்தரின் வலப்புறத்து மந்தையாகிய செம்மறியாடுகளுக்குக் கர்த்தர் கொடுக்கும் இந்தக் காலத்துக்குரிய வார்த்தையானது அப்போஸ்தலனாகிய யோவனுக்குப் பத்மு தீவில் இருந்தபோது வெளிப்படுத்தப்பட்டது (வெளி 18 : 4). தீர்க்கதரிசனமாய் அன்று உரைக்கப்பட்டது நிறைவேறக் கூடிய காலத்தில் நாம் இருக்கிறோம்.

இருளுக்குரியவர்களாகிய அவிசுவாசிகளோடே பிணைக்கப்படாதிருங்கள்! (2கொரி. 6 : 14–18).

உங்கள் இருதயம் கர்த்தரை நோக்கித் திருப்பப்படுவதாக !

இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது எடுத்துக் கொள்ளப்படும் ஆத்துமாக்கள் ஒளிக்குரியவர்கள், ஜீவனுக்குரியவர்கள். இந்த ஜீவனுக்குரியவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர், ஜீவனுக்குரிய ஆத்துமாவைப் பெற்ற ஜனங்கள் புறஜாதியில் இருப்பதில்லை. மரணத்துக்குரிய

ஆத்துமாவைப் பெற்ற ஜனங்களோ தங்களின் மாமிச மரணத்திற்குப் பின்னர் எரிநரகத்துக்கு ஒப்புவிக்கப் படுவார்கள். இவைகளுக்குப் பின்னர் ஆத்துமா இல்லாத உயிர் உள்ள ஜனங்கள் இருப்பார்கள். கிறிஸ்தவம் என்ற மதமும், அந்த மதத்துக்குரியவர்களும் இந்த பூமியில் கடைசி பரியந்தமும் இருப்பார்கள். பூமி ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டு அக்கினியினால் சுட்டெரிக்கப்படும் வரையிலும் கிறிஸ்தவம் என்ற மதம் இருக்கும். இந்த மதத்தைப் பின்பற்றக்கூடிய ஜனங்களும் இருப்பார்கள். ஆனால் அந்த ஜனங்கள் மறுமை என்ற நித்திய ஜீவனைப் பெறமாட்டார்கள்.

கிருபையின் நாட்கள் முடிவடையும் முன்னர் கர்த்தரின் நாமமாகிய தேவனுடைய வார்த்தையின் மீது விசுவாசமுள்ளவர்களாய் மாறுங்கள். ஒளிக்குரியவர்களாய் மாறுங்கள். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வீர்கள்.

கர்த்தர் தாமே உங்களுக்கு கிருபையைக் கட்டளையிடுவாராக!

ஆமென்! ஆமென் !! ஆமென்!!!

கர்த்தர் தம்முடைய இரகசிய வருகைக்குப் பின்னதாக குமாரனாகிய அந்தக் காலத்து வார்த்தையைப் புறஜாதிகள் மத்தியில் அனுப்பமாட்டார். புறஜாதிகளின் காலம் நிறைவேறும் போது ஜனங்கள் தங்கள் கிரியைகளை விட்டு மனம் திரும்ப மாட்டார்கள் (வெளி. 16 : 11). மனிதனுடைய கிரியைகள் பொல்லாங்கானதாய்த் தோன்றுவதால் அவர்கள் ஒளியினிடத்திற்குத் திரும்பமாட்டார்கள்.

மனிதனின் ஞானம் வளரும் போது மனிதன் கர்த்தரோடு இடைபடுவதையும், அவரிடத்தில் வைக்கும்

விசுவாசத்தையும் இழந்து போகிறான். அது அவனை ஒளிக்குள் அழைத்துச் செல்லாது. **நன்மைதீமை அறிந்து, உருவாக்கவும் அழிக்கவும் தக்கதான ஞானம் மனிதனிடத்தில் வளரும் போது அவன் அறிவுக் கண்கள் திறக்கப்படும்** (ஆதி. 3 : 5). **அந்த அறிவு அவனை இரண்டாம் மரணத்துக்குள் கொண்டு செல்லும். மனிதனை இருளுக்கு உரியவனாக மாற்றும்.**

இருள் தற்போது பூமியை மூடிக்கொண்டிருக்கிறது. காரிருள் ஜனங்களை மூடிக் கொண்டிருக்கிறது. மனிதனின் ஞானமாகிய ஒளி கர்த்தரை அறியக்கூடிய ஞானமாகிய ஒளியை விசுவாசிக்க விடாமல் கர்த்தரை அறியக்கூடிய அறிவில் இருளாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஞானம் பரத்திலிருந்து அனுப்பப்பட்ட ஞானம் அல்ல. இந்த ஞானம் இம்மைக்குரியது.

இருள் பூமியை மூடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் கர்த்தரின் வார்த்தையை விசுவாசியுங்கள். கர்த்தர் உங்கள் மேல் உதிப்பார். எந்த மனுஷனையும் உயிர்ப்பிக்கும் மெய்யான ஒளி உங்களை உயிர்ப்பிக்கும்.

"எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது" (ஏசா. 60 : 1).

விசுவாசிகளுக்கு அடையாளமான பரிசுத்த ஆவியையும் அதன் பலனாகிய நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்வீர்களாக !

கர்த்தர் தாமே கிருபையைக் கட்டளையிடுவாராக !

ஆமென்! ஆமென்!! ஆமென்!!!

4. முறைமை

கர்த்தருடைய வார்த்தைக்குள்ளாகக் கட்டப்படக் கிருபையைக் கொடுத்துள்ள தேவனாகிய கர்த்தர் தமது நாமத்தின் மூலம் தமது ஜீவ வார்த்தைகளை அதினதின் காலத்தில் வெளிப்படுத்திக் கொண்டே வருகிறார். அந்த வார்த்தையின் மூலம் கட்டப்படக் கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிற மகா கிருபைகளுக்கு கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சதாகாலங்களிலும் உண்டாவதாக!

நீங்கள் கர்த்தரின் மாளிகையாய் இருக்கிறீர்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னது போல, கிறிஸ்துவின் மாளிகையாய் நீங்கள் கட்டப்படக் கர்த்தர் தமது வார்த்தை என்ற கல்லினால் உங்களை அலங்கரிக்கச் சித்தமுள்ளவராய் இருக்கிறார். இந்தக் கல்லாகிய வார்த்தை நீங்கள் கட்டப்படக் கர்த்தரின் கிருபையை ஈட்டித் தருவதாக! ஆமென்! கர்த்தரால் கட்டப்படுகிற நீங்கள் பரிசுத்த ஆவியானவர் வந்து தங்கி உங்கள் மூலம் மகிமைப்பட அனுக்கிரகம் செய்வாராக! வார்த்தையானவர் நித்திய ஜீவன் வரையிலும் உங்களைச் சத்தியத்துக்குள்ளாக வழி நடத்துவாராக! ஆமென்!

நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வு நாளில் ஒருவன் யாதொரு வேலையும் செய்யக்கூடாது. அவ்வாறு வேலை செய்கிறவன் கற்பனையை மீறியபடியால் அவன் கல் எறிந்து கொல்லப்பட வேண்டும். இது மோசேயின் மூலம் கர்த்தர்

கொடுத்த கட்டளை. ஆனால் இயேசு கிறிஸ்து மாமிசத்தில் இருந்த நாட்களில் எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னும் குளத்தருகே 38 வருடமாக வியாதியில் இருந்த மனிதனைக் கண்டார். கர்த்தர் அவனை நோக்கி **"எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட"** என்றார் (யோவா. 5 : 8).

ஒய்வுநாள் கட்டளை முறைமை, ஒய்வுநாளினைக் கட்டளையிட்டவரால் மாற்றியமைக்கப்பட்டது. நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றவே நான் வந்தேன் என்று கர்த்தரும் அறிக்கை செய்துள்ளார் (மத். 5:17). மோசேயின் மூலம் கற்பனையாய் கட்டளையிடப்பட்ட விருத்தசேதன முறைமை மாற்றியமைக்கப்பட முன் அனுப்பப்பட்டவனாக யோவான் ஸ்நானகன் அனுப்பப்பட்டான். அங்கே விருத்தசேதனம் என்ற முறைமை மாற விருத்தசேதனம் பெற்ற யூதர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஒரு சுழற்சி முடியும் போது ஒரு புதிய கிருபை முறைமையாக வெளிப்படுத்தப்படுகிறது. முந்திய பழைய சாசனம் மாற்றியமைக்கப்படுகிறது.

கர்த்தரின் வார்த்தையை விசுவாசித்துத் தன் படுக்கையை எடுத்துச் சென்ற மனுஷனை நோக்கி யூதர்கள் உன் படுக்கையை ஒய்வுநாளில் எடுத்துக் கொண்டு போகிறது நியாயமல்ல என்றார்கள் (யோவா. 5 : 10). ஆனால் சுகமான மனிதன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர் உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்று எனக்குச் சொன்னார் என்றான். சுகமானவன் யூதர்களுடைய எதிர்ப்புக்குக் கலங்கவில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தையின்படி தனது கிரியைகளைச்

செய்தான். தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான். ஓய்வு நாள் பிரமாணம் மீறியதாக அறிவிக்கப்பட்டாலும், அந்த மீறுதலினால் கிடைக்கப்போகும் யாதொரு காரியத்தையும் குறித்து அவன் அஞ்சவில்லை.

தன்னிடத்தில் சொல்லப்பட்ட வார்த்தையை விசுவாசித்தான். அதனுக்கேற்ற கிரியைகளைச் செய்தான். நடைமுறையில் இருந்து வந்த முறைமைக்கு மாறாகக் கொடுக்கப்படும் போதகமாய் அது பிறருக்குக் காணப்பட்டாலும், கர்த்தரால் சுகத்தைப் பெற்ற மனிதன் அந்த முறைமையை மீறுவதில் யாதொரு கலக்கமோ, மாறுபாடோ வெளிப்படுத்தாமல், என்னைச் சுகப்படுத்தியவர் "உன் படுக்கையை எடுத்துக் கொண்டு போ" என்றார், நான் போகிறேன் என்றான். எனவே யூதர்கள் சுகப்படுத்திய வேலையைச் செய்த கிறிஸ்து மீது கோபம் கொண்டார்கள். சுகம் பெற்ற மனிதனிடம் இருந்த அந்த விசுவாசம் உங்களிடம் இருக்குமானால், இன்றைக்குரிய கர்த்தரின் வார்த்தையைக் கொண்டு ''மரத்தினை வேரோடே பிடுங்குண்டு, நடுச் சமுத்திரத்திற்குப் போ'' என்று கட்டளையிட்டால், அது அவ்வாறே ஆகும். ஆமென்!

சுகம் பெற்ற மனிதன் ஓய்வு நாளாகிய இன்று நீ படுக்கையை எடுத்துக் கொண்டு போகாதே என்று சொன்ன யூதர் ஜனங்களுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்திருப்பானேயானால், அவன் பெற்ற சுகத்தை இழந்து போனவனாகவே அவன் காணப்பட்டிருப்பான். ஆனால் அவன் தான் பெற்ற சுகத்தினைக் காத்துக் கொள்வதில் கருத்துள்ளவனாக இருந்தான். அவன் தனக்குச் சுகம்

கொடுத்த வார்த்தையை மறுதலித்தவனாகவோ, மீறியவனாகவோ செயல்படவில்லை.

அந்த விசுவாசம் உங்களிடம் இருந்தால் விடுதலைக்கென்று இந்தக் காலத்துக்காக கர்த்தர் கொடுக்கும் வார்த்தையினைக் கொண்டு அநேகரை விடுவிக்க உங்களால் கூடும். பரிசுத்த ஆவியானவரும் ஆம் என்றே திருவளம் பற்றுகிறார். ஆமென்! ஆமென்!

வெறும் மாமிச அடையாளமாய்க் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் ஒரு மனிதனைப் பரலோகத்துக்கு அழைத்துச் செல்லாது. ஆவியின் முத்திரையாகக் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவியைப் பெற்று ஆவிக்குரியவர்களாய் மாறுங்கள். அப்போது ஆவிக்குரியோர் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வீர்கள். வெறும் மாமிச அடையாளம் ஜீவனுக்குரிய இரட்சிப்பைக் கொடுக்காது. அப்போஸ்தலனாகிய யோவானுக்குக் கர்த்தர் வெளிப்படுத்திக் கொடுத்த விசேசத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாபிலோனும், அவள் குமாரத்திகளுமாகிய இன்றையத் திருச்சபைகள் வெறும் மாமிச அடையாளமாகிய ஞானஸ்நானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த மாமிச அடையாளம் ஜீவனுக்கேதுவான இரட்சிப்பைக் கட்டளையிடாது. இன்றைய சபைகள் தங்களைப் பிற சபைகளிலிருந்து வேறு பிரிப்பதற்காகவே இந்த ஞானஸ்நானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

வெறும் மாமிச அடையாளமாய்க் கொடுக்கப்படும் இந்த ஸ்நானம் இருந்தாலும் ஒன்றுமில்லை! இல்லாவிட்டாலும்

ஒன்றுமில்லை ! இந்த முறைமை மாற்றியமைக்கப்படும். இந்த முறைமை நிறைவேறித் தீருங்காலத்தில் நாம் ஜீவிக்கிறோம். இது வருகையின் போது கர்த்தர் எடுத்துக் கொள்ளப்போகும் மணவாட்டிக்காகக் கொடுக்கப்படும் தேவசத்தம்! கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்!!

ஞானஸ்நானம் என்ற முறைமை கொணரப்பட ஒரு காலம். இப்படி எல்லா நீதியும் நிறைவேற வேண்டும் எனக் கர்த்தரும் சாட்சி கொடுத்துள்ளார். இந்த நீதி அதற்கென்று கொடுக்கப்படும் காலம் வரையிலும் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த நீதி நிறைவேற்றப்படும் காலம் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின் காலம். இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பின்னர் இந்த நீதியால் இரட்சிக்கப்பட்ட புற ஜாதிகளுக்குக் கொடுக்கப்பட்ட கிருபை முடியும். அந்தக் கிருபை நித்திய ஜீவன்.

புற ஜாதிகளின் காலம் நிறைவேறியபின்னரும், இன்று விருத்தசேதனம் என்ற முறைமை மாமிசத்தில் செய்யப்படுவதுபோல, ஞானஸ்நானம் என்ற முறைமையும் மாமிசத்தில் செய்யப்படும். ஆனால் இந்த முறைமையைக் கட்டளையிட்ட கர்த்தர் அந்த ஜனங்களோடே இடைப்படமாட்டார். நித்திய ஜீவன் என்ற கிருபையும் இனி கொடுக்கப்படமாட்டாது. ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியை உருவாக்கவே இந்த நீதி கொடுக்கப்பட்டது. ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டி புறஜாதி. மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் இந்த நீதி இருந்தாலும் ஒன்றுமில்லை. இல்லாவிட்டாலும் ஒன்றுமில்லை.

கிருபையின் கடைசி காலத்தில் இருக்கும் நாம், நித்திய ஜீவனாம் கிருபையைச் சுதந்தரித்துக் கொள்வோம். மாமிசத்திற்குரியவர்கள் மத்தியிலிருந்து உங்களை விடுவித்து, ஆவிக்குரியவர்களாய் மாறுங்கள். ஆவிக்குரியவர்கள் தேசத்தைச் சுதந்தரிக்கக் கர்த்தர் கிருபையைக் கட்டளையிடுவாராக. ஆமென்!

வருகைக்கு மணவாட்டியானவள் தகுதியான வஸ்திரத்தினால் அலங்கரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் நாம் வந்திருக்கிறோம். அந்த வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதி (வெளி. 19 : 8). அந்த நீதிக்குரியவர்களாய் மாறுவோம்.

கடைசிக்கால வார்த்தைக்குரியவர்களாய் மாறுவோம்!

கர்த்தர் தாமே கிருபையை உங்கள் அனைவருக்கும் கட்டளையிடுவாராக!

ஆமென்! ஆமென்! ! ஆமென்!!!

5. நிர்வாணம்

இஸ்ரவேலர்களுக்கு யேகோவா என்ற நாமத்தில் இரட்சிப்பைக் கட்டளையிட்ட தேவனாகிய கர்த்தர் இந்தக் கடைசி காலத்திலே இயேசு கிறிஸ்து என்ற நாமத்திலே இரட்சிப்பைப் புறஜாதிகளாகிய நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். “புற ஜாதிகளுக்கு இரட்சிப்பு”என்ற கர்த்தரின் வார்த்தையாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நமக்கு இந்த கிருபையைக் கட்டளையிட்டிருக்கிறார். கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து மூலமாய் உண்டாயிருக்கிறது (யோவா. 1 : 1,14,17). புற ஜாதிகளாகிய நமக்கு (மாமிசப்பிறப்பாகிய ஆபிரகாமின் சந்ததியல்லாதோர்) இயேசு கிறிஸ்து என்ற இரட்சிப்பின் வார்த்தையின் மூலம் பரலோக சுதந்திரம் என்ற இரட்சிப்பினைக் கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

கிறிஸ்து இயேசு மாமிசத்தில் பிறந்து 2011 ஆண்டுகள் ஆகியிருப்பதை உலக சரித்திரமே பிரிக்கப்பட்டுச் சாட்சியிடுகிறது. கிறிஸ்துவுக்கு முன்னர், கிறிஸ்துவுக்குப் பின்னர் என்று பிரிக்கப்பட்டிருப்பதே இந்தச் சாட்சி. ஆதாமின் சந்ததியில் வந்த ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்ததியில் ஈசாக்குக்கும், அவனுக்குப் பின்னர் யாக்கோபுக்கும், யாக்கோபு இஸ்ரேவேலாக மாற்றப்பட்டு அந்தச் சந்ததிக்கும் மாமிசத்தில் கிறிஸ்து ஜனனமாவதற்கு முன்னர் வரையிலும் கிருபையாகிய பரலோக சுதந்திரம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்து மாமிசத்தில் உற்பத்தியான பிறகு இந்தக் கிருபை

புறஜாதிகளாகிய நமக்குக் கொடுக்கப்பட்டது. **கிறிஸ்து பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்துப் பின்னர் அடக்கம் செய்யப்பட்டுப் பின்னர் 3ம் நாளில் உயிர்த்தெழுந்த பின்னர் பரிசுத்த ஆவியானவர்க்கு இயேசு கிறிஸ்து என்ற நாமம் தரிப்பிக்கப்பட்டு, அந்த நாமத்தின் மூலம் கிறிஸ்துவுக்குப் பின்னர் புற ஜாதிகளாகிய நமக்குக் கிருபை கட்டளை இடப்பட்டுள்ளது. இந்தக் கிருபை நித்திய ஜீவன்.**

●

கிறிஸ்துவுக்குப் பின்னர் புறஜாதிகளுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையானது இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். நித்திய ஜீவன் என்ற கிருபை புறஜாதிகளுக்குள் இராது. இப்படி நித்திய ஜீவன் என்ற கிருபையைப் புறஜாதிகள் இழந்து போகும்முன்னர் அது எடுத்துக் கொள்ளப்படப் போவதைப் பரிசுத்த ஆவியானவர் முன்னறிவிக்கிறார். அது எக்காள சத்தமாய் முன்னறிவிக்கப்படும். அது நிறைவேறும் காலத்தில் தேவ இரகசியங்கள் வெளிக் கொணரப்படும். இவ்வாறாகவே வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் தமது தீர்க்கதரிசிகள் மூலம் முன்னறிவித்துள்ளார்.

தீர்க்கதரிசிகள் மூலம் முன்னறிவிக்கப்பட்ட காரியங்கள் அனைத்தும் நிறைவேறத்தக்கதான காலத்தில் நாம் ஜீவிக்கிறோம். நித்திய ஜீவன் என்ற கிருபை புறஜாதிகளை விட்டு எடுத்துக்கொள்ளப்படப்போகிறது. அன்று கோடாரியானது இஸ்ரவேலர் என்ற மரத்தின்கீழே வைக்கப்பட்டது போல, இன்று கோடாரியானது புறஜாதி என்ற மரத்தின்கீழே வைக்கப்பட்டுள்ளது.

பூமியின் வரலாறு

ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்ட ஜனம்
(பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக)

↑

ஆதாம் → ஜீவ ஆத்துமா
உள்ள முதல் மனிதன்

கிறிஸ்துவுக்கு
முன்னர் (கி.மு.)

→ **கிறிஸ்து பிறப்பு**

கிறிஸ்துவுக்குப்
பின்னர் (கி.பி)

2011–இந்த ஆண்டு

↓

கிறிஸ்துவின் இரகசிய வருகை
(காலத்தை மாத்திரம் நிதானிக்கலாம்)
(ஆண்டு – கர்த்தர் தாமே அறிவார்)

↓

பூமியில் மனிதர்கள் முற்றிலுமாக அழிக்கப்படும் காலம்
(இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் சென்ற பின்னர்)

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து இது வரையிலும் 105 தலைமுறைகள் ஆகிறது.

ஆதாம் (ஆத்துமா உள்ள 1வது மனிதன்)

↓

இயேசுகிறிஸ்து (76வது தலைமுறை)

↓

நாம் ஜீவிக்கும் கி.பி. 2011ம் வருடம்
(29 வது தலைமுறை)

↑ (கி.மு.)
இயேசுகிறிஸ்து
↓ (கி.பி.

இரகசிய வருகையின் காலத்திற்குப் பின்னர் நித்திய ஜீவன் என்ற கிருபை இராது. 105 தலைமுறைகளாக இந்த பூமியில் குடியிருக்கும் ஜனங்கள் பெற்றுக் கொண்டிருக்கும் கிருபையை இந்தப் பூமி இழந்து போகும் காலம் மிகவும் சமீபமாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்குத் தனது மணவாட்டியை அலங்கரிக்கும் காலம் நாம் தற்போது இருக்கும் இந்தக் காலம். கர்த்தர் தாம் எடுத்துக் கொள்ளும் மணவாட்டி நிர்வாணியாய் இருப்பதை அவர் விரும்பவில்லை. தன் மானத்தைக் காக்காத நிலையில் இருக்கும் நிர்வாணியை அவர் மணவாட்டியாக எடுத்துக் கொள்வதில்லை. மணவாட்டியின் வஸ்திரம் தரித்தவளே மணவாட்டி. அந்த மணவாட்டியையே ஆட்டுக்குடியானவர் தமது இரகசிய வருகையில் எடுத்துக் கொள்வார்.

அப்போஸ்தலனாகிய யோவானுக்கு, பத்மு தீவிலே இருந்த போது, தம்முடைய ஊழியகாரருக்கு காண்பிக்கும் பொருட்டு வெளிப்படுத்தின விசேசத்திலே 7 (ஏழு) சபைகளைக் குறித்து வெளிப்படுத்தியுள்ளார். அவைகளை 7–ம் சபையின் காலத்தில் அதற்கென்று முன்குறித்த சரீரத்தின் மூலம் முன்குறித்த காலத்தில் கர்த்தர் அறிவித்தார்.

	சபையின் பெயர்	தூதன்	காலம்
1.	எபேசு சபை	பவுல்	கி.பி. 53–170
2.	சிமிர்னா சபை	இரினேயஸ்	கி.பி. 170–312
3.	பெர்கமு சபை	மார்ட்டீன்	கி.பி. 312–606
4.	தியத்தீராசபை	கொலம்பியா	கி.பி. 606–1520
5.	சர்தை சபை	மார்ட்டீன் லூதர்	கி.பி. 1520–1750
6.	பிலதெல்பியா சபை	வெஸ்லி	கி.பி. 1750–1906
7.	லவோதிக்கேயா சபை	வில்லியம் பிரன்காம்	கி.பி. 1906–2005

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 7 சபைக் காலங்களும் நிறைவேறிய பின்னர் சம்பவிக்க வேண்டியவைகளை யோவானுக்கு வெளிப்படுத்தின விபரமாவது:

(1) **பரலோகத்தில் வாசல் திறக்கப்படுதல் (வெளி. 4 : 1)**

(2) **வானத்தில் சிங்காசனம் வைக்கப்படுதல் (வெளி. 4 : 2)**

அந்தச் சிங்காசனத்தில் இருந்து மின்னல்களும், இடிமுழக்கங்களும், சத்தங்களும் புறப்பட்டன என்று வெளிப்படுத்தப்பட்டது போல (வெளி. 4 : 5) சத்தங்கள் தொனிக்கப்படும் காலம் நாம் தற்போது ஜீவிக்கும் காலம். எதிர் கொண்டு போகக் காத்திருக்கும் கன்னியர்களுக்கு "இதோ மணவாளன் வருகிறார், புறப்படுங்கள்" என்று உண்டான சத்தம் போல (மத். 25 : 6) அறிவிக்கப்படும் வார்த்தையின் சத்தம் தொனிக்கப்படும் காலம் நாம் ஜீவிக்கும் காலம்.

தன் மானம் காக்கப்படத் தகுதியான வஸ்திரம் தரிக்க, நிர்வாணத்தை வெளிக் கொணரும் சத்தமே இதுவாகும்! ஆமென்!

ஒரு பெண் குழந்தை மணவாட்டியின் தன்மையை அடைவதற்கு ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த வயது அவள் திருமணம் செய்து கொடுக்கப்படச் சரீரத்திலும், மனதிலும் தகுதியானவள் என்று திட்டம் பண்ணப்படும் வயது. அதே போலத்தான், புற ஜாதியிலிருந்து இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையிலும் எடுத்துக் கொள்ளப்படப் போகும் மணவாட்டியின் தகுதியும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைப் பருவம்

↓

சரீரத்தில் வளர்ச்சி

↓

பூப்பெய்தல்

↓

சரீரவளர்ச்சி

↓

மணப்பெண்

இவ்வாறாகவே கர்த்தரும் தமது ஆதீனத்தில் ஆட்டுக்குடியானவரின் மணவாட்டி எப்படியான வளர்ச்சியில் வரவேண்டும் என்று திட்டம் செய்துள்ளார். கர்த்தர் தமது ஆதீனத்தில் குறித்தபடியாக இந்த மணவாட்டியானவளும் சரீரத்திலும், சிந்தையிலும் வளரவேண்டும். மாமிசத்திற்குரிய வளர்ச்சியிலும், ஆவிக்குரிய வளர்ச்சியிலும் அவள் வளர வேண்டும். மாமிசத்திற்குரிய வளர்ச்சியில் இன்று புறஜாதி என்ற இந்த கிறிஸ்தவ இனம் உலகம் முழுவதும் வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு அவளுக்குக் கொடுக்கப்பட்ட ஊட்டம் பலதரப்பிலிருந்து பல தன்மைகளில் கொடுக்கப்பட்டது. இன்று உலகத்திலே அதிகமான அளவு விசுவாசிகளைக் கொண்ட மதம் கிறிஸ்தவ மதம். இன்று சரீரத்தில் கிறிஸ்தவர் என்ற இந்த மணவாட்டி திரட்சியான வளர்ச்சியைக் கண்டுள்ளாள். இவள் சரீரத்தில் கண்டுள்ள வளர்ச்சி மாமிசத்தில் பூரணப்பட்ட வளர்ச்சி.

இந்த உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களைக் கொண்ட உலகமாக மாறாது. இதில் இருக்கக்கூடிய கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையின் அளவு மற்ற மதத்தாரை விட அதிகப்படியாக இருக்க வேண்டும். இது அவளின் திரட்சி.

மணவாட்டி பூரணப்பட்ட பின்னர் அவளின் கன்னித்தன்மை மாறும் போது இந்தத் திரட்சியும் மாறும். அதுபோலக் கன்னித் தன்மையான கன்னிகை மணவாளனோடு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் இந்தத் திரட்சியின் அளவும் மாறும்.

மாமிசத்தின் வளர்ச்சி மாத்திரம் மணவாட்டியாக மாறக் கூடிய தகுதியைப் பெறுமா? பெறாது.

அவள் சிந்தையிலும், தன்நிலை அறிவதிலும் வளர்ச்சி அடைய வேண்டும். தன்நிலை அறியாதவள் சரீரத்தின்படி வளர்ச்சி அடைந்தாலும் மணவாட்டியின் தன்மைக்குரியவளாய் இருக்கமாட்டாள். சரீரத்தின் வளர்ச்சியில் 21 வயது நிரம்பி இருக்கக் கூடிய ஒரு பெண் சிந்தையிலும் செயல்பாட்டிலும் அந்த வயதுக்குரிய பக்குவமும் அறிவும் இல்லாமல், இன்னமும் 3 வயது சிறுமிக்கொத்தச் செயல்பாட்டுடன் இருந்தால், அவள் திருமணம் என்ற இடைபாட்டுக்குள் கடந்து செல்லத் தகுதியற்றவளாகிறாள். மணவாட்டி சரீரத்திலும், சிந்தையிலும் தகுதி என்ற பருவம் கண்டவளாக இருக்க வேண்டும்.

அது போலவே இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின் காலத்தில் எடுத்துக் கொள்ளப்படப் போகும் கிறிஸ்தவரில், இந்தக் கன்னிகையும் மாமிச அளவிலும், கிறிஸ்துவை அறிகிற அறிவின் அளவிலும், தன்னிலை அறிகிற அறிவின் அளவிலும் வளர்ச்சியடைய வேண்டும்.

இவைகளை அறிந்து கொள்வதற்காகவே பரத்திலிருந்து வரும் வார்த்தைகள் இடி முழக்கங்களாகவும், சத்தங்களாகவும் வெளிக் கொணரப்படும் என்று கர்த்தர்

தமது தூதனை அனுப்பி அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தி உள்ளார்.

பிறப்பு – கி. பி. 53
(பவுலின் காலம்)
↓
சபைக்காலங்கள்–6 (2 முதல் 7 வரை)
↓
சரீரத்திலும் சிந்தையிலும் வளர்ச்சி
(கி.பி.53 முதல் 2005 வரையிலும்)
↓
வளர்ச்சியில் பூரணப்படுதல் (கன்னிகைப் பருவம்)
↓

2005க்குப் பின்னர்

→ காத்திருக்கும் காலம்

→ அலங்கரிக்கப்படும் காலம்.

இந்தக் காத்திருப்பின் காலத்தில் அலங்கரிக்கப்படும் காலத்தில் கடைசி எக்காள சத்தம் பூலோக முழுவதும் தொனிக்கப்பட்ட பின்னர் மறுரூபமாக்கப்பட்டு புத்தியுள்ள கன்னிகை எடுத்துக் கொள்ளப்படுவாள். நீங்கள் புத்தியுள்ள கன்னிகைகளாக வேண்டும் என்பதற்காக்வே கொடுக்கப்படும் வார்த்தையின் சத்தம் இன்றைக்குரிய வார்த்தை. கர்த்தருடைய கிருபை உங்களைத் தாங்குவதாக. ஆமென்! ஆமென்!! ஆமென்!!!

பிறப்பின் காலத்தில் கொடுக்கப்பட்ட வார்த்தை, "நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டுக் கர்த்தரிடத்தில் திரும்புங்கள்" என்றும் (அப். 14 : 15), தேவர்கள் அல்லாதவர்களை விட்டு ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள் என்றும் (கலா. 4 : 8,9)

கொடுக்கப்பட்டது. இயேசுவைக் கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கையிடவேண்டுமென்றும் கொடுக்கப்பட்டது. புற ஜாதியாய்ப் பிறந்து இஸ்ரவேலின் தேவனை அறியாதிருந்த நமக்கு, கிருபையாய் இயேசு கிறிஸ்து என்ற நாமத்திலே இஸ்ரவேலின் தேவனை அறியவும், அவர் நாமத்தின் மூலம் கிருபையாகிய நித்திய ஜீவனைப் பெறவும் சுவிசேசம் சொல்லப்பட்டது. இது பிறப்பின் காலம்.

தன் பிறப்பின் காலத்திலே தொப்புள் கொடி அறுக்கப்படாமலும், தண்ணீரினால் கழுவப்படாமலும் இருந்தது போலவே புறஜாதிகளின் மார்க்கத்தையும் அவர்களின் வழிபாடுகளையும் கொண்டு பூப்பெய்திய பின்னரும், கன்னிகைப் பருவம் அடைந்த பின்னரும் 3 வயது சிறுபெண்ணைப் போல கிறிஸ்துவைப் பற்றிய சிந்தை கொண்ட கன்னிகையும் இப்போது உண்டு. அவைகளில் ஒன்று 1–வது திருச்சபையைச் சார்ந்த அப்போஸ்தலரின் வழித் தோன்றல் என்று தன்னை அறிவிக்கும் போப்பினைத் தலைவராகக் கொண்டு செயல்படும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையே.

பிறப்பின் காலத்தில் சொல்லப்பட்ட சுவிசேசம் புறஜாதிகள் தங்கள் தேவர்களை விட்டு கிறிஸ்து இயேசுவைத் தேவனாக அறிக்கையிட வேண்டும். ஏற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவனாக மாற வேண்டும். அதனால் பூமிக்குரிய ஆசீர்வாதத்தினால் தன்னை வளர்க்க வேண்டும். தன்னிலை உணரவேண்டும்.

எனவே சுவிசேசத்தை ஏற்றுக் கொண்டும், சுவிசேசத்தை அறிவித்தும் வந்த நாடுகள் வல்லரசுகளாகவும்,

செல்வந்த நாடுகளாகவும் பூமியில் வளர்ந்து வந்துள்ளது. இது சரித்திரம் சான்றிடும் உண்மை.

ஒவ்வொரு சபைக் காலங்களிலும் சொல்லப்பட்ட வார்த்தைகள், அந்த அந்தக் காலங்களில் கிறிஸ்துவைப் பற்றி அறியக் கூடிய அறிவில் வளர்ச்சி அடைய, அந்த அந்தக் காலங்களில் சொல்லப்பட்ட சுவிசேசங்களாகும். இவ்வேழு சபைக் காலங்களின் நிறைவில், வெவ்வேறு சபைக் காலங்களில் அறிவிக்கப்பட்ட வார்த்தையின் அளவின்படியே கிறிஸ்துவைப் பற்றி அறியக்கூடிய அறிவின் வளர்ச்சியில் தங்கள் விசுவாசிகளை அச்சபைகள் வைத்துள்ளது.

சபைக் காலங்கள் நிறைவு பெற்ற பின்னர், தேவ இரகசியங்கள் சத்தங்களாய் வெளிப்படும். இவ்வாறு சத்தங்களாய் வெளிப்படும் தேவ வார்த்தைகளைச் சபைகளின் வளர்ச்சிக்கு நியமிக்கப்பட்ட 7 திருச்சபைகளும் ஏற்றுக்கொள்ளாதிருக்கக் கூடிய நிலை ஏற்படுமாதலால் கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு, புத்தியுள்ள கன்னிகைகளுக்குத் தம்முடைய வார்த்தையைச் சத்தங்களாக வெளிப்படுத்துகிறார். அவைகளில் ஒன்று தம்முடைய ஜனங்கள் தங்களை வேறு பிரிக்கக் கர்த்தர் விடுக்கும் சத்தம் (வெளி. 18 : 4).

இயேசு கிறிஸ்துவைத் தேவன் என்றும், கர்த்தர் என்றும் அறிவிக்கப்பட்ட சுவிசேசம் பிறப்பின் கால சுவிசேசம். பின்னர் பிதாவையும் குமாரனையும் பரிசுத்த ஆவியையும் குறித்த அறிவை வெளிப்படுத்திய வளர்ச்சி, சரீரத்தில் அந்தப் பெண் குழந்தை வளர்ந்து வருவது போல கிறிஸ்தவமும் மாமிசத்தில் உலகமெங்கும் வளர்ந்து வந்துள்ளது. மாமிசத்தில் விசுவாசிகளைக் கொண்டு திருச்சபைகள் உலகமெங்கும்

வளர்ந்தது போல, கிறிஸ்துவைப்பற்றி அறியக் கூடிய அறிவிலும் கிறிஸ்தவர்கள் வளரக் கர்த்தர் ஆவிக்குரிய காரியங்களை ஒவ்வொரு சபைக்காலங்களிலும் வெளிப்படுத்தி வந்துள்ளார்.

புறஜாதியாரில் இருந்து இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படப் போகும் இந்தக் கன்னிகை மாமிசத்தின்படி எண்ணிக்கையிலும், ஆவியின் படி கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளர்ந்து வந்துள்ளது. கன்னிலை அறியக்கூடிய பருவம் கன்னிகைப் பருவம். அது மணவாளனுடைய வளர்ச்சிக்குத்தக்கதாக பூரணப்படும் வளர்ச்சி. கிறிஸ்துவைப் பற்றியும் அவர்தம் காலங்களைக் குறித்தும், அவர்தம் தேவதிட்டத்தைக் குறித்தும் இப்போது அறிவிக்கப்படுவது போல, தெரிந்து கொள்வது போல சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்படவில்லை. சரீர அவயவத்தின் தன்மையும் செயல்பாடும் கன்னிகைக்கு அறிவிக்கப்படுவதுபோல சிறு குழந்தைக்கு அறிவிக்கப்படாது. தன் சரீரத்தின் தன்மையும் செயல்பாடும் தான் தெரிந்து கொள்வது போல மணவாளனின் சரீரத்தின் தன்மையையும், அவயவத்தையும் அறிந்து கொள்ளும் நிலையைப் பால் குடிக்கும் குழந்தைக்கு அறிவிக்கப்படாது. அந்தப் பருவத்தில் அது அறிந்து கொள்ளாது.

சரீரத்தின் தன்மையை அறிகிற அறிவில் பூரணப்படும் நிலை கன்னிகைப்பருவம். அதுவே மணவாளனைத் திருப்திப்படுத்தும் பருவம். அந்தப் பருவத்திற்கு இன்று இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படப் போகும் புறஜாதி என்ற கன்னிகை தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டிருக்கிறாள்.

எது நிர்வாணம்:-

வஸ்திரம் தரிப்பித்திராத நிலை நிர்வாணம். வஸ்திரத்தின் தன்மை அறியாமல் உடுத்தப்படுமானால் அது நிர்வாணம். தன் மாமிச சரீரத்தைப் போர்த்திக் கொள்ளாமல் திறந்திருக்கும் நிலை நிர்வாணம்.

லவோதிக்கேயா சபையின் (7வது சபை) தூதனுக்கு எழுதப்பட்ட விசேசத்தில் "நீ நிர்பாக்கியமுள்ளவனும்.... நிர்வாணியுமாய் இருக்கிறதை அறியாமல்.... எனக்கு ஒரு குறைவுமில்லையென்று சொல்லுகிறபடியால்..."(வெளி. 3 : 17) "உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும்...... வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளி. 3 : 18) என்று கர்த்தர் வெளிப்படுத்தியுள்ளார்.

அது உடுத்தியிருந்த வஸ்திரம் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு உடுத்திக் கொள்ளப்பட்ட வஸ்திரம். எனவே கர்த்தர் தம்மிடத்திலே உடுத்திக்கொள்ள வஸ்திரங்களை வாங்கிக் கொள்ள ஆலோசனை கூறுகிறார்.

".....நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம். தரித்துக் கொண்டவர்களானால் நிர்வாணிகளாய்க் காணப்பட மாட்டோம்" (2கொரி. 5 : 2,3).

நாம் இன்னநிறமுள்ள ஒரு வஸ்திரம் அணிந்திருக்கிறோம் என்று ஒரு குருடனிடம் சொன்னால் அவனுக்கு கண்பார்வை தெரியாததால் நாம் அணிந்து கொண்டுள்ள வஸ்திரம் இன்னதன்மை என்று அவனுக்கு

தெரியாது. அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியின் மூலம் "பரம வாசஸ்தலத்தை நாம் பெற்றுக் கொண்டோமானால் நாம் நிர்வாணிகள் அல்ல" என்று சொல்லியுள்ளார். நாம் வஸ்திரம் அணிந்திருக்கிறோம். பரம வாசஸ்தலமாகிய பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்பவர்கள் வஸ்திரம் தரித்தவர்கள்... சுதந்தரித்துக் கொள்ளத் தகுதி இல்லாதவர்கள் நிர்வாணிகள். பரிசுத்த ஆவியானவரின் பார்வையில் ஜீவனுக்குரியவர்களாய் நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கிறவர்கள் வஸ்திரம் தரித்தவர்கள். சுதந்தரிக்காதவர்கள் வஸ்திரம் தரித்திராதவர்கள். அவர்கள் நிர்வாணிகள்.

ஆதாம் முதன்முதலில் பரம வாசஸ்தலத்துக்கென்று நியமிக்கப்பட்டவன். அவன் ஜீவ ஆத்துமா உள்ளவன். ஆனால் அவன் வார்த்தைக்கு மாறான ஒரு சுவிசேசத்தால், சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்டுத் தன்னை நிர்வாணி என்று கண்டுகொண்டான் (ஆதி. 3 : 7). அவன் சர்ப்பத்தின் போதனைக்குச் செவி கொடுத்ததால், பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ளக் கூடிய தகுதியை இழந்துவிட்டான். அவன் நிர்ணயிக்கப்பட்ட மரணத்துக்குள்ளானவன் ஆனான்.

அந்த மரணம் மாமிசத்திற்குரியதல்ல. அக்கினியும் கந்தகமும் எரியும் கடலில் ஆக்கினைத் தீர்ப்படையப் போகும் இரண்டாம் மரணமாகிய ஆத்தும மரணம். ஆதாமின் மீறுதல் பரலோக சுதந்திரத்தை இழந்து போகச் செய்தது. அவன் வஸ்திரம் இல்லாதவன் ஆனான். அவன் நிர்வாணி ஆனான். அவன் மரணத்துக்குள்ளானவன் ஆனான்.

"நிர்வாணி - வார்த்தையில் இல்லாதவன்"

கன்னிகைக்குரிய வஸ்திரம் கன்னிப்பருவத்தில் வழங்கப்படும். அது நீதி. வஸ்திரம் நீதி (வெளி. 19 : 8). நிர்வாணம் தோன்றாதபடிக்கு, காணப்படாதபடிக்கான ஒரு வஸ்திரம். அந்த வஸ்திரம் நிர்வாணமாகிய அவலட்சணத்தை மறைக்க வேண்டும். அவள் உடுத்தியிருக்கிற வஸ்திரமானது அவளின் நிர்வாணத்தை மூடவில்லை. எதனை மறைக்க வேண்டுமோ, அதை மறைக்கவில்லை. அவள் உடுத்திய வஸ்திரம் அவள் பார்வைக்கு நிர்வாணத்தை மூடியதாகவே காணப்படுகிறது. ஆனால் கர்த்தர் அவளை நிர்வாணி என்கிறார். மேலும் அவள் நிர்வாணம் மறைக்கப்படத் தகுதியான வஸ்திரத்தை தன்னிடத்திலேயே கேட்டுப் பெற்றுக் கொள்ளச் சொல்கிறார். அவள் உடுத்தியிருந்த வஸ்திரம் அவள் நிர்வாணத்தை மூடாததால், அவள் நிர்வாணம் காணப்படுகிறது. அந்த நிர்வாணம் அவளைப் பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ளத்தக்க தகுதியை இழக்கச் செய்கிறது.

ஏழு சபைக்காலங்களிலும் கொடுக்கப்பட்ட வஸ்திரங்கள், அதினதின் காலம் முடிந்ததும் மணவாட்டியின் வளர்ச்சிக்குத் தக்கதாய் அது முழுமை பெறாததால் அவளின் நிர்வாணத்தை அது மூடவில்லை. அதினதின் காலத்திற்குப் பின்னர் வரக்கூடிய சபைக்காலங்களில் அந்தப் பெண்ணின் வளர்ச்சி அதிகமாவதால் அவள் உடுத்தியிருந்த வஸ்திரம், அவளின் நிர்வாணத்தை மறைக்கவில்லை. அந்தந்தச் சபைக் காலங்களில் கொடுக்கப்பட்ட வார்த்தைகள் அந்தந்த காலத்தில் ஜீவித்தவர்களின் நிர்வாணத்தைக் காத்தது. அதற்குப் பிந்திய வளர்ச்சியின் காலத்தில் அது அவர்களின் நிர்வாணத்தை மூடவில்லை. எனவே பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்து அவர்களின் நிர்வாணம் அவர்களைத் தகுதி இழக்கச் செய்தது.

ஒரு சபைக் காலத்தில் தூதன் மூலம் கொடுக்கப்பட்ட வார்த்தை அந்தச் சபைக் காலத்தில் நிர்வாணத்தை மூடக்கூடிய வஸ்திரமாய் இருந்தது. அந்தச் சபைக்காலம் முடிந்து அடுத்த சபைக் காலத்தில் அது வஸ்திரமாய்க் காணப்பட்டாலும் அந்த வஸ்திரம் அவளின் நிர்வாணத்தை மூடவில்லை. காரணம் அவளின் வளர்ச்சியின் அளவு அடுத்த சபைக் காலத்தில் அதிகமாய் இருப்பதால் அவளின் வஸ்திரம் அவளின் சரீர அளவின் வளர்ச்சியை விடச் சிறியதாகிறது. இதே நிலைதான் ஒவ்வொரு சபைக் காலங்களிலும் செயல்பட்டது. ஒரு சபைக் காலத்துக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தை அந்த சபைக் காலத்தில் ஜீவித்தவர்களையே பரலோகம் கொண்டு சேர்க்கும் வார்த்தையாய்க் காணப்பட்டது. அந்த வார்த்தை வஸ்திரமாய் அந்தச் சபைக்காலத்தில் நிர்வாணியாய் இல்லாதபடிக்கு அவலட்சணத்தை மறைத்தது.

கன்னிகை:

கன்னிகையின் வளர்ச்சி நான்கு பகுதிகளாக வளர்ச்சியின்படிப் பிரித்துக் காட்டப்படுகிறது. இந்தப் பகுதியில் நாம் இப்போது ஜீவிக்கும் காலம் ஆவியின் வளர்ச்சியின் பூரண காலம். ஆவியின் வளர்ச்சியில் பூரணம் என்பது ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தும் வெளிப்படுத்தப்படும் காலம். உலகத்தோற்ற முதல் மறைபொருளாய்ச் சொல்லப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும் கர்த்தர் தமது ஆவியின் மூலம் முழுமையாய் வெளிப்படுத்தப்படும் காலம். இது பூரணப்படும் கன்னிகையாகிய மணவாட்டியின் காலம். மணவாளனைக் குறித்தும் தன் சரீரத்தைக் குறித்தும் அறியக்கூடிய அறிவில் பூரணப்படும் காலம்.

கன்னிகை:

(வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் புறஜாதி) (மணவாட்டி)

பகுதி–1
- → பிறப்பு கி.பி. 53
- → சுவிசேசகத் தகப்பன் அப்போஸ்தலனாகிய பவுல் (கி.பி. 53 – 170)
- → இரினேயஸ் (கி.பி. 170 – 311)
- → **பால் அருந்தும் குழந்தை**

பகுதி–2
- → மார்ட்டீன் (கி.பி. 312–606)
- → கொலம்பா (கி.பி. 606 – 1520)
- → **சிறுபெண்**

பகுதி–3
- → மார்ட்டீன் லூதர் (கி.பி. 1520–1750)
- → வெஸ்லி (கி.பி. 1750 – 1906)
- → **பூப்பெய்திய பெண்**

பகுதி–4
- → பிரன்காம் (கி.பி. 1906–2005) →சரீர வளர்ச்சி சபை வளர்ச்சி முடிவு
- → அலங்கார காலம் (கி.பி. 2005 – 1/2 காலம்) →சிந்தையில் வளர்ச்சி →ஆவியின் வளர்ச்சி முடிவு
- → **கன்னிகை** (பூரண வடிவுள்ளவள்)

↓

எடுத்துக் கொள்ளப்படப் போகும் புறஜாதி

இந்த பூரண வளர்ச்சிக்குரிய, பருவத்திற்குரிய வஸ்திரம் தரித்தவர்களாகக் காணப்படாவிட்டால் நாம் நிர்வாணிகள். நிர்வாணிகளானால் பரம வாசஸ்தலத்தைச் சுதந்தரிக்க இயலாது.

இன்றையத் திருச்சபைகள் யாவும் வஸ்திரம் தரித்தவர்கள் என்று தங்களை அறிக்கையிட்டாலும், அந்த வஸ்திரம் பரிசுத்த ஆவியானவரின் பார்வைக்கு நிர்வாணம் மூடப்படாதவாறு காணப்படும் வஸ்திரமாக இல்லை. அந்தச் சபை விசுவாசிகளுக்கு அவைகள் கொடுக்கும் வஸ்திரம் அந்த விசுவாசிகளின் நிர்வாணத்தை மூடத்தக்கதாய் இல்லை. எனவே கர்த்தர் தன்னிடம் அந்த வஸ்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை சொல்கிறார். விசுவாசிகள் கர்த்தரிடம் கேளாமல் தங்கள் சபைக்குரிய ஆவிகளிடம் முறையிடும் போது அது அவர்களை நிர்வாணிகள் என்று ஏற்றுக்கொள்ளவிடாது.

வார்த்தைக்குள் வளரும் போது தகுதியான வஸ்திரம் அணிவிக்கப்படும். அந்த வஸ்திரம் நிர்வாணம் காணப்படாதபடிக்குக் காக்கும். அதுவே தகுதியான வஸ்திரம். அதுவே தகுதியான வார்த்தை. அந்த வார்த்தையே பரலோகம் என்ற சுதந்திரத்தைக் கொடுக்கும். அதுவே நித்திய ஜீவனுக்குள்ளாக வழி நடத்தும்.

அந்த வார்த்தை சபைகளுக்குள் இருந்து தொனிக்காது. அந்தச் சத்தத்திற்குக் கர்த்தர் சபைகளைத் தெரிந்து கொள்ளவில்லை. அது சபைகள் சாரா வனாந்திரச் சத்தமாகவே காணப்படும். அது சத்தமாகவே தொனிக்கப்படும். இவையே சபைக்காலங்களுக்குப் பின்னர்

சம்பவிக்கப் போவதாய் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தூதனால் அறிவிக்கப்பட்ட விசேசம்.

வார்த்தையே - வஸ்திரம்

அன்றைக்குரிய வார்த்தையே - தகுதியான வஸ்திரம்

நிர்வாணமாகிய அவலட்சணம் காணப்படாதபடிக்கு தகுதியான வஸ்திரம் உடுத்திக் கொள்ளக் கடவோம். கர்த்தர் தாமே தம்மையும், இயேசுகிறிஸ்துவாகிய தம்முடைய குமாரனையும் அறிகிற அறிவினால் கிருபையைப் பெருகச் செய்வாராக (2 பேது. 1 : 2).

ஆமென்! ஆமென் !! ஆமென்!!!

6. வித்தும் நிலமும்

வித்து என்பது விதையாகும். இந்த வித்து ஒரு மரத்தையோ, ஒரு செடியையோ அல்லது ஒரு கொடியையோ உருவாக்கும் மூலமாகும். இந்த வித்திலிருந்து தான் மரம், செடி, கொடிகள் உருவாகிறது. அது வளர்ந்து வருகிறது. அது பெரியதாகிறது. அது பூப்பூத்துக் காய்த்துக் கனியாகிய பலனைக் கொடுக்கிறது.

வித்து என்பது வேத வார்த்தையின்படி வார்த்தையாகும். விதை என்பது தேவனுடைய வசனம் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உவமையாகச் சொன்ன இடத்தில் குறிப்பிட்டு உள்ளார் (லூக். 8 : 11). இந்த வித்தாகிய வார்த்தை ஏற்கனவே வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. பின்னர் நடப்பதைக் குறித்த வார்த்தையாகிய இந்த வித்து ஏற்கனவே தீர்க்கதரிசனமாய்க் கர்த்தர் தமது ஆவியின் மூலம் தாம் முன்குறித்த சரீரத்தைக் கொண்டு உரைத்துள்ளார்.

இந்த வித்தாகிய வார்த்தையில் எதையாகிலும் எடுத்துப் போட்டாலோ அல்லது அவைகளோடே எதையாகிலும் கூட்டினாலோ அதற்குக் கிடைக்கக் கூடிய கெடுதியான பலனைக் குறித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது (வெளி. 22 : 18,19). அந்த வித்து எத்தன்மையில் உரைக்கப்பட்டதோ அத்தன்மையில் வெளிக் கொணர்வது பரிசுத்த ஆவியானவர் ஒருவராலேயே கூடும் காரியமாகும்.

முதன் முதலில் கர்த்தரின் வார்த்தை ஆதாமுக்கு உரைக்கப்பட்டது. அந்த வார்த்தை கர்த்தர் மூலம் நேரடியாக ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த வார்த்தை எழுத்து வடிவில் கொடுக்கப்படவில்லை. அது பேச்சு மொழியாகவே கொடுக்கப்பட்டது.

வானத்தையும் பூமியையும் உருவாக்கக் கர்த்தர் கட்டளையிட்ட வார்த்தை எழுத்து வடிவில் கொடுக்கப்பட்ட வார்த்தையல்ல. அந்த வார்த்தை உருவாக்கியவரால் உத்தரவிடப்பட்ட வார்த்தையாகவே இருந்தது. அதற்கு எழுத்து இல்லை. அதன் பின்னர் மோசேயின் காலம் வரையிலும் கர்த்தரிடத்திலிருந்து அனுப்பப்பட்ட வார்த்தைகள் எழுத்து வடிவம் இல்லாத நிலையில் இருந்தது. மோசேயின் நாட்களில் கர்த்தர் மோசேயின் மூலம் கொடுத்த வார்த்தைகளுக்கு எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டது.

சீனாய் மலையில் கர்த்தர் மோசேயோடே பேசி முடித்தபின், அவரின் விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார். அப்போது தான் முதன் முதலில் வார்த்தை எழுத்து வடிவம் பெற்றது (யாத். 31 : 18). மோசேயின் மூலம் தான் ஐந்து ஆகமங்களும் கொடுக்கப்பட்டது.

1. ஆதியாகமம்

2. யாத்திராகமம்

3. லேவியராகமம்.

4. எண்ணாகமம்

5. உபாகமம்

மேற்குறிப்பிடப்பட்ட 5 ஆகமங்களும் மோசேக்கு கர்த்தர் அறிவித்து, அவைகள் மோசேயின் மூலம் எழுத்து வடிவம் பெறக் கட்டளையிட்டார். அதன் பின்னர் இயேசு கிறிஸ்துவின் நாட்கள் வரையிலான அதாவது ஆதாம் முதல் இயேசு கிறிஸ்து வரையிலும் 76 தலைமுறை வரையிலான காரியங்கள் எழுத்து வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் இந்த வேதாகமம் மோசே முதற் கொண்டு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மனிதர்களால் கர்த்தரின் ஆவியைக் கொண்டு ஏவப்பட்டு எழுதப்பட்டவை. புதிய ஏற்பாட்டின் காலத்திலும் தாங்கள் முழு நிச்சயமாய் நம்பிய சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் தங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரமாய் எழுதப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (லூக். 1 : 1,2).

அதற்குப் பின்னர் எழுதப்பட்ட நிருபங்கள் யாவும் அப்போஸ்தலனாகிய பேதுரு, பவுல், யோவான், யாக்கோபு, யூதா என்பவர்களால் வெவ்வேறு இடங்களில் இருந்த அன்றைக்குரிய வார்த்தையின் விசுவாசிகளுக்கு எழுதப்பட்டவைகளாய் அமைந்துள்ளது.

பழைய ஏற்பாடு மாமிசப்பிறப்பாகிய இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டதாயும், புதிய ஏற்பாடு புறஜாதிகளாகிய நமக்குக் கிருபையையும், சத்தியத்தையும், ஜீவனையும் கொண்டு வருவதற்காகவும் கொடுக்கப்பட்ட வார்த்தைகளாகும். இந்த வார்த்தைகள் யாவும் எழுத்து வடிவாகி பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த சத்திய புத்தகத்தைப் பெறக் கிருபை பெற்ற நாம் பாக்கியவான்கள் ஆவோம்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டவைகள்– புதிய ஏற்பாட்டின் காலத்தில் அதற்குப் பின்னர் பூமியின் கடைசிக் காலம் வரையிலும் நடக்கப் போவதையும் குறித்து உரைக்கப்பட்டவைகள் ஆகும். அவைகள் முழுவதும் எழுத்து உருவம் பெற்று உலகம் முழுவதும் அறிவிக்கப்பட்டுள்ள காலம் தற்போது நாம் ஜீவிக்கும் இந்தக் காலமாகும்.

எழுத்து பூர்வமாய் ஏற்கனவே அறிவிக்கப்பட்டும், வெளிப்படுத்தப்பட்டும் எல்லாக் காரியங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனி புதியதான ஒரு காரியம் அறிவிக்கவோ, வெளிப்படுத்தவோ வேண்டுவதில்லை. பூமியின் கடைசி பரியந்தமும் நடக்கப்பட வேண்டிய எல்லாக் காரியங்களும் வெளிப்படுத்தப்பட்டும்விட்டது. அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட எல்லாக் காரியங்களும் முன் அறிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டுக் கர்த்தர் தூதன் மூலமாய் தம்முடைய ஊழியக்காரனான யோவானுக்கு வெளிப்படுத்தினார். அந்த விசேசம் தீர்க்கதரிசனமாய் வெளிப்படுத்தின விசேசத்தில் எழுத்து வடிவில் வேதாகமத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

வார்த்தை ஏற்கனவே முழுவதுமாய்க் கொடுக்கப்பட்டு விட்டபடியால், சொல்லப்பட்டபடியால் அந்த வார்த்தை “உரைக்கப்பட்ட வார்த்தை” என வரையறுக்கப்படுகிறது. இப்படியாக உரைக்கப்பட்ட வார்த்தை “மூலவித்து” எனவும் வரையறுக்கப்படுகிறது.

உரைக்கப்பட்ட வார்த்தையாகிய "மூலவித்தில்" மாறுதல் வருமானால் அது கர்த்தரால் உரைக்கப்பட்ட வார்த்தையாய் இராது. அது சத்துருவின் வித்தாகும். அது பிசாசின் வார்த்தையாகும். உரைக்கப்பட்ட வார்த்தையானது காலஞ்செல்லச் செல்ல கலப்பு வித்தாக மனுஷ ஞானத்தினாலும், பிசாசின் வஞ்சகத்தினாலும் மாற்றி அமைக்கப்படுகிறது.

உரைக்கப்பட்ட வார்த்தை உரைக்கப்பட்ட தன்மையில் இல்லாதபடிக்கு மாற்றப்படும்போது அதில் இருக்கும் ஜீவனானது எடுத்துப் போடப்பட்டு அந்த வித்து ஜீவனில்லாத வித்தாக மாறுகிறது.

உரைக்கப்பட்ட வார்த்தை (மூலவித்து)

↓

கலப்பு வித்து | ஜீவனற்ற வித்து

மூலவித்தானது 3 பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது.

உரைக்கப்பட்ட வார்த்தை (மூல வித்து)

↓

நடந்து முடிந்த வார்த்தை | நடந்துகொண்டு இருப்பது | நடக்கப்போவது

இந்த வார்த்தைகள் எல்லாமே ஏற்கனவே அறிவிக்கப்பட்டவை. நடந்து முடிந்ததும், நடந்து கொண்டிருப்பதும், இனி நடக்கப்போவதும் உரைக்கப்பட்ட வார்த்தையாய் ஏற்கனவே எழுத்து வடிவில் அறிவிக்கப்பட்டு விட்டது. இந்த மூன்று காலங்களுக்குரிய வார்த்தைகளும் ஏற்கனவே உரைக்கப்பட்ட வார்த்தையாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். இயேசுகிறிஸ்து பூமியில் மனு ரூபம் எடுத்தார். பாடுபட்டார். மரித்தார். அடக்கம் செய்யப்பட்டார். உயிரோடே மூன்றா ம் நாளில் எழும்பினார். மீண்டும் பிதாவின் வலதுபாரிசத்திற்குச் சென்றார்.

அதன்பின்னர் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட சீசர்கள் அப்போஸ்தலர்களாய் கர்த்தரைக் குறித்துச் சாட்சி கொடுத்தார்கள். இவைகள் யாவும் நடந்து முடிந்த காலத்துக்குரியது. இவை யாவும் நடந்து முடிந்த வார்த்தை. மோசேயின் ஆகமத்தில் "உன்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவர்களுக்குக் கற்பிப்பதை எல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்" (உபா. 18 : 18,19) என்று கர்த்தர் உரைத்தார்.

மோசேயின் நாட்களில் உரைக்கப்பட்ட இந்த வார்த்தையில் தீர்க்கதரிசி எனக் குறிப்பிடப்பட்டவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இந்த வார்த்தை மோசேயின் காலத்தில், பின்னர் சம்பவிக்கப் போகிற வார்த்தையாகும். இயேசு கிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட நாட்களில் இந்த வார்த்தையானது நிறைவேறிக் கொண்டிருக்கும் (நடந்து கொண்டிருக்கும்) வார்த்தையாகும். இந்த வார்த்தையானது இன்று நிறைவேறி முடிந்த வார்த்தையாகும்.

பின்னர் நிறைவேறப்போகும் வார்த்தையை முன்கூட்டியே அறிவிக்கும் போது அந்த வார்த்தை

"தீர்க்கதரிசனம்" என்று வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் ஜனனம் குறித்துச் சொல்லப்பட்ட வார்த்தை மோசேயின் நாட்களில் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனமாகும். மோசேயின் நாட்களில் "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" என்ற வார்த்தை நடந்து முடிந்த வார்த்தையாய் இருந்தது. நியாயப் பிரமாண வார்த்தைகள் மோசேயின் நாட்களில் "நடந்து கொண்டிருந்த" வார்த்தையாய் இருந்தது.

மூலவித்து, ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் எடுத்துக் கொள்ளப்பட்டான் (ஆதி. 5 : 24). அவன் தேவனோடு சஞ்சரிக்க வேண்டுவது எடுத்துக் கொள்ளப்படுவதற்கு வேண்டிய தகுதி. இது உரைக்கப்பட்ட வார்த்தை. இது மூலவித்து. இந்த மூலவித்தைப் பலனாகப் பெற வித்துக்குரிய கிரியையானது கர்த்தர் விரும்பும் கிரியையாக இருக்க வேண்டும். நோவா நாட்களில் உரைக்கப்பட்ட வார்த்தைக்குரிய கிரியை பேழைக்குள் பிரவேசிக்க வேண்டும்.



இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதே நிகழ்கால வித்தாய் இருக்கிறது. இன்றைக்குரிய வார்த்தையாய் இருக்கிறது. இது நிறைவேறிக் கொண்டிருக்கும் வார்த்தை. இன்றைக்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் வித்துக்கு/வார்த்தைக்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தை (வெளி. 18 : 4).

"...என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும் அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்". இந்த வார்த்தை மூலவித்து. வருகைக்குரிய வித்தாயிருக்கிறது.



அப்போஸ்தலனாகிய யோவான் மூலம்
(வெளி. 18 : 14)

பிசாசு மிகுந்த ஞானவான். அவன் கடந்தகால வித்தின் மீதான விசுவாசத்தைக் குலைக்க மாட்டான். வருங்காலத்துக்குரிய வித்தின் மீதான விசுவாசத்தையும் குலைக்கமாட்டான். நிகழ்காலத்துக்குரிய வித்தாகிய வார்த்தையின் மீதான விசுவாசத்தினை விட்டு விலகச் செய்யும் வகையில் வஞ்சிக்கிறவனாகச் செயல்படுவான்.

இயேசு கிறிஸ்துவின் நாட்களில், மேசியாவின் வருகையைக் குறித்து முன்னறிவித்த தீர்க்கதரிசன வார்த்தைகளின் மீது அவிசுவாசத்தைக் கொண்டு வரவில்லை. அன்றைக்குரிய வித்தாகிய வார்த்தையைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதிலிருந்து விலகச் செய்கிறவனாகக் காணப்பட்டான். ஒவ்வொரு காலங்களிலும் இவ்வாறாகவே விசுவாசத்தினை விட்டு விலகச் செய்கிறவனாகவே காணப்படுகிறான்.

கர்த்தருடைய செம்மையான வழியைப் புரட்டுவதை விட்டு அவன் ஓயாதவனாகவே செயல்படுகிறான் (அப். 13 : 10). புற ஜாதிகளாகிய நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மூலவித்து அப்போஸ்தலர்களின் போதனை.

மணவாட்டி
(வருகைக்குரிய வித்து)

மூலவித்து (அப்போஸ்தலசபை) கி.பி. 50

இந்த மூலவித்தைக் குறித்துத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட்ட காலங்களில் அது வருங்காலத்தைக் குறித்த வித்தாய் இருந்தது. அது நிறைவேறிய காலமான அப்போஸ்தலர்களின் காலத்தில் அது நிகழ்கால வித்தாய் இருந்தது. இன்று நமக்கு அது நடந்து முடிந்த காலத்திற்குரியதாய் காணப்படுகிறது. நடந்து முடிந்ததாய் காணப்படும் இந்த வித்து இன்று மூலவித்து.

நடந்து முடிந்த நாட்களில் சொல்லப்பட்ட இன்றைக்குரிய வார்த்தை இன்று மூலவித்தாய் காணப்படுகிறது. இந்த மூல வித்தை விசுவாசிப்பது ஜீவனுக்கும், அவிசுவாசம் மரணத்துக்கும் கொண்டு செல்லும்.

மூலவித்திலிருந்து உருவாகி அது நிறைவேறும் காலத்தில் உருவடையும் நிகழ் காலத்துக்குரிய வித்து விதைக்கப்பட்ட தன்மையினை உடையதாக இருக்கும். மூலவித்து செத்து அது நிறைவேறும் காலத்தில் உயிருள்ளதாய்க் காணப்படும். மூலவித்து உரைக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் வெளிக் கொணரப்படாமல் அவைகள் நிறைவேறும் காலத்திலே வெளிப்படுத்தப்படும். இடையிலான காலங்களில் அவைகள் மறுதன்மையினதாய்க் காணப்படும். அதன் சாயல் அது நிறைவேறும் காலத்தில் மூலவித்தின் தன்மையில் வெளிப்படும்.

உரைக்கப்பட்ட வார்த்தை அது நிறைவேறும் காலத்தில் உரைக்கப்பட்ட தன்மையதாய் வெளிப்படுத்தப்படும்.

விதைக்கப்பட்ட வித்து அது பலன் கொடுக்கும் காலத்தில் விதைக்கப்பட்ட தன்மையதாய் அதன் சாயலில் வெளிப்படும். விதை செத்து அது பலன் கொடுக்கும் காலத்தில் தான் அதன் சாயல் மூலவித்தின்

சாயலாய்க் காணப்படும். இடைப்பட்ட காலங்களில் அது விதையின் சாயலில் காணப்படாது. அது மரம், கிளை, தழை போன்ற பிற சாயலில் வெளிப்படும். பலன் அளிக்கும் காலத்தில் தான் விதைக்கப்பட்ட சாயலில் வெளிப்படும்.

அதுபோலவே உரைக்கப்பட்ட வார்த்தையும், அது நிறைவேறும் காலத்தில் தான் முழுமையை அடையும். அது உரைக்கப்பட்ட ஜீவ தன்மையுள்ளதாய்க் காணப்படும்.

மணவாட்டி
(பரிசுத்த ஆவி)

மூலவித்து (பரிசுத்த ஆவி) அப்போஸ்தலசபை

உரைக்கப்பட்ட நாளில் எழுந்த சபை எந்த யூத தேவாலயங்களையும் சார்ந்திருக்கவில்லை. அப்போஸ்தல சபை வேறெந்த யூத சபையோடும் ஐக்கியம் வைத்துக் கொள்ளவில்லை. அந்நிய நுகத்தோடே பிணைக்கப்பட வேண்டாம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியின் மூலம் தெரிவித்துள்ளார் (2 கொரி. 6 : 14–18). பரிசுத்த ஆவியானவர் கொடுத்த வார்த்தையை ஏற்றுக்கொண்டு அப்படியே பின்பற்றியது.

உரைக்கப்பட்ட நாளில் எழுந்த சபை பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துத் தனித்து இயங்கி வந்தது. அது மரணம் நேரிடுவதாய் இருந்தாலும் அதனைக் கண்டு அஞ்சாமலும், வார்த்தையை மறுதலியாமலும், வார்த்தையை மீறாமலும் செயல்பட்டது (அப். 15 : 25, அப். 20 : 24, அப். 21 : 13).

அதே தன்மையில் வருகையின் போது எடுத்துக் கொள்ளப்படப் போகும் மணவாட்டியும் செயல்படுவாள். அவள் மணவாளனாகிய கிறிஸ்துவின் வார்த்தைக்குத் தன்னைத் தனிமைப்படுத்தி மரணம் நேரிடுவதாய் இருந்தாலும் அதனைக் கண்டு அஞ்சாமல் மூலவித்தைப் போல் செயல்படுவாள். மரணம் நேரிடுவதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும்படித் தனது ஜீவனையும் பாராமல் ஆட்டுக்குட்டியானவரின் வசனத்தினால் இரண்டாம் மரணமாகிய ஆக்கினைத் தீர்ப்புக்குக் கொண்டு செல்லும் பிசாசினை ஜெயிப்பாள் (வெளி. 12 : 11). முதலாம் மரணத்தைக் கண்டு பயப்படமாட்டாள்.

மூலவித்தின் நாட்களில் இருந்த பதரைப் போலத்தான் மணவாட்டியின் நாட்களிலும் சடங்காச்சாரங்களையும் பாரம்பரியங்களையும் பின்பற்றி வரும் விசுவாசக் கூட்டமும் இருக்கும். அது அப்படியே இன்று இருந்து வருகிறது.

மூலவித்தானது ஆபிரகாமுக்கு ஒத்த விசுவாசம் உள்ளதாய் இருக்கும். விசுவாசமார்க்கத்தார் ஆபிரகாமின் சந்ததி என்று வேதம் சாட்சியிடுகிறது (கலா. 3 : 7). மூலவித்து தன் சுய இச்சையின்படி செயல்படாது. இந்த மூலவித்து கர்த்தர் போதிக்கிற வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கும். மூலவித்து பரிசுத்த ஆவியானவரின்

வார்த்தைக்குக் கீழ்படியும். தன் சுயசிந்தையை அது வெளிப்படுத்தாது. கிறிஸ்துவின் சிந்தை உள்ளதாய் இருக்கும். அப்போஸ்தலர்களின் சிந்தையுள்ளதாய் இருக்கும்.

ஆபிரகாமுக்கு கர்த்தரால் கொடுக்கப்பட்ட வார்த்தை "நீ உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என்பதே. இது உரைக்கப்பட்ட வார்த்தை. இந்த வார்த்தைக்கு ஆபிரகாம் செவி கொடுத்தான். கீழ்ப்படிந்தான். கல்தேயருடைய தேசமாகிய பாபிலோனை விட்டு வெளியேறினான் (ஆதி. 11 : 31, ஆதி. 12 : 1).

வேசித்தனத்தில் திகழ்ந்து கொண்டு, பாபிலோனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ள இன்றைய திருச்சபைகளையும் அவைகளின் மாறுபாடான போதகங்களையும் விட்டு, அன்று ஆபிரகாம் செய்தது போல வெளியேறி, இன்பக்கானானான பரலோகத்தை மணவாட்டி அடைய வேண்டும். இதுவே உரைக்கப்பட்ட வார்த்தை (ஆதி. 12: 1, அப்.7 : 2).

வார்த்தைக்குச் செவி கொடுத்த ஆபிரகாம் வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுச் சீமானாய் உயர்த்தப்பட்டது போல கர்த்தர் தமது வார்த்தைக்குச் செவிகொடுக்கும் மணவாட்டியை உயர்த்துவார்.

பிலேயாம் கல்தேயர் தேசமாகிய பாபிலோனிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாததால் அவன் ஆசிர்வதிக்கப்பட்ட சந்ததியாகிய இஸ்ரவேலரைச் சபிக்க வந்தான் (உபா. 23 : 4, ஏசா. 13 : 19). அவனது போதகம் வேசித்தனத்தால் நிறைந்த போதகமாய் இருந்தது (2பேது. 2 : 14–15). மூலவித்தை விசுவாசிக்கும் மணவாட்டி

பிலேயாமை அடையாளம் கண்டு கொள்வாள். உரைக்கப்பட்ட வார்த்தையாகிய தீர்க்கதரிசனம், அவைகள் உரைக்கப்பட்டக் காலத்தில் விசுவாசிகள், அவிசுவாசிகள் என்று இருந்தது போல அது நிறைவேறும் காலத்திலும் அந்த வார்த்தையை விசுவாசிப்பவர்களும், விசுவாசியாதவர்களும் இருப்பார்கள்.

மூலவித்தை விசுவாசித்த பரிசுத்த ஆவிக்குரியவர்கள் போன்று அவைகள் நிறைவேறும் காலத்தில் அவைகளை விசுவாசிக்கும் விசுவாசிகளும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வார்கள்.

பரிசுத்த ஆவியினால் அல்லாமல் இயேசுவைக் கர்த்தர் என்று அந்த நாட்களில் அறிக்கையிட முடியாது (1 யோவான் 4 : 2). இயேசுவைக் கர்த்தர் என்று விசுவாசித்தவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் (அப். 19 : 2–6). இப்படியாக நிறைவேறின இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் முன் உரைக்கப்பட்ட போது, அவைகளை அறிவித்த தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களாய் இருந்தார்கள். அந்த தீர்க்கதரிசிகள் மூலம் முன் உரைக்கப்பட்ட வார்த்தை, அது நிறைவேறிய போது இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கை செய்தவர்கள் மூலவித்தின் தன்மையை உடையவர்கள். அவிசுவாசிகளான மற்றவர்கள் பதர்களாகவே இருந்து வந்துள்ளார்கள்.

அது போலவே மூல வித்தாகிய வார்த்தை நிறைவேறும் வருகையின் காலத்திலும் வருகையைக் குறித்து முன்னறிவித்த தீர்க்கதரிசிகளான பவுல், யோவான், பேதுரு போன்றோர் இருந்த நாட்களைப் போலவே வித்தின் தன்மையும், பதரின் தன்மையும் கொண்டோர் இருப்பார்கள்.

பதர் புறம்பாக்கி விடப்படும். மணியான வித்து வருகையில் எடுத்துக் கொள்ளப்படும்.

மணவாட்டி வேசித்தனத்தை அங்கீகரியாத ஒரு கூட்டம். அது ஸ்தேவான் கூறியது போல பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்கிறவர்களை அடையாளம் கண்டு கொள்ளும் சிறுமந்தை (அப். 7 : 51). மணவாட்டி தகப்பன் தேசத்தை விட்டு வெளியேறுபவர்கள். மணவாட்டி மூலவித்தை விசுவாசிப்பவள். மணவாட்டி மூலவித்தை அடையாளம் காண்கிறவள். மணவாட்டி தன்னை வேறு பிரிக்கிறவள். தான் வேறு பிரிக்கப்பட ஒப்புக் கொடுப்பவள்.

மணவாட்டி கல்தேயருடைய கலாச்சாரங்களுக்கு தன்னை விலக்கிக் கொண்டவள். மணவாட்டி பாபிலோனியரின் செய்கைகளுக்கு உடன்படாதவள். மணவாட்டி யூதசபைகளுக்கு உடன் போகாதவள். மணவாட்டி வார்த்தையினால் தன்னைக் "காத்துக் கொள்பவள்". மூலவித்து தன்னை காத்துக் கொண்டது போல மணவாட்டி உரைக்கப்பட்ட வார்த்தையைக் காத்துக் கொள்பவள். மணவாட்டி கிறிஸ்தவ கலாச்சாரங்களை அங்கீகரிக்காதவள்.

வித்து வார்த்தை. அந்த வார்த்தை அருளப்பட்ட தன்மையில் இருக்கும் போது அது உரைக்கப்பட்ட வார்த்தை. அந்த வார்த்தை நிறைவேறும் காலத்தில் கொடுக்கப்படும் வார்த்தை வித்தாய் இருக்கிறது. பலன் மூலவித்தின் தன்மை.

மூல வித்து
(வார்த்தை)
↓
பரிசுத்த ஆவிமூலம் கொடுக்கப்படுதல்
↓
↓
↓ நிறைவேற
↓ எடுத்துக்கொள்ளும்
↓ காலம்
↓
வார்த்தை வித்து
(விதைக்கப்படுதல்)
அந்தக் காலத்தில்
↓
↓ (பரிசுத்த ஆவி மூலம்
↓ கொண்டு செல்லுதல்)
மணவாட்டி (பலன்)

மூலவித்தின் தன்மை

மூலவித்தின் தன்மையில் அதின் காலம் வரும்போது அந்த வித்து விதைக்கப்படும். விதையைக் கொண்டு செல்பவர்கள் கர்த்தர் அந்த அந்தக் காலத்திற்கென்று அனுப்பும் தூதர்கள். தூதர்கள் வார்த்தையை விதைக்கிறார்கள்.

ஒவ்வொரு சபையின் காலங்களிலும் முன் உரைக்கப்பட்ட வார்த்தையாகிய மூலவித்தானது தூதர்கள் மூலம் விதைக்கப்பட்டது. 7 சபைகளின் காலங்களிலும் விதைக்கப்பட்ட வித்தாகிய வார்த்தை அப்போஸ்தலனாகிய யோவான் மூலம் வித்திடப்பட்ட மூலவித்து. அப்போஸ்தலனாகிய யோவான் மூலம் முன்னறிவிக்கப்பட்ட வார்த்தை 7 சபைத் தூதர்களின் காலங்களிலும்

விதைக்கப்பட்டது. விதைக்கப்பட்ட வார்த்தை மூலவித்தின் சாயலாய் இருந்தது. அது மூலவித்தாய் இருந்தது. அந்த வார்த்தை சத்தியமாய் இருந்தது.

அந்த வித்து சுவிசேசத்தின் மூலமாய் விதைக்கப்பட்டது. சுவிசேசத்தைக் கொண்டு செல்லக் கர்த்தர் அநேக தூதர்களை நியமித்தார். அவர்கள் தேவ ஊழியர்களாய் இருந்தார்கள். அவர்கள் கூலிக்குப் பலனான நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள். விசுவாசித்தவர்கள் ஜீவவித்தாகிய வார்த்தையை விசுவாசித்த படியால், நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள். விசுவாசியாதவர்கள், பிசாசின் வஞ்சகத்தில் வஞ்சிக்கப்பட்டதால் நித்திய ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளவர்களானார்கள்.

விதை - வார்த்தை

நிலம் - இருதயம்

நல்ல நிலத்தில் விதைக்கபடும் விதை பலன் கொடுக்கும். அது ஒன்று முப்பதும், அறுபதாகவும், நூறாகவும் பலன் கொடுக்கும். நம் இருதயம் நல்ல நிலமாக இருக்குமேயானால் பரலோக இராஜ்ஜியத்தின் இரகசியங்கள் நமக்கு அருளப்பட்டதாய் இருக்கும் (மத். 13 : 11). மூலவித்தை ஏற்றுக்கொள்ளும் நிலமாய் நாம் இருக்கும் போது மூலவித்தை நியமித்தவரின் கிருபையினால் மூடப்பட்டு, அவர்தம் ஆவியினால் தேற்றப்படுவோம். மீட்கப்படும் நாளுக்கென்று நமக்குக் கொடுக்கப்படும் பரிசுத்த ஆவி என்ற முத்திரையைப் பெற்றுக் கொள்வோம்.

கர்த்தர் தாமே தங்களின் இருதயம் பண்படுத்தப்படக் கிருபையைக் கட்டளையிடுவாராக.!

ஆமென்! ஆமென்!! ஆமென்!!!

7. ஞானம்

தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிப்புகளிலும் மனிதன் மாத்திரம் ஆறு அறிவு உள்ளவனாகக் காணப்படுகிறான். சிருஷ்டிக்கப்பட்ட எல்லா சிருஷ்டிப்புகளிலும் மனிதன் மாத்திரம் 6வது அறிவாகிய பகுத்தறிவைக் கொண்டவனாகக் காணப்படுகிறான். இது அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். இந்த 6வது அறிவு உள்ள மனிதன் கர்த்தரைப் பற்றி அறியக் கூடிய ஞானம் எல்லா ஞானத்துக்கும் முதன்மையானது.

“பரிசுத்த ஆவிக்கு விரோதமான ஞானம் இல்லை” என்று வேதம் சாட்சியிடுகிறது. பரிசுத்த ஆவியானவரின் திட்டத்தை முறியடிக்கத்தக்க விதமான ஞானம் ஒன்றுமில்லை. பரிசுத்தரின் அறிவே அறிவு (நீதி. 9 : 10) என்று வேதம் சான்றிடுகிறது. பரிசுத்த ஆவியானவர் தாம் திருவளம் பற்றியுள்ள ஞானத்தின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட காரியங்களை அறியப் பரிசுத்த ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தப்படும் ஞானமே முக்கியம்.

என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதி என்று வேதம் கூறுகிறது. பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தும் இந்த புத்தியைத் தெரிந்து கொள்ளாமல் ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் அவனுக்கு லாபமில்லை. உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தக்கூடிய புத்தியை/ஞானத்தை ஒருவன் பெற்றிருந்தாலும் பரிசுத்தரை அறியக் கூடிய அறிவு இல்லாவிட்டால் அவன் நித்திய ஜீவனைப் பெற முடியாது.

மிருகத்தின் முத்திரையைக் கணக்குப் பார்க்கப் பரிசுத்த ஆவியானவர் ஒரு ஞானத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

“இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தை புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக் கடவன்...” (வெளி. 13 : 18).

அப்போஸ்தலனாகிய யோவானுக்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திக் கொடுத்த விசேசத்தில் ஞானத்தை விளங்கச் செய்யும் புத்தியைக் குறித்து வெளிப்படுத்தி உள்ளார். இந்தப் புத்தி மிருகத்தின் இலக்கத்தைக் கணக்குப் பார்க்கக்கூடிய ஞானம். இந்த ஞானம் பரத்திலிருந்து அருளப்படுகிற ஞானம். ஆனால் மிருகத்தின் இலக்கமோ மனுஷனுடைய இலக்கமாய் இருக்கிறது என்று கர்த்தர் வெளிப்படுத்தி உள்ளார். இந்த இலக்கமானது மனுஷனின் இலக்கம். ஆனால் அதை அடையாளம் காண்பது கர்த்தர் அருளும் ஞானத்தின் மூலமாகவேயாகும்.

அந்த இலக்கம் “666” எனவும், இந்த இலக்கம் நேரடியாக இல்லாமல் கணக்குப் பார்க்கத்தக்க விதமாக இருக்கும் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த இலக்கம் “666” என இருக்குமேயானால் அதைக் கணக்கிடத் தேவையில்லை. அந்த இலக்கம் “666” எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது கணக்குப் பார்க்கத்தக்க விதமாகவே இருக்கும் எனவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்திக் கிறிஸ்து வரும் போது “666”என்ற இலக்கத்தை எல்லோரும் முத்திரையாகப் பொறிக்க வேண்டும். அவ்வாறு முத்திரையாகப் பொறிக்காவிட்டால்

அவர்கள் எந்தவிதமான வணிக நடவடிக்கையினையும் மேற்கொள்ளமுடியாது எனத் தவறான கருத்துக்கள் அறிவிக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்துவின் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியது அல்ல. இங்கே சொல்லப்பட்டுள்ள இந்தத் தவறான கருத்தான "கொள்ளவும் விற்கவும் கூடியதான காரியம்" பரத்திற்குரியதும் அல்ல. அந்திக் கிறிஸ்து வரும்போது நேபுகாத்நேச்சார் உருவாக்கி வணங்கக் கட்டளையிட்டது போலத் தன்னை வணங்கவேண்டும் என அந்திக் கிறிஸ்து வெளியரங்கமாய்ச் செயல்படுவான் எனப் பேசப்படுகிறது. ஆனால் ஆவிக்குரிய இந்த நிகழ்வு மாமிசத்தில் காணத்தக்கவிதமாய் இராது என்றே பரிசுத்த ஆவியானவர் திருவளம் பற்றுகிறார்.

வேதத்தில் உள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராதென்று (2பேது. 1 : 20) பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளார். அப்போஸ்தலனாகிய யோவான் மூலம் சொல்லப்பட்டுள்ள இந்தத் தீர்க்கதரிசன வசனங்களும் (வெளி. 1 : 3) சுயதோற்றமுள்ள பொருளை உடையதாய் இல்லை என்றே பரிசுத்த ஆவியானவர் திருவளம் பற்றுகிறார். இந்தத் தீர்க்க தரிசனங்களை அறிந்து கொள்ள ஒரு விசேசித்த ஞானம் தேவைப்படுகிறது. இந்த ஞானம் பரத்திலிருந்து அருளப்படும் ஞானமாய் இருக்கிறது. இந்த ஞானத்தின் மூலம் மனுஷ இலக்கமாகிய "666" கணக்குப் பார்க்கப்பட வேண்டியதாய் இருக்கிறது.

சுயதோற்றமுள்ள பொருளையுடையதாய் இராமல் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த விசேசமானது. அந்த அந்தக் காலத்தில் அவைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே அவைகள் சுயதோற்றமுள்ள பொருளை உடையதாய் எழுதப்படவில்லை.

வெளிப்படுத்தின விசேசம் 2 & 3 அதிகாரங்களில் வெளிப்படுத்தப்பட்ட விசேசமான சபைக் காலங்களும் அவைகளின் கால அளவும் 7ம் சபையின் காலத்தில் சகோதரர் வில்லியம் பிரன்காம் அவர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. சபைக்காலங்கள் நிறைவேறி வரும் போதே அந்தக் காலத்துக்குரிய விசேசங்கள் பரிசுத்த ஆவியானவர் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டது. அப்போது வெளிப்படுத்தப்பட்ட அந்த விசேசமானது அதற்கு முற்காலங்களில் வெளிப்படுத்தப்படவில்லை. இயேசுகிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட காலத்துக்குப் பின்னர் அதற்குப் பின்நாளுக்குரிய விசேசங்களைக் கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தியது போல அதற்கு முன்னர் வெளிப்படுத்தவில்லை என்று வேதம் சாட்சியிடுகிறது.

நாம் தற்போது ஜீவிக்கும் இந்தக் காலமானது வெளி. 2 & 3 அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ள ஏழு சபைக்காலங்களும் நிறைவேறிய காலமாகும். வெளிப்படுத்தப்பட்ட விசேசம் 4ம் அதிகாரம் முதல் சொல்லப்பட்டுள்ள காரியங்கள் இந்த ஏழு சபைக்காலங்களும் நிறைவேறிய பின்னர் நிகழ வேண்டியவை என வார்த்தையாகிய தேவன் வெளிப்படுத்தி உள்ளார் (இவைகளுக்குப்பின்பு .... வெளி. 4 : 1).

ஏழு சபைக்காலங்களுக்குப் பின்னர்தான் மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படப் போகிறாள். இந்த மணவாட்டி ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டி. ஆட்டுக் குட்டியானவரின் மணவாட்டி புறஜாதியாகும். 2ம் வருகையில் அதாவது இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்

மணவாட்டி புறஜாதிகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்படப் போகும் தெரிந்தெடுத்த ஜனமாகும். இந்த இரகசிய வருகைக்குப் பின்னர் கிருபை இழந்த ஜனமாகவே புறஜாதி காணப்படும். ஆத்துமாவை கருத்தரிக்கக்கூடிய அந்த ஆவிக்குரிய நிகழ்வு செயல் இழக்கும். நித்திய ஜீவன், ஆக்கினைத் தீர்ப்பு என்ற கர்த்தரின் நீதியுள்ள தீர்ப்பு புறஜாதிகளைவிட்டு அகன்று போகும். அதற்குப் பின்னர் கர்த்தர் இடைபடாத இருண்ட காலமும், பூமியில் குடியிருப்போருக்கு ஜீவியமே உபத்திரவமாகவும், மகா உபத்திரவமாகவும் காணப்படும் காலமாகவே இருக்கும் என்று கர்த்தர் தமது ஆவியின் மூலம் தமது தாசனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தி உள்ளார்.

இந்த ஞானம் கர்த்தரின் வார்த்தையின் மீது தாகம் உள்ளவர்களுக்கே ஊற்றப்படும். தாகமுள்ளவன் மேல் தண்ணீராகிய வார்த்தையை ஊற்றவே கர்த்தர் விரும்புகிறார். வேதத்தில் உள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை உடையதாய் இராதென்று பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலனாகிய பேதுரு மூலம் வெளிப்படுத்தி உள்ளார் (2பேது. 1 : 20). அதன் பொருளை அறிவதற்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் ஞானத்தால் மாத்திரமே அறிந்து கொள்ளமுடியும்.

பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் ஞானத்தின் மூலமாகவே மிருகத்தின் இலக்கமாகிய “666”ஐ கணக்கிட முடியுமேயல்லாமல் மனிதனின் கல்வி ஞானமோ அல்லது உலக ஞானமோ அந்த மிருகத்தின் இலக்கத்தைக் கணக்கிட உதவாது என்றே வேதம் சான்றிடுகிறது. •

வேதவார்த்தையின்படி ஞானமானது இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. பரத்திலிருந்து அனுப்பப்படும் ஞானம்
2. பரத்திலிருந்து அனுப்பப்படாத ஞானம்

பரத்திலிருந்து அனுப்பப்படாத ஞானத்தைக் குறித்து வேதம் யாக். 3:15ல் இவ்விதமாய்ச் சான்றிடுகிறது:

"இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல் லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்கு உரியதும், பேய்த்தனக்குக்கடுத்ததுமாய் இருக்கிறது".

பரத்திலிருந்து அனுப்பப்படாத ஞானமானது மூன்று தன்மையில் இருக்கிறது.

1. லௌகீக சம்பந்தமான ஞானம்
2. ஜென்ம சுபாவத்துக்குரிய ஞானம்
3. பேய்த்தனத்துக்கு அடுத்த ஞானம்.

பரத்திலிருந்து அனுப்பப்படுகிற ஞானமானது பரிசுத்த ஆவியானவர் மூலம் கொணரப்பட்டு அருளப்படுவது. இயேசுகிறிஸ்துவும் தாம் மாமிசத்தில் இருந்த நாட்களில் தம்மைக் கிறிஸ்து என்று அறிக்கையிட்ட அப்போஸ்தலனகிய பேதுருவிடம் "மாமிசமும் இரத்தமும் இதை உனக்கு அறிவிக்கவில்லை, பரலோகத்திலுள்ள என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றே சான்றிடுகிறார் (மத். 16 : 17). பரத்திலிருந்து அனுப்பப்படும் ஞானமானது அது அருளப்படும் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் மூலம் கர்த்தர் தமது ஆதீனத்தில் தாம் முன்குறித்த மாமிச சரீரத்தைக் கொண்டு வெளிப்படுத்துகிறார்.

லௌகீக சம்பந்தமான ஞானம்:

லௌகீக சம்பந்தமானது உலக ஞானமாகும். மருத்துவப்படிப்பு (MBBS) கற்க வேண்டுமானால் மருத்துவத்தில் ஒருவர் மருத்துவக் கல்லூரியில் கற்று, கற்றுத் தேறியதற்கு உரிய சான்றும் பெற்றால்தான் அவர் அங்கீகாரம் பெற்ற மருத்துவர் ஆவார். இவ்வாறாக ஒவ்வொரு துறைக்கும் பாடநூல்கள் வரையறை செய்யப்பட்டு அவைகளில் தேறுகிறவர்களுக்கு உரிய சான்று வழங்கப்படுகிறது. இதைப் போன்று IAS, IFS, IRS போன்ற தேர்வுகளும் நடத்தப்படுகிறது. இவைகளில் தேறுகிறதற்கு ஒரு ஞானம் தேவைப்படுகிறது. இந்த ஞானமே உலக ஞானம். இந்த வகையிலான உலக ஞானத்தையே லௌகீக ஞானம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உலகத்துக்குரிய ஞானத்தால் கர்த்தரை அறியமுடியாது. உலகத்துக்குரிய இந்த ஞானத்தினால் கர்த்தரை நாம் காணவும் முடியாது. வார்த்தையை அறிய முடியாது. வார்த்தையின் இகரசியத்தை அறிய முடியாது. புத்தியுள்ளவனால் கணக்குப் பார்க்கச் சொல்லப்பட்டுள்ள "666" என்ற இலக்கத்தினைக் கணக்குப் பார்க்கவும் முடியாது. இந்தக் கணக்கினைக் கணக்குப் பார்க்கத் தேவைப்படும் ஞானம் லௌகீக ஞானமல்ல.

இந்த லௌகீக ஞானமானது எவ்வாறு இருக்கும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கீழ்க்காணுமாறு தெரிவித்துள்ளார்.

"(லௌகீக ஞானமானது) அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலகவழிபாடுகளையும்

பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றியதல்ல" (கொலோ. 2 : 8).

உலக ஞானமானது பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் கொண்டுள்ளதாய் இருக்கிறது. **இன்றைக்குக் கிறிஸ்தவ சமுதாயம் இந்த லௌகீக ஞானத்துக்குள்ளாகச் சிக்கிக் கர்த்தரைத் தேட முயற்சித்துக் கொண்டிருக்கிறது.** இன்று ஒரு சில திருச்சபைகளைத் தவிர பிற திருச்சபைகள் குழந்தை ஞானஸ்நானம் என்ற முறைமையைப் பின்பற்றி வருகிறது. வேதாகமத்தில் குழந்தை ஞானஸ்நானம் என்று ஒரு ஞானஸ்நானம் ஒரு நிகழ்விலும் கொடுக்கப்படவில்லை. முதன் முதலில் "அகுஸ்தினார்" என்ற ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்த பாதிரியார் குழந்தை ஞானஸ்நான பாரம்பரியத்தை உருவாக்கினார். கி.பி. 354க்குப் பின்னர் தான் இந்தக் குழந்தை ஞானஸ்நான முறைமை கடைபிடிக்கப்பட ஆரம்பித்தது.

ஞானஸ்நானமானது பாவமற கழுவப்படுவதற்காக கொண்டு வரப்பட்ட முறைமை. குழந்தைப் பருவம் பாவமறியாப் பருவம். அந்தப் பருவத்தில் பாவமறக் கழுவப்பட நியமித்த நியமனமான ஞானஸ்நானம் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு பாவமறக் கழுவப்பட்ட குழந்தை, குழந்தைப் பருவத்தைக் கடந்த பின்னர் தான் இச்சைக்குரிய, பாவத்துக்குரிய காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கிறது. வேத வார்த்தைகளின்படி ஒரு முறை கழுவப்பட்டுப் பின்னர் பாவம் செய்வோமானல் மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியமாகும் (எபி. 6 : 6).

இவ்வாறு மறுபடியும் புதுப்பிக்கக் கூடாத ஸ்நானத்தைக் கொடுத்து அந்தக்குழந்தையை ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தக் கொடுக்கப்படும் குழந்தை ஞானஸ்நானத்தைக் குறித்து உணர்வற்ற தன்மையில் செயல்படும் திருச்சபைகள் கடைப்பிடித்து வருவது உலக வழிபாட்டுக்குரிய செயலாகும்.

ரோமன் கத்தோலிக்க திருச்சபை எழும்பிய காலத்திற்குப் பின்னர் தான் இவ்வாறாகத் தற்போது செய்யப்பட்டு வரும் அநேக காரியங்கள் உலக வழிபாடாய்க் கடைப்பிடிக்கப்பட்டது.

அவைகளில் சில:

1. கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்
2. சாம்பல் புதன் கிழமை (ASH WEDNESDAY)
3. பெரிய வெள்ளி (GOOD FRIDAY)
4. உயிர்தெழுதலின் பண்டிகை (EASTER)
5. குழந்தை ஞானஸ்நானம்
6. குழந்தைகளுக்கும் கிறிஸ்துவின் சரீரத்தைப் பிட்டுக் கொடுக்கும் புது நன்மை.

வேதாகமத்தில் மூன்றாம் திருச்சபையின் தூதனாய் வெளிப்படுத்தப்பட்ட தேவ ஊழியன் மார்ட்டீன் (கி.பி.312) மூலம் அறிவிக்கப்பட்ட சபையாகிய பெர்கமு சபையின் காலத்தில் தான் இந்த ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை உதயமானது. இந்தத் திருச்சபையின் காலத்தில்தான் பெரும்பாலான மேற்சொல்லப்பட்ட வழிபாடுகள் கொணரப்பட்டது.

பரிசுத்த ஆவியானவர் அக்காலத்திலே எழும்பக்கூடிய ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினை "நிக்கொலாய் மதஸ்தார்" (வெளி 2: 15) என்று முன் அறிவித்துள்ளார். இது ஏற்கனவே 7ம் திருச்சபையின் தூதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மறை பொருளாகும். இதனை வெளிப்படுத்தக் கர்த்தர் அந்த தூதனுக்குப் பரத்திலிருந்து வரும் ஞானத்தைக் கட்டளையிட்டு வெளிப்படுத்தி உள்ளார்.

பாரம்பரியமாய் நடந்து வரும் முறைமையே லௌகீக சம்பந்தமானது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஞானஸ்நானம், புது நன்மை (கர்த்தருடைய பந்தி), திருமணம், குழந்தைப் பேறு ஸ்தோத்திரக் காணிக்கை, குழந்தை ஞானஸ்நானம், பிள்ளைகளுக்கு திருமணம், பின்னர் மரணம் இப்படியாக 5/6 பிரிவுகளாகப் பகுத்து அவைகளின் காலங்களில் தொன்று தொட்டு தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் அநேகக் காரியங்கள் இன்று பாரம்பரியமாய்க் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு தொன்று தொட்டு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் இந்தக் காரியங்கள் ஏன் என்றும், எதன் அடிப்படையில் இவ்வாறு செய்யப்படுகிறது என்றும் உணர்ந்து கொள்ள முயலாமலும் உணர்ந்து கொள்ளாமலும் செயல்படச் செய்வது இந்தப் பாரம்பரியம்.

குழந்தை ஞானஸ்நானம் என்பது குழந்தை விருத்த சேதனம் என்ற அடிப்படையில் கொண்டு வரப்பட்டது. இவ்வாறாகக் கொடுக்கப்படும் குழந்தை ஞானஸ்நானமானது நியாயப்பிரமாண காலத்தில் விருத்தசேதனத்தைக் குறித்து உணர்வில்லாதபடி ஒரு பாரம்பரியச் செயலாய் இஸ்ரவேலர் கடைப்பிடித்தது போல இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும் செயல்பட்டு வருகிறது.

உணர்வற்று பாரம்பரியமாய்ச் செய்யப்படும் இந்த ஞானஸ்நானம் அப்போஸ்தலனாகிய பவுல் அன்று உரைத்தது போல உணர்வற்ற தன்மையிலான விருத்தசேதனமாகவே காணப்படுகிறது. எனவே அன்று பவுல் சொன்ன அதே வார்த்தையைப் பரிசுத்த ஆவியானவர் இன்றைக்கும் திருவளம் பற்றுகிறார். உணர்வற்ற இந்த ஞானஸ்நானமும் அன்றைய விருத்தசேதனம் போல் "இருந்தாலும் ஒன்றுமில்லை, இல்லாவிட்டாலும் ஒன்றுமில்லை." புது சிருஷ்டியே காரியம். வார்த்தைக்குரிய உணர்வு கொண்டு புதுப்பிக்கப்பட்டு ஜீவ ஆத்துமாவைப் பெறுவதே காரியம். வார்த்தையானவர் வார்த்தை மூலம் கொடுக்கும் பரிசுத்த ஆவி என்ற முத்திரையே முக்கியம்.

ஞானஸ்நானம் ஒரு மாமிசத்திற்குரிய நிகழ்வு அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவுக்கு வந்து அங்கே இருந்த சீசர்களிடம் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்ட பொழுது அவர்கள் அப்படி பரிசுத்த ஆவி உண்டு என்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவர்கள் ஞானஸ்நானம் பெற்று, பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார் (அப். 19: 1–6) என்று வேதம் சாட்சியிடுகிறது.

ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியானவர் ஒரு சரீரத்தின் மீது வந்தமரக் கொடுக்கப்படும் ஒரு அடையாளமாகும். ஆனால் இந்த உணர்வின்றி ஞானஸ்நானம் கொடுப்பதும், பெற்றுக் கொள்வதும் பாரம்பரியமாக மாற்றப்பட்டுள்ளது. நாமத்தைக் குறித்து சகோ. வில்லியம் பிரன்காம் மூலம் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தி அந்த ஸ்நானத்தின்

மூலம் பரிசுத்த ஆவியை அநேகர் பெற்று வார்த்தைக்குச் சாட்சியிட்டனர். இந்த நிலையில் அதனைக் கிறிஸ்தவர்களில் அனைத்துப் பிரிவு சபையாரும் ஏற்றுக் கொண்டார்களா? இல்லையே. இன்று நாம் அந்தக் காலத்தையும் கடந்து அடுத்த காலத்திற்குள் வந்திருக்கிறோம். அடுத்த கட்டத்தை அடையும் போது தான் முந்தைய காலத்தின் சுவிசேசத்தைத் திரள் கூட்டம் ஏற்றுக் கொள்ளும். சிறு மந்தை மாத்திரமே அந்தக் காலத்துக்குரிய சுவிசேசத்தை ஏற்றுக் கொள்ளும்! விசுவாசிக்கும்! நீங்கள் அந்த சிறு மந்தையாய் இருக்கக் கர்த்தர் கிருபை செய்வாராக! ஆமென்! ஆமென்!!

இன்று ஏறக்குறைய எல்லாத் திருச்சபைகளும் கர்த்தரின் நாமத்தை– பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தை "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" என்று விசுவாசிக்க ஆரம்பித்து விட்டார்கள். காரணம் விசுவாசிப்பதற்காக சுவிசேசமாய் அறிவிக்கப்பட்ட அந்தக் காலம் தற்போது முடிந்து நாம் அடுத்த கால கட்டத்திற்குள்ளாகக் கடந்து வந்திருக்கிறோம்.

முந்தையவற்றை விசுவாசிக்கும் மந்தைகளுக்குள்ளாக இந்தக் காலத்துக்குரிய வார்த்தையை விசுவாசிக்கும் சிறு கூட்டம் இருக்கிறது. சிறு கூட்டம் ஏற்றுக் கொள்ளும். பெருங்கூட்டம் ஏற்றுக் கொள்ளாது.

கேட்டின் மகனாகிய பாவமனுஷனை பரிசுத்த ஸ்தலத்தில் வெளிப்படுத்துவது இந்தக் காலத்துச் சுவிசேசம்! பாழாக்குகிறவனைப் பரிசுத்த ஸ்தலத்தில் அடையாளம் காட்டுவது இந்தக் காலத்துச் சுவிசேசம். எருசலேமாய் எழுப்பப்பட்ட, கர்த்தர் நாட்டின திருச்சபைகள் அனைத்தும் அசுத்த ஆவிகளின் காவல்வீடாய் மாறியிருப்பதை

வெளிப்படுத்துவது இந்தக் காலத்துச் சுவிசேசம். எருசலேமாய்த் திகழ்ந்த திருச்சபைகள் பாபிலோனாய் மாறியிருப்பதை அறிவிப்பது இந்தக் காலத்துச் சுவிசேசம்.

இன்றைக்கு இருக்கக்கூடிய திருச்சபை ஒழுங்குமுறைமை, பாரம்பரியம் ஆகிய அனைத்துக்கும் வித்திட்டது ரோமன் கத்தோலிக்க திருச்சபையே. எனவே இந்தத் திருச்சபையைத் தாய் என்றே வேதம் சான்றிடுகிறது (வெளி. 17 : 5). இந்தத் தாயான திருச்சபையே பிரிவினையாளர்கள் சபை (PROTESTANT) எழும்பிய போது அதன் விசுவாசிகளின் இரத்தத்தினால் வெறி கொண்டிருந்தது (வெளி. 17 : 6).

இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்கு முன்னர் நடக்க வேண்டியவைகளாய் வேதத்தில் முன்னறிவிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. ஏழு திருச்சபைகளின் காலமும் நிறைவு பெற வேண்டும் (வெளி. 4 : 1).
2. இராஜ்யத்தினுடைய சுவிசேசம் பூலோகமெங்குமுள்ள ஜனங்களுக்கு சாட்சியாய் அறிவிக்க வேண்டும் (மத். 24 : 14).

சாட்சிகளாய் அறிவிக்கப்பட வேண்டிய சுவிசேசம்!

a) கேட்டின் மகனாகிய பாவமனுஷனை வெளிப்படுத்துவது (2 தெச. 2 : 3,6).

b) பாழாக்குகிறவனைப் பரிசுத்த ஸ்தலத்தில் அடையாளம் காட்ட வேண்டும் (மத். 24 : 15).

c) பரிசுத்த ஸ்தலம் (தேவாலயம்) பேய்களுடைய காவல் வீடாய் மாறியதை அறிவிக்க வேண்டும் (வெளி. 18 : 2).

மிருகத்தின் முத்திரையானது மனுஷனுடைய இலக்கத்தின்படி "666" ஆனால் அந்த இலக்கத்தைக் கணக்குப் பார்க்கப் புத்தி தேவைப்படுகிறது. இந்த ஞானம் பரத்திலிருந்து அருளப்படும் ஞானம். இந்த ஞானமானது லௌகீக ஞானமல்ல. லௌகீக ஞானத்தினால் இந்த இலக்கத்தைக் கணக்குப் பார்க்க முடியாது. இந்த இலக்கம் மனுஷ இலக்கத்தின்படி "666" ஆகும்.

அதன் இலக்கம் "666" எனக் குறிப்பிடப்பட்டுள்ளதின் ஞான அர்த்தம் :

அப்போஸ்தலனாகிய யோவானுக்கு பத்மு தீவில் வெளிப்படுத்தப்பட்ட காரியம் நிகழும்போது, அந்தக் காலமானது முதலாம் திருச்சபை எழுந்த காலம். அதற்கு பின்னர் ஆறு சபைகாலங்கள் நிறைவேறவேண்டும். அடுத்த ஆறு சபை காலங்களுக்குப் பின்னர் மிருகத்தின் இலக்கம் குறித்த ஞானம் வெளிப்படும்.

இரண்டு, மூன்று சாட்சிகள் மூலம் காரியம் உறுதி செய்யப்படும் (2 கொரி. 13 : 1) என்ற வேத வார்த்தைக்கு ஏற்ப, அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட காலத்துக்குப் பின்னர் எழும்பும் ஆறு சபைக் காலங்களுக்குப் பிறகு இந்த மிருகத்தைக் குறித்த காரியங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சாட்சிகள் மூலம் வெளிக்கொணரப்படும். எனவே கணக்குப் பார்த்து அறிந்து கொள்ளக்கூடிய இக்காரியங்கள் "666" என்ற இலக்கமாய் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு அன்று வெளிப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு காலங்களிலும் ஒவ்வொரு காரியத்தைக் கர்த்தர் பரத்திலிருந்து அருளிய ஞானத்தினால் ஏழு திருச்சபையின் காலங்களிலும் அறிவித்துள்ளார்.

கிறிஸ்துவுக்கு 2000 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜீவிக்கும் நாம் இந்த ஏழு திருச்சபையின் காலங்களையும் கடந்த பின்னரான காலத்தில் இருக்கிறோம். வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் மணவாட்டி பூரண வடிவுள்ளவள் (எபே. 4 : 11). கிறிஸ்துவைக் குறித்து அறியக்கூடிய அறிவின் வளர்ச்சியில் பூரணப்பட்டவள். ஏழு திருச்சபையின் காலங்களிலும் மணவாட்டியானவள் ஒவ்வொரு விதமான ஞானத்தினால் போஷிக்கப்பட்டு வளர்க்கப்பட்டிருக்கிறாள். 7வது திருச்சபையின் காலம் மணவாட்டி பூப்பெய்திய காலம். அவள் கன்னிகைத் தன்மை அடைந்த பருவம். 7வது திருச்சபையின் பின்னரான இக்காலம் மணவாட்டி தனித்து இயங்கக் கூடிய பருவம். அவள் தாய்மை அடையக் கூடிய பருவத்தை அடைந்துவிட்டாள். இந்த மணவாட்டி இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது எடுத்துக் கொள்ளப்படக் கூடிய தன்மைக்கு வடிவமைக்கப்பட்டு வருகிறாள். உலக வழிபாடுகளில் இருந்து மணவாட்டி பிரித்தெடுக்கப்படக் கூடிய காலம். ஏனெனில் அவள் தனித்துத் தன் மணவாளனுக்காய் இயங்கக் கூடிய பருவம்.

பெத்துவேலின் மகளான ரெபெக்காள் தன் தாயையும் தன் தகப்பன் வீட்டாரையும் தன் சகோதரனையும் விட்டு நீ இந்த மனிதனோடே கூடப் போகிறாயா என்று கேட்டபொழுது "போகிறேன்" என்று சொல்லித் தன்னை விடுவித்துத் தன் மணவாளனோடே இணையச் சென்றது போல (ஆதி 24:58) ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியும் பெத்துவேலின் கூடாரத்தைவிட்டு ரெபேக்காள் சென்றது போல தன்னை வேறு பிரித்துத் தன் மணவாளனோடே இணையக் கூடியவாறு தன்னைத் தனிமைப்படுத்தக்கூடிய பருவத்தை அடைந்து விட்டாள்.

எனவே வார்த்தையான தேவன் பாபிலோனாய் சித்தரிக்கப்பட்டுள்ள பெத்துவேலின் கூடாரமாகிய திருச்சபை ஒழுங்கு என்ற கோட்பாட்டினை விட்டு, பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை என்ற கூடுகைக்குள் வரத் தன்னை விடுவித்துக் கொள் என்று தன் ஜனமாகிய மணவாட்டிக்கு வார்த்தையைத் தூது அனுப்புகிறார் (வெளி. 18 : 4).

இஸ்ரவேலருக்கு நித்திய ஜீவன் என்ற முற்பகுதி நிறைவின் காலத்தில் பரிசுத்த ஆவியானவர் பவுல் மூலம் வெளிப்படுத்திய வார்த்தையானது மாமிசத்தில் செய்யப்படும் விருத்தசேதனம் விருத்தசேதனம் அல்ல. மாமிசத்திற்குரிய இஸ்ரவேலர் அல்லாதபடிக்கு ஆவிக்குரியவர்களாய் மாற வேண்டும் என்பதே அன்றைக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தையின் அழைப்பு. எருசலேம் தேவாலயத்தின் மேலும், தாங்கள் மோசேயின் நியமனத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்பதிலும் வைராக்கியமாய் இருந்த ஜனங்கள் தாங்கள் பெத்துவேலின் கூடாரத்தை விட்டுப் பிரிய மனது இல்லாததால் இரட்சிப்பைப் பெறாமல் இரட்சிப்பின் அதிபதியைச் சிலுவையில் அறைந்தார்கள்.

இன்றைக்குப் பாபிலோனாகியத் திருச்சபையின் கோட்பாடு என்ற பெத்துவேலின் கூடாரத்தைவிட்டு வெளிவர மனதில்லாத மந்தை, ஆட்டுக்குடியானவரின் மணவாட்டியல்ல என்றும், மணவாட்டி தன்னை வேறு பிரித்து கர்த்தருக்கென்று என்று தன்னை ஒப்புக்கொடுக்கும் சிந்தையுடையவளாய் மாற வேண்டும் என்பதையே கர்த்தர் கிருபையின் கடைசி காலமாகிய இக்காலத்துக்குரிய தமது வார்த்தையாய்த் திருவளம் பற்றுகிறார்.

லௌகீக ஞானமோ, பாரம்பரிய செயல்பாடோ பரத்திலிருந்து வரும் ஞானத்தை ஏற்றுக் கொள்ளாது. மேலும்

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம் 6ம் அதிகாரம் 20வது வசனத்தில் கீழக்காணுமாறு பரிசுத்த ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்:

"....ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு".

இன்று ஞானம் என்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கைகளையே திருச்சபைகள் கோட்பாடுகளாய்க் கொண்டிருக்கிறது. அந்தக் கோட்பாடுகளின்படியே இன்றைய திருச்சபைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைகள் தனக்கென்று ஒரு கோட்பாட்டினைக் கொண்டிருக்கிறது. அதன்படி மந்தையை மேய்க்கிறவர்களாய் ஒப்புக் கொடுத்து செயல்படும் பாதிரியார்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்பது சிலபிரிவு திருச்சபைகளின் கொள்கையாய்க் கடைப் பிடிக்கப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுலோ, பரிசுத்த ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடியான ஒரு காரியமாவது பிற்காலங்களிலே இப்படியாக நடக்கும் என தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்:

"... பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்."

"விவாகம் பண்ணாதிருக்கவும் ... வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்..." (1தீமோ. 4 : 1,2,3).

ஞானமென்று பொய்யாய்க் கட்டளையிடப்பட்டு அந்தக் கட்டளையினை இன்று ஒரு சில திருச்சபைகள் கொள்கைகளாய்க் கடைப்பிடித்து வருகிறது. இன்று

திருச்சபைகளுக்கென்று வகுக்கப்படும் கோட்பாடுகள் பரத்திலிருந்து அருளப்படும் ஞானமல்ல.

அது போலவே பெந்தேகோஸ்தே இயக்கங்களும் தங்களுக்கு என்று ஒரு கோட்பாட்டினைக் கொண்டு செயல்படுகிறது. அதன்படி அது தன்னிடத்தேயுள்ள விசுவாச சகோதரிகள் பொன் ஆபரணங்களிலாவது, முத்தாபரணங்களிலாவது தங்களை அலங்கரிக்கக் கூடாது என்ற கட்டளையை நடைமுறைப்படுத்துகிறது. ஆனால் நகைகளினால் அலங்கரியாதிருந்தும், மயிரைப் பின்னியிருக்கும் அந்தச் சகோதரியின் செயல்பாட்டினுக்கு அது தடை விதிக்காது. ஏதோ ஒரு காரியத்தை மாத்திரம் கொள்கையாய்ப் பின்பற்றிக் கொண்டு தங்கள் திருச்சபையினைப் பிற திருச்சபைகளிலிருந்து வேறு பிரிக்கச் செய்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் ஸ்திரீகள் எவ்வாறு தங்களை அலங்கரிக்க வேண்டும் என்று கூறினார்.

“ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது விலையேறப் பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்” (1தீமோ. 2 : 9,10).

மேலும் அப்போஸ்தலனாகிய பேதுருவும் எப்படியான அலங்காரத்துடன் ஸ்தீரிகள் தங்களை அலங்கரிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

“மயிரைப் பின்னி பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய

புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாய் இருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" (1பேது. 3 : 3,4).

ஆனால் வெளியரங்கமான அலங்காரங்களில் ஒருசிலவற்றை மாத்திரம் தவிர்த்து எவைகளைக் கொண்டு அலங்கரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டதோ அவைகளின் முக்கியத்துவத்தை நடைமுறைப்படுத்தாமல் செயல்படுவது பரத்திலிருந்து வரும் ஞானமாய் இராது. இவைகள் வெறும் கொள்கைகளும் கோட்பாடுகளுமேயாகும். இத்தகைய கொள்கைகளும் கோட்பாடுகளும் ஒருவரை நித்திய ஜீவனுக்குள் அழைத்துச் செல்லாது. இவைகள் மாமிசத்தைப் பேணுவதற்காவும், மாமிசத்தில் அடக்கத்தை வெளிப்படுத்தப்பட்டவையுமே தவிர ஜீவனுக்குரியவைகள் அல்ல.

பிற திருச்சபைகளில் இருந்து தங்களை வேறுபிரிக்க மாமிசத்தில் காண்பிக்கும் எந்த அடையாளமும் பரிசுத்த ஆவியானவரின் வார்த்தையின்படி ஜீவனுக்குரியது அல்ல.

எல்லா திருச்சபை கோட்பாடுகளுக்குள்ளும் ஒரு நூல் இழையானது ஊடுருவி வந்து கொண்டிருக்கும். அந்த நூல் இழையானது எல்லாத் திருச்சபைகளை"யும் இணைத்துக் கொண்டு இருக்கும். ஒவ்வொரு சபைக்காலங்களிலும் அந்தக் கால வார்த்தைக்குரிய சபைக்காலம் எழும்பும் போது அந்த நூல் இழையானது துண்டிக்கப்பட்டு அத்திருச்சபை மாத்திரம் தனிமைப்படுத்தப்படும். ஆனால் அந்தச் சபைக் காலத்தின் நிறைவில் அறுந்த நூல் இழையானது சேர்க்கப்பட்டு எல்லாத்

திருச்சபைகளும் அந்தந்தத் திருச்சபையின் கோட்பாடு என்ற கொள்கையின் மூலம் இணைக்கப்படும். அந்த நூல் இழையின் ஒரு புறமானது வலுசர்ப்பத்தின் கரத்தில் உள்ளது. அந்த நூல் இழையே இன்று மிருகம் என்ற தன்மையைக் கொண்ட கொள்கை. இந்த மிருகத்திற்கு இத்தகைய அதிகாரத்தைக் கொடுத்தது வலுசர்ப்பம் (வெளி. 13 : 4). வலுசர்ப்பமானது அதற்குக் குறிக்கப்பட்ட காலத்தில் எல்லா திருச்சபைகளையும் தன்னுடைய கூடாரமாக மாற்றும். தான் குடியிருக்கும் குடியிருப்பாக மாற்றும் (வெளி. 18 : 2). தேவனுடைய ஆலயத்தில் தேவன் போலத் தனது ஆவியின்படி செயல்படும் (2தெச. 2 : 4).

இப்படியாக எல்லாத் திருச்சபைகளும் வலுசர்ப்பத்தின் கீழ் வரவேண்டும் அப்போதுதான் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை வரும். இப்படியாகவே வேதம் சாட்சியிடுகிறது. பரிசுத்த ஆவியானவரும் திருவளம் பற்றுகிறார் (2தெச. 2 : 1,4).

இப்படியாக எல்லாத் திருச்சபைகளையும் தனது ஆளுகையின் கீழ் ஆவியின்படியாக வலுசர்ப்பமானது (பழைய பாம்பு, லூசிபர், அந்திக் கிறிஸ்து, சாத்தான்) எடுத்துக் கொள்வது வெளிப்படுத்தப்பட வேண்டும். அப்படி வெளிப்படுத்துவதற்காகத் தெரிந்து கொண்ட சுவிசேசமே ராஜ்யத்தின் சுவிசேசம். அந்தச் சுவிசேசம் சாட்சியாய்ச் சொல்லப்பட்டவுடன் முடிவு வரும் (மத். 24 : 14). அவனை வெளிப்படுத்தக் கொடுக்கப்பட்ட காலத்தில் அது நடக்கும் (2தெச. 2 : 6). **இந்த விசேசங்களை அறிவிப்பதற்காகக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த ஊழியத்தைத் தெரிந்தெடுத்துள்ளார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக! ஆமென்!**

எந்த எந்தக் காலங்களில் எந்த எந்தக் காரியங்கள் அறிவிக்கப்பட வேண்டும் என்று பிதாவாகிய தேவன் சித்தம் கொண்டாரோ அந்த அந்தக் காலங்களில் அந்த அந்தக் காரியங்களைக் கர்த்தர் தமது ஆவியின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். அவைகளை அறிந்து கொள்ளத் தேவைப்படும் ஞானமானது உலகத்துக்குரிய ஞானம் அல்ல. அந்த ஞானம் பரத்திலிருந்து அருளப்படும் ஞானமாகும். அதை உணர்த்தக்கூடிய ஆவி உலகத்துக்குரிய ஆவியல்ல. அந்த ஆவி பரத்திலிருந்து அருளப்படும் ஆவியாகும். பரத்திலிருந்து அருளப்படும் ஆவியினால் அறிவிக்கப்படும் ஞானம் அந்தக் காரியங்களை அறியக்கூடிய ஞானமாகும். ஆனால் இன்றைய திருச்சபைகள் பரத்திலிருந்து அருளப்படும் ஆவியினால் அருளப்படும் ஞானத்தைக் கொண்டு போதியாமல் உலக ஞானத்தால் போதித்து உலக ஞானத்தைக் கொண்டு உலகக் காரியங்களுக்காக சுவிசேசித்துக் கொண்டிருக்கிறது.

ஆவியின் சிந்தையுள்ள ஜனங்கள் ஏற்றுக் கொள்வார்களாக! ஆமென்!!

2. ஜென்ம சுபாவத்துக்குரிய ஞானம்:

"ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்கு உரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால் அவைகளை அறியவும் மாட்டான்...." (1கொரி. 2 : 14).

ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளமாட்டான். இந்த

ஜென்ம சுபாவமான மனிதன் ஆதாமுக்கு முன்னர் 6ம் நாளில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் ஆகும். மறுமை என்ற நித்திய ஜீவன் பெற அனுமதிக்கப்படாத மனிதன். மிருக ஜீவன்களைப் போல இனவிருத்தி செய்து தனக்குரிய காரியங்களைத் தனக்கென்று ஏற்படுத்திக் கொள்பவன். தன் ஆயுசின் நாட்கள் நிறைவேறிய பின்னர் மண்ணான சரீரமானது மண்ணுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு, ஆவியானது கர்த்தரிடம் திரும்பச் செல்லும் நிலையில் மாத்திரம் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன். மாமிசமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே நம்முடைய தேவனாகிய கர்த்தர் (எண். 16 : 22). ஆத்துமா என்ற உள்ளான மனுஷன் இல்லாத நிலையில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன்தான் இந்த ஜென்ம சுபாவத்துக்குரிய மனிதன்.

ஜீவ ஆத்துமா உள்ளவனாக 8ம் நாளில் சிருஷ்டிக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாம் (ஆதி. 2 : 7). சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன் (உயிர்) உள்ள முதல் மனிதன் ஆதாம் அல்ல.

ஆத்துமா இல்லாதபடி சிருஷ்டிக்கப்பட்ட உயிருள்ள மனிதனான ஜென்ம சுபாவமுள்ள மனிதன் ஆவிக்குரிய காரியங்களை ஏற்றுக்கொள்ள மாட்டான். ஆவிக்குரிய காரியங்கள் அவனுக்கு பைத்தியம் போலத்தான் தோன்றும். ஆவிக்குரியவர்கள் அவர்களுக்கு பைத்தியக்காரன் போலத் தான் தோன்றுவார்கள். இயேசு கிறிஸ்துவையும் மாமிசத்தில் வெளிப்பட்ட நாட்களில் பிசாசு பிடித்தவன் என்றும் பைத்தியம் பிடித்தவன் என்றுமே அறிக்கையிட்டனர் (யோவா. 10 : 20).

ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்பட வேண்டியவைகளை மாமிசத்தின்படி நிதானித்து அறிய

விரும்புவதால் அவைகள் அவர்களுக்குப் பைத்தியமாகவே தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் அவர்களால் நிதானித்து அறியவும் முடியாது. ஆவிக்குரியவனோ பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளை ஆராய்ந்து நிதானிக்கிறவனாய்க் காணப்படுகிறான் (1கொரி. 2 : 14,15).

ஆராதனைக் கூடாரத்திற்கு கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த ஜென்ம சுபாவம் உள்ள மனிதன் பிரவேசிக்கமாட்டான். ஏதாவது சில இம்மைக்குரிய காரியங்களுக்காக மாத்திரம் சபைகளோடே ஐக்கியம் வைத்து, பரிசுத்த ஆவியைக் குறித்த உணர்வும், நித்திய ஜீவனைக் குறித்த அறிவும் இல்லாதபடிக்கு ஜீவிக்கும் ஒரு மாமிச பிண்டம். நித்திய ஜீவனைக் குறித்த உணர்வற்ற ஒரு மாமிச சடலமே இந்த ஜென்ம சுபாவமான மனிதன்.

ஜென்ம சுபாவமான மனிதன் எந்தச் சூழ்நிலையிலும் தான் கர்த்தருடைய ராஜ்யமாகிய பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்ற சிந்தையே இல்லாதவன். நித்திய ஜீவனுக்குரிய சிந்தை அவனுக்குப் பைத்தியம் போலவே காணப்படும். நித்திய ஜீவனைப் பெற நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள் பார்வையில் பைத்தியக்காரர்கள் போலவே தோன்றும். இந்த ஜென்ம சுபாவத்துக்குரிய ஞானம் பரத்திலிருந்து அனுப்பப்படும் ஞானத்தை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. அது அவன் பார்வைக்கு பைத்தியம் போலவே தோன்றும்.

ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு அவனது மாமிச சரீரத்திலேயே நன்மை தீமை அனுபவிக்க அனுமதிக்கப்படும். இந்தத் தன்மையுள்ள மனிதனுக்கு நியாயத்தீர்ப்போ, ஆக்கினைத் தீர்ப்போ கிடையாது. அவனுக்கு வழங்கப்படும்

தீர்ப்பு அவனுடைய மாமிச சரீரத்தில் இருக்கும் போதே அவனுக்கு அனுமதிக்கப்பட்டு தீர்க்கப்படும் அல்லது அவனது மாமிச பிறப்புகளுக்கு அவைகள் அனுமதிக்கப்பட்டுத் தீர்க்கப்படும்.

ஜென்ம சுபாவத்தாரின் ஞானம் மாமிசத்தைப் பேணவும், தன் சுய சிந்தையைக் கொண்டதாயும் இருக்கும். மிருக ஜீவன்களைப் போல ஜீவிக்கும். மிருக ஜீவன்களுக்கு 5 அறிவு. ஜென்ம சுபாவமான மனிதனுக்கோ 6 அறிவு. பகுத்தறியக் கூடிய 6வது அறிவு அவனிடம் உண்டு. ஆனால் ஆத்துமா ஜனிப்பிக்கப்பட்ட மனிதனுக்கு உரிய 7ம் அறிவு அவனிடம் இராது. இந்த 7வது புலனாகிய விசுவாசம் அவன் பார்வைக்குப் பைத்தியம் போலவே தோன்றும். இந்த 7ம் புலனாகிய ஆத்தும நியாயத்தீர்ப்பு அல்லது ஆக்கினைத் தீர்ப்பு அவன் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரியமாய் இராது. 7–ம் புலன் கொண்ட ஜனம் அவன்பார்வைக்குப் பைத்தியக்காரர்கள் போலவே தோன்றும். 7ம் புலன் அதாவது 7வது அறிவு ஆத்துமாவைக் குறித்த உணர்வை உருவாக்கும் புலன்/ அறிவு. இந்தப் புலன் உள்ளவனே ஆவிக்குரியவன். இந்த ஆவிக்குரியவர்களுக்கு நியாயத்தீர்ப்பு அல்லது ஆக்கினைத் தீர்ப்பு.

நியாயத்தீர்ப்பு:-

பரிசுத்த ஆவியின் கூடுகையினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஆத்துமா ஜீவ ஆத்துமா. இந்த ஜீவ ஆத்துமா நியாயந்தீர்க்கப்பட்டுப் பரலோக ராஜ்யத்தை அடையும். ஜீவ ஆத்துமா பெற்ற ஜனம் சரீரத்தில் செய்த நன்மை தீமைக்கு நியாயத்தீர்ப்பு கர்த்தரது சமூகத்தில் பரலோக இராஜ்யத்தில் வழங்கப்படும்.

ஆக்கினைத் தீர்ப்பு:-

அசுத்த ஆவியின் கூடுகையினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஆத்துமா மரண ஆத்துமா. இந்த மரண ஆத்துமா பெற்ற ஜனம் ஆக்கினைத் தீர்ப்படைய 2ம் மரணத்துக்கு உள்ளாக்கப்பட அக்கினியும் கந்தகமும் எரியும் கடலில் தள்ளப்படும். இது இரண்டாவது மரணம்.

ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு இரண்டாம் மரணம் இல்லை. ஜென்ம சுபாவமுள்ள மனிதனுக்கு ஆக்கினைத் தீர்ப்போ, நியாயத்தீர்ப்போ இல்லை. அவனுடைய ஜனனமும் மரணமும் மிருகத்தைப் போலவே இருக்கும். அவனுடைய ஜீவியமும் மிருகத்தைப்போலவே இருக்கும். மிருககுணமுள்ள மனிதன் தேவனை அறியான் (சங். 92 : 5, 6).

ஜென்ம சுபாவமுள்ள மனிதனின் ஞானம் மாம்சத்திற்குரிய ஞானம். இது பரத்திலிருந்து உருவான ஞானமல்ல.

3.பேய்த்தனத்துக்கடுத்த ஞானம்:-

பேய்த்தனத்துக்குரிய ஞானம் பரத்திலிருந்து உண்டான ஞானமல்ல. அது 4ம் வானத்திலிருந்து உண்டான ஞானமல்ல. அது 2ம் வானத்திலிருந்து அனுப்பப்படும் ஞானம். இந்த ஞானம் பேய்த்தனத்துக்குரிய ஞானம். அது வலுசர்ப்பத்தின் ஆலோசனையின்படிச் செயல்படும் ஞானம். இது சாத்தானின் ஞானம். இந்த ஞானம் நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லாது. இந்த ஞானம் ஆக்கினைத் தீர்ப்புக்கு அழைத்துச் செல்லும். இந்த ஞானம் அதன் பிள்ளைகளால் அதாவது பிசாசின் பிள்ளைகளால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஞானம்.

"சீக்கிரம் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு.... வெளிப்படுத்தினதுமான விசேஷம்"
(வெளி. 1:1)

JESUS GARDEN
Kappalur, Madurai,
South India.
Pin : 625008
Phone : 04549 - 208444